# தமிழ்த் தேசம்

தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

2014 சித்திரை (ஏப்ரல்–மே) ஆசிரியர்: **தியாகு** தனிச்சுற்றுக்கு மட்டும் ரூ. **10/-**




## வெல்வோம்
# எடுசெய் நீதி










# வீர வணக்கம் தோழர் மோகன்ராசு!



"உறவில் பரிவு வேண்டும். பிரிவில் துணிவு வேண்டும். இது தோழமையின் இலக்கணம். இந்த இலக்கணத்திற்கு உருவம் கொடுத்து வாழ்ந்தவர் நீங்கள். நீங்கள் பார்த்துப் பார்த்து உருவாக்கிய பாட்டாளிகள் படிப்பகத்தில் இறுதியாக நீங்கள் சிந்திய குருதித் துளிகள் எங்கள் தவறுகளைக் கழுவட்டும். தப்பெண்ணங்களை நீக்கட்டும். மாச்சரியங்களைப் போக்கட்டும். வேற்றுமைகளைக் களையட்டும். எங்கள் புரிதலை வளர்க்கட்டும். ஒற்றுமைக்கு உரமிடட்டும். தமிழர் விடுதலைப் போர் முழக்கம்! சமூகநீதித் தமிழ்த் தேசம்! செவ்வணக்கம் தோழர் மோகன்ராசு!"



# எழுவர் விடுதலைக்காக இன்னும் எவ்வளவு காலம்...

பேரறிவாளன், முருகன், சாந்தன் மூவரையும் பெப்ரவரி 18 நாளிட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் தூக்குத் தண்டனையிலிருந்து மீட்டோம். அடுத்து அவர்களோடு, நளினி, ஜெயக்குமார், ரவிச்சந்திரன், ராபர்ட் பயாஸ் ஆகியோரையும் சேர்த்து எழுவரையும் விடுதலை செய்வதென்று தமிழக அரசு எடுத்த முடிவு சரியானதே. ஆனால் இந்திய அரசு அடாவடித்தனமாக உச்ச நீதிமன்றத் திற்குச் சென்றது. சனவரி 21, பெப்ரவரி 18 தீர்ப்புகள் வாயிலாகக் கொலைத் தண்டனைக்கு எதிராகவும் மனித உரிமைகளுக்கு ஆதரவாகவும் சிறப்பான தீர்ப்புகள் வழங்கிய உச்ச நீதிமன்றம் தமிழர் எழுவரையும் விடுதலை செய்ய தமிழக அரசுக்கு அதிகாரம் இருப்பதை உறுதி செய்யும் என்று எதிர்பார்த்திருந்தோம்.

வழக்கை அரசமைப்புச் சட்ட முழு ஆயத் துக்கு அனுப்பி வைக்கும் முடிவு ஏமாற்ற மளிப்பதாக அமைந்து விட்டது. இதனால் 23 ஆண்டுகளைக் கடந்து சிறையிலிருப்போர் விடுதலை மேலும் கால வரம்பற்றுத் தள்ளிப் போயிருக்கிறது. அரசமைப்புச் சட்ட முழு ஆயத் தீர்ப்பு வரும் போது அதுவும் எழுவர் விடுதலைக்கு ஆதரவாகவே அமையும் என்று உறுதியாக நம்புகிறோம்.

ஆனால் அதுவரை காத்திராமல் அரசமைப்புச் சட்ட உறுப்பு 161இன் படி தமிழக ஆளுனரைக் கொண்டு தமிழக அரசே அவர்களை விடுதலை செய்யலாம். அல்லது நீண்ட காப்பு விடுப்பில் வெளியே விடலாம். பிணை விடுதலை அல்லது காலவரையற்ற காப்பு விடுப்புக் கோரி உச்ச நீதிமன்றத்தையும் அணுகலாம். இதற்கு முற்காட்டுகள் உண்டு. தமிழர் எழுவர் விடுதலைக்காக இன்னும் எவ்வளவு காலம் எம் தமிழ்க் குடும்பம் காத்துக் கிடப்பது? ❖



# தமிழீழத் தமிழர் தமிழ்நாட்டில் அயலாரா?

தமிழ்நாட்டில் ஒன்பது நடுவண் சிறைகளும் எத்தனையோ கிளைச் சிறைகளும் உள்ளன. இந்தச் சிறைகளில் இருப்போர் அங்கு சட்டப்படி அனுப்பப்பட்டு சட்டப்படி அடைத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் என்ப தோடு அவர்களுக்கென்று சிறைச் சட்டப்படி உரிமைகளும் உண்டு.

தமிழ்நாட்டில் 112 இலங்கைத் தமிழ் அகதி முகாம்கள் உள்ளன. இவை தவிர சிறப்பு முகாம்கள் என்ற பெயரில் இரண்டு வதைமுகாம்களும் உள்ளன. எந்தச் சட்டப்படி இந்த அகதி முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளன? எந்தச் சட்டப்படி இந்த முகாம்களில் இருப்பவர்கள் நடத்தப்படுகிறார்கள்? அகதிகள் சட்டப்படி என்று விடை சொல்லத் தோன்றும். ஆனால் இந்திய நாட்டில் அகதிகளுக்கென்று ஒரு சட்டமே இல்லை என்பது அதிர்ச்சிக்குரிய செய்தி.

இந்தியாவின் அரசமைப்புச் சட்டம் உட்பட எந்தச் சட்டத்திலும் அகதி (refugee) என்ற சொல்லே கிடையாது. ஈழத்தமிழ் அகதிகள் மட்டுமல்லர், திபெத்திய அகதிகள், பர்மிய அகதிகள், சக்மா அகதிகள்... இவர்களோடு உள்நாட்டு அகதிகளும் நாட்டின் பல பகுதிகளிலும் வதியழிகிற இந்த நாட்டில் அகதிகளுக்கென்று ஒரு சட்டமே இல்லை என்பது எவ்வளவு கொடிய முரண்பாடு!

அயல்நாட்டு அகதிகளை விரும்பியோ விரும் பாமலோ உள்வாங்குவதோடு ஒவ்வொரு நாளும் பொருளியல் வளர்ச்சியின் பெயரால் சொந்த நாட்டு மக்களையும் அகதிகளாக்கிக் கொண்டிருக்கிற இந்திய அரசு உலக அளவிலான அகதிச் சட்டங் களுக்கும் கட்டுப்படுவதில்லை. ஏனென்றால் 1951ஆம் ஆண்டின் ஜெனிவா ஒப்பந்தத்திலோ 1967ஆம் ஆண்டின் வகைமுறை உடன்படிக்கையிலோ இந்தியா இதுவரை ஒப்பமிடவில்லை. இவற்றில் ஒப்ப மிடுமாறு மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்திய போதிலும் இந்தியா செவிசாய்ப்பதாக இல்லை. ஆனால் அகதிகளுக்கான ஐநா உயர் ஆணையத்தின் செயற்குழுவில் உறுப்பினராகப் பதவி வகிப்பது பற்றி இந்திய அரசுக்கு வெட்கமில்லை. அகதிகளை இந்திய வல்லாதிக்கம் தன் புவிசார் அரசியல் சதுரங் கத்தில் வெறும் பகடைக் காய்களாகவே நகர்த்தவும் வெட்டுக் கொடுக்கவும் செய்கிறது என்பதே மெய்.

மனித உரிமைகளுக்கும் மனித கண்ணி யத்துக்கும் புறம்பான இந்த அணுகுமுறை இந்தியா ஒப்பமிட்டுள்ள 1948ஆம் ஆண்டின் உலகளாவிய மனித உரிமைச் சாற்றுரை உள்ளிட்ட பன்னாட்டு உடன்படிக்கைகளை மீறுவதாகும் என்பதை இந்திய உச்ச நீதிமன்றமே சுட்டிக்காட்டியுள்ளது. மனித உரிமைகளின் கண்ணோட்டத்தில் அகதிகளை இந்தியக் குடிமக்களுக்கு நிகராக நடத்த வேண்டும் என்ற உச்சநீதிமன்றக் கட்டளையையும் இந்திய

அரசோ மாநில அரசாங்கங்களோ மதிக்கவில்லை.

அகதிகளின் உரிமைகள் தொடர்பாக முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி பி.என். பகவதி தலைமையிலான குழுவினர் ஆக்கித் தந்த முன்மாதிரிச் சட்டமும் அரசுக்கோப்பில் ஒட்டடை படிந்து கிடக்கிறது. 2006இல் இந்திய அரசின் சட்டத்துறை முதன்முதலாக உருவாக்கிய சட்ட முன்வடிவும் வடிவாய் முடங்கிக் கிடக்கிறது. அந்தச் சட்ட முன்வடிவும் கூட அகதிகளின் அரசியல் உரிமைகளைப் பற்றி மூச்சும் விடவில்லை.

இந்திய அரசு எல்லா அகதிகளையும் பிச்சைக் காரர்களாக நடத்துகிறது என்றால், ஈழத்தமிழ் அகதி களைக் குற்றவாளிகளாகவே நடத்துகிறது. சிறப்பு முகாம்கள் மட்டுமல்ல, இயல்பான முகாம்களே கூட கியூ பிரிவுக் காவல்துறையின் கட்டுப்பாட்டில்தான் வைக்கப்பட்டுள்ளன. சொந்த நாட்டில் சிங்கள ஆமிக்காரனுக்கு அஞ்சி இந்தியாவில் தஞ்சம் புகுந்தவர்கள் இந்த நாட்டில் கியூ பிரிவுக்கு அஞ்சிக் கிடக்கும் அவலத்தை என்னென்பது?

தமிழீழ அகதிகளைத் தமிழ் நாட்டிலேயே அபலா ராகக் கொண்டு அயல்நாட்டார் சட்டத்தின்படி நடத்துவது தமிழர்களாகிய நம் தன்மானத்துக்கும் இனமானத்துக்கும் விடப்பட்ட அறைகூவல் என்பதை உணர வேண்டும்.

அகதியின் முதல் உரிமை திருப்பி அனுப்பப் படாமல் இருக்கும் உரிமைதான். இறுதி உரிமை தானாகத் திரும்பிச் செல்லும் சூழலைத் தோற்றுவிப் பதற்காக சனநாயக முறையில் போராடும் உரிமைதான். இந்த இரு உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில் வேறென்ன கொடுத்தும், கொடுப்பதாகச் சொல்லியும் என்ன பயன்? அதிமுக தன் தேர்தல் அறிக்கையில் ஓசித் திட்டங்களை ஈழத் தமிழ் அகதிகளுக்கும் விரிவுபடுத்துவதாக வாக்குறுதி அளித்துள்ளது. தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளால் அகதிகள் நலன் என்று இந்த எல்லைக்கு மேல் சிந்திக்க முடியவில்லை என்று பொருள்.

நம்மைப் பொறுத்த வரை ஈழத் தமிழ் ஏதிலியர்க் காகப் போராடுவது மட்டுமன்று, அவர்களையே திரட்டிப் போராடச் செய்வதும் நம் இனக் கடமை எனக் கருதுகிறோம். ஈழ அகதிகளின் உரிமைகளுக் காக மட்டுமல்லாமல், ஈழ மீட்புக்காகவும் ஓர் அரசியல் ஆற்றலாக புலம்பெயர் தமிழர்களைப் போராளித் தமிழர்களாக அணி திரட்டுவோம். ❖


# தமிழ்த் தேசம்

தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

2014 சித்திரை (ஏப்ரல்-மே) ஆசிரியர்: தியாகு தனிச்சுற்றுக்கு மட்டும் ரூ. 10/-

**ஆசிரியர்:**
தியாகு

**ஆசிரியர் குழு:**
நலங்கிள்ளி, இரா. பாலன்

**வடிவமைப்பு:**
சு. கதிரவன்

**அச்சாக்கம்:**
தமிழ்த் தேசம் அச்சுப் பணிகள், சென்னை

---

**வட அமெரிக்கா மற்றும் கனடாவில் எல்லாத் தொடர்புகளுக்கும்:**
தோழர் கோபால்
பத்திரிக்கையாளர், எழுத்தாளர்
**மின்னஞ்சல்:**
arumugamgopal9@gmail.com,
பேச: 0014166667357, +13023573644, +4167669544

---

**வலைத்தளம்:**
www.tamilthesam.org

**தமிழ்த் தேசம் காண:**
www.keetru.com

**முகநூல்:**
தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்
thozharbharathi@gmail.com

**மின்னஞ்சல்:**
samooganeethithamizhthesam@gmail.com

**எல்லாத் தொடர்புகளுக்கும்:**
வே.பாரதி
எம்.சி.ஏ இல்லம் 2 ஆவது மாடி,
120/1, முல்லைத் தெரு, பெரியார் பாதை,
சூளைமேடு, சென்னை-94
thozharbharathi@gmail.com

| | | |
|---|---|---|
| ஓரிதழ் | : | ரூ. 10 |
| ஓராண்டு | : | ரூ. 120 |
| ஆறாண்டு | : | ரூ. 600 |
| வாழ்நாள் | : | ரூ. 1200 |



# ஐநா மனித உரிமை மன்றத் தீர்மானமும் அதைத் தொடர்ந்தும்...

## ஓரடி முன்னே...

– தியாகு

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம், அதற்கான ஆதரவுப் போராட்டம் இப்போது செய்ய வேண்டியது என்ன? இந்த வினாவுக்கு விடைகாண நாம் கணக்கில் கொள்ளவேண்டிய சில மெய்க்கூறுகள் உள்ளன.

தமிழீழ மக்களுக்கு எதிரான இன அழிப்புப் போர் 2009 மே 16, 17, 18 நாட்களில் முள்ளிவாய்க்காலில் கொடிய உச்சம் கண்டது. இந்த முழுப் பேரழிவில் பல்லாயிரம் தமிழ் உயிர்கள் கொத்துக் கொத்தாய் அழிக்கப்பட்டதோடு, ஈழ தேசத்தின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டமும் அடியோடு நசுக்கப்பட்டது

சிறிலங்காவின் இறுக்கமான ஒற்றையாட்சி அரசமைப்பு, சிங்கள மக்களிடம் காணப்படும் பேரினவாத மனப்போக்கு ஆகியவற்றோடு தமிழீழப் பகுதிகளில் நிலவும் இராணுவ மேலாதிக்கமும் சேர்ந்து கொண்டுள்ள நிலையில், தமிழீழ மக்கள் தாயகத்தில் தொடர்ந்து போராடுவதற்கான சனநாயக வெளியும் அற்றுப் போயுள்ளது, அல்லது பெரிதும் குறுகியுள்ளது.

முள்ளிவாய்க்கால் பேரழிவு தமிழீழ விடுதலைக்கான வரலாற்றுத் தேவையை ஒழித்து விடவோ குறைத்து விடவோ இல்லை, பார்க்கப் போனால் அத்தேவையைப் பன்மடங்கு உயர்த்தியே உள்ளது. மறுபுறம் விடுதலைக்காகப் போராடும் திறனை அது பெரும்பாலும் குலைத்துவிட்டது. இந்த முரண்பாட்டுக்கு எவ்வாறு தீர்வு காணப் போகிறோம் என்பதைப் பொறுத்ததே ஈழ

மண்ணில் மீண்டும் ஒரு விடுதலைப் போராட்டம் வளர்வதும் வளராமல் போவதும். அதாவது தாயகம்வாழ் தமிழர்கள் மீண்டெழுந்து போராடத் துணை செய்வது எப்படி? என்ற கேள்விக்குக் கோட்பாட்டளவிலும் நடைமுறையளவிலும் விடை காண வேண்டும்.

## குறிக்கோள் என்ன?

தாயகத்துக்கு வெளியே தமிழகத்திலும் புலம்பெயர் உலகத்திலும் நடத்த வேண்டிய போராட்டங்களின் குறிக்கோள் தாயகத் தமிழர்கள் போராடுவதற்கான சனநாயக வெளியை உண்டாக்குவதும் விரிவாக்குவதுமே. இதற்குக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்வதே.

ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஈடேற்றம் இறுதி நோக்கில் தமிழீழ மக்களைச் சார்ந்ததே தவிர, ஐக்கிய நாடுகள் அமைப்பு போன்ற பன்னாட்டு மன்றங்களைச் சார்ந்ததன்று. அதேபோது இன்றைய உலகில் நிலவும் அரசியல், அரசுறவியல் பகைப் புலத்தில்தான் இந்தப் போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளது. நாடுகளிடையிலான ஏற்றத்தாழ்வை உலக ஒழுங்காகக் கொண்ட இன்றைய பன்னாட்டு அரங்கில் இடம்பெற்று வரும் நிகழ்ச்சிப் போக்குகளைக் கண்டு கொள்ளமல் செயலாற்றுவது போராட்டத்தின் வளர்ச்சிக்கு உதவாது. அரசுகள் தத்தமது சொந்த நலனையும் அதையொட்டிய புவிசார்





அரசியலையும் முன்னிறுத்திச் செயல்படும் பன்னாட்டு அரங்கில் வினையும் எதிர் வினையும் ஆற்றாமல் விடுதலைப் போராட்டத்துக்குத் துணை சேர்க்க இயலாது.

## மூன்று கோரிக்கைகள்

இந்த அடிப்படையில்தான் 2009 மே தொடங்கி நாளது வரையிலுமான ஐநா மனித உரிமை மன்ற விவாதங்களையும் தீர்மானங்களையும் பிற செயற்பாடுகளையும் பார்க்க வேண்டும் எனக் கருதுகிறோம். பன்னாட்டு அரங்கில் உலகத் தமிழர்களின் ஒருமனதான அடிப்படைக் கோரிக்கைகள் மூன்று:

1) இனக்கொலை, போர்க்குற்றங்கள், மானிட விரோதக் குற்றங்கள் குறித்துத் தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு நடத்தப்பட வேண்டும்.

2) தொடர்ந்து வரும் கட்டமைப்பியல் இனக்கொலையைத் தடுத்து நிறுத்த ஒரு பன்னாட்டுப் பொறியமைவை ஏற்படுத்த வேண்டும்.

3) தமிழீழத்தின் வருங்காலம் குறித்து முடிவு காணத் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் ஈழத் தமிழரிடம் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

கடந்த 2011இல் ஐநா பொதுச் செயலரின் மூவல்லுனர் குழு அறிக்கை அளித்தது முதற்கொண்டே, நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும், உலகத் தமிழர் பேரவையும்,

பிரித்தானியத் தமிழர் பேரவை, கனடியத் தமிழர் பேரவை போன்ற அந்தந்த நாட்டுக் குரிய தமிழர் அமைப்புகளும் ஒரே குரலில் இந்தக் கோரிக்கைகளை எழுப்பி வருகின்றன. தமிழ்நாட்டின் தமிழ்த் தேசிய அமைப்புகள் உள்ளிட்ட தமிழீழ ஆதரவு அமைப்புகளும் இதே கோரிக்கைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றன. ஆகவே பன்னாட்டு அரங்கில் இவை உலகத் தமிழர்களின் ஒருமனதான கோரிக்கைகள் என்பதில் ஐயமில்லை. ஒருசில அமைப்புகளுக்குக் கூடுதலாகச் சில கோரிக்கைகள் இருக்கக் கூடும். காட்டாக, சிறிலங்கா அரசு செய்த குற்றங்களுக்கு ஐநா தன்னிடமுள்ள சான்றுகளை வெளியிட வேண்டும் என்று நா.க.த.அ. கோருகிறது. யாருக்கு என்ன கோரிக்கை இருப்பினும் அது மேற்கண்ட மூன்று அடிப்படைக் கோரிக்கைகளில் எதற்கும் முரணன்று.

இந்த மூன்று கோரிக்கைகளையும் பன்னாட்டுச் சமுதாயத்தின் சார்பில் ஐநா உடனே ஏற்றுக்கொள்ள வாய்ப்பில்லை என்பது நமக்கு நன்கு தெரியும். இது கடினமானதொரு நீண்ட பயணம். ஏனென்றால் உலகில் தமிழர்களுக்கென்று இறைமையுள்ள அரசு ஏதுமில்லை என்ற நிலையில், ஐநாவிலோ பிற பன்னாட்டு அரங்குகளிலோ நமக்கென்று நாமே குரல் கொடுக்க வழியில்லை.

## தமிழகம் என்ன செய்யும்?

தமிழீழம் போலவே தமிழ்நாடும் அடிமைத் தேசமாகவே இருக்கிறது என்பதை ஈழத்தமிழர் இன அழிப்பு தமிழகத் தமிழர்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் வலிக்க வலிக்க உணர்த்தி விட்டது. நமக்காக இந்தியா குரல் கொடுக்கும் என்று நம்பிக் கொண்டிருந்தவர்கள் ஏமாந்துதான் போனார்கள். ஆனால் உலகில் தமிழர்களின் முதற்பெரும் தாயகம் என்ற முறையில் தமிழகத்தால் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து உலக அரங்கில் தமிழர் நலனுக்காக இயன்ற வரை பேச வைக்க முடியும் என்பது நம் பட்டறிவு.

இரண்டாவதாக, தாயகத்தில் படைவலிமையையும் அரசியல் வலிமையையும் பறிகொடுத்தாலும் உலகத்தில் முன்னெப்போதுமில்லாத அற வலிமையோடு நிற்கிறோம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நடந்து முடிந்த முழுப்பேரழிவும் தொடர்ந்து வரும் இன அழிப்பும் நமது போராட்டத்தின் நியாயத்தை மலையளவு உயர்த்தியுள்ளன. சிங்களப் பேரிவாதம் எவ்வளவுதான் முயன்றாலும் இனியும் நம் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று முத்திரையிட்டுத் தனிமைப்படுத்தி ஒடுக்க முடியாது.

## ஈடுசெய் நீதி

மொழி, புலம், பண்பாடு, பொருளியல், வரலாறு என்பனவற்றின் அடிப்படையில், ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனம், தமிழீழம் ஒரு தேசம், அதற்கென்று இறைமையுரிமை உண்டு, தன்தீர்வுரிமை உண்டு. இவை இயல்பாய் அமைந்த உரிமைகள் – பிறப்புரிமை – என்பதற்கு மேல் இப்போது இனக்கொலை, போர்க் குற்றங்கள், மானிடவிரோதக் குற்றங்களுக்கு இலக்காகி வதைபட்ட இனம் என்ற வகையில் இதற்கெல்லாம் பரிகாரமாக ஈடுசெய் நீதி (Remedial Justice), ஈடுசெய் இறைமை (Remedial Sovereignty), ஈடுசெய் தன்தீர்வுரிமை (Remedial Right to Self-determination) கோரிப் போராடும் வழியும் நமக்குத் திறந்துள்ளது. சுருங்கச் சொல்லின், பன்னாட்டு அரங்கில் நமது போராட்டம் ஈடுசெய் நீதிக்கான போராட்டமும் ஆகும் என்பதைப் புரிந்து கொண்டு அதற்குப் பொருத்தமான அரசியல், அரசுறவியல் வழிகளைக் கையாள வேண்டும்.


இரண்டாம் உலகப் போரில் இனக் கொலைக்கு இலக்கான யூதர்களுக்கு ஒரு வகையில் உலகம் வழங்கிய ஈடுசெய் நீதிதான் இசுரேல் என்ற உண்மையை – வேறு எவ்வகையிலும் ஈழத்தையும் இஸ்ரேலையும் ஒப்பிடாமலே – நினைவில் கொள்ளலாம்.

## போராட்டத்தின் வருங்காலம்

ஈடுசெய் நீதிக்கான உலகத் தமிழர்களின்

போராட்டம் மட்டுமே அதனளவில் தமிழீழ விடுதலையைப் பெற்றுத் தந்து விடும் என்று நாம் கருதவில்லை. நமது இந்தப் போராட்டம் சிங்களப் பாசிசப் பகைவனைத் தனிமைப் படுத்தவும், சிங்களப் பேரினவாதத்தைச் சோர் வுறச் செய்யவும், தமிழ் மக்களுக்கு ஊக்கமளிக் கவும் பயன்படுவதன் மூலம் தாயகத்தில் மக்கள் போராடுவதற்கான சனநாயக வெளியை விரிவாக்கும். அங்கு அப்போராட்டம் எவ்வாறெல்லாம் வடிவெடுத்து வளர்ந்து செல்லும் என்பதை இப்போதே அறுதியிட்டுச் சொல்ல முடியாது. இசுரேலின் வன்பிடிப்பில் இருந்தபடி யோர்தான் மேற்குக் கரையிலும் காசா முனையிலும் பாலத்தீன மக்கள் நடத்திய இண்டிஃபாடா போல் போர்க்குணம் வாய்ந்த பெருந்திரள் போராட்டங்கள் வெடிக்க வாய்ப்புண்டு. பொறுத்திருந்து பார்ப்போம், போராடிப் பார்ப்போம்.

முள்ளிவாய்க்கால் முடிந்த கையோடு பன்னாட்டு அரங்கில் நம் ஈடுசெய் நீதிக்கான போராட்டமும் தொடங்கி விட்டது. இது வரை நடந்தவற்றை முழுமையாக விரித்துச் சொல்லத் தேவையில்லை எனக் கருதுகிறேன். சுருக்கமாகப் பார்ப்போம்.



## செனிவா 2009

செனிவாவில் 2009 மே இறுதியில் கூட்டப் பட்ட மனித உரிமை மன்றச் சிறப்புக் கூட்டத் தில் என்ன நடந்தது என்பதை நன்கறிவோம். இரண்டு தீர்மானங்கள் முன்மொழியப்பட்டன. இரண்டில் எதுவும் தமிழர்களுக்கு எவ்வகை யிலும் பயன்படக் கூடியது அன்று. ஒன்று, மனித உரிமை மீறல்கள் குறித்து சிறிலங்கா அரசே விசாரணை நடத்தட்டும் என்றது. இது தோற்றுப் போனது. மற்றொன்று பயங்கரவாத எதிர்ப்புப் போரில் வென்ற சிறிலங்காவைப் பாராட்டித் துணை செய்யக் கேட்டது. இது வெற்றிகரமாக நிறைவேறியது. இரு தீர் மானங்கள் மீதுமான வாக்கெடுப்பில் சிறி லங்கா மகிழும் வண்ணம் இந்தியா நடந்து கொண்டது.

கொடிய இன அழிப்புக்கு ஆளான தமிழர் களுக்கு ஆறுதல் சொல்லக் கூட உலகில் ஓர் அரசுமில்லை என்ற அவல நிலையிலிருந்து மீள வேண்டிய அவசரத் தேவை இருந்தது. அதற்கும் மேலே நீதிக்கான போராட்டத்தை முன்னெடுத்தாக வேண்டும். இந்தத் தேவையை நிறைவு செய்யப் புதிய வடிவில் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தோன்றின. நம் பார்வையில் இவற்றுள் முதன்மையானது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் (TGTE). உலகத் தமிழர் பேரவை (GTF), பிரித்தானியத் தமிழர் பேரவை, கனடியத் தமிழர் பேரவை மற்றும் அந்தந்த நாடுகளுக்குரிய தமிழர் அமைப்புகளும் குறிப்பிடத்தக்க பங்காற்றி யுள்ளன. இந்த அமைப்புகள் யாவும் முனைந்து களமிறங்கி உலகின் முன் உண்மைகளை அம்மணமாய் அணிவகுக்கச் செய்தன.

லண்டன் சேனல் 4 வெளியிட்ட ஒளிப் படங்களும் ஆவணப் படங்களும், இவற்றை இயக்கிய கலம் மக்ரேயும், பிரியம்வதா போன்ற இந்திய ஊடகர்களும் இவ்வகையில் ஆற்றியுள்ள பங்கு மகத்தானது. டப்ளின் நகரில் கூடிய நிரந்தர மக்கள் தீர்ப்பாயமும் சாட்சிகளை விசாரித்து, சான்றுகளை அலசி, சிறிலங்கா அரசு போர்க் குற்றங்களும் மானிட விரோதக் குற்றங்களும் புரிந்திருப்பதாகத் தீர்ப்பளித்தது. இனக்கொலைக் குற்றத்தை மெய்ப்பிக்கத் தன்னிடம் உள்ள தரவுகள் போதுமானவை அல்ல என்றும் கூறியது,

சாட்சிகள் இல்லாத போரை நடத்தி விட்டதாக இறுமாந்திருந்த இராசபட்சே கும்பலுக்கு அது சான்றுகள் இல்லாத போரன்று என்பதை இவை யாவும் உணர்த்

தின. ஐநா பொதுச் செயலர் தமக்கு அறிவுரை சொல்வதற்காக அமர்த்திய – மார்சுகி தருஸ்மன், யாஸ்மின் சூக்கா, ஸ்டீவ் ராட்னர் அடங்கிய – மூவல்லுனர் குழு அறிக்கையும் ... இலங்கை அரசு பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்களை மீறி போர்க் குற்றங் களும், பன்னாட்டு மனிதநேயச் சட்டங்களை மீறி மானிட விரோதக் குற்றங்களும் புரிந் திருப்பதை நம்பும்படியான குற்றச்சாட்டுகள் (credible allegations) என்று வகைப்படுத்தியது.

## செனிவா 2012

பிறகு, 2012 மார்ச்சில் ஐநா மனித உரிமை மன்றத்தில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா ஒரு தீர்மானம் கொண்டுவரப் போவதாகச் செய்தி வரத் தொடங்கியவுடனேயே 'இலங் கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்' என்று தமிழ் நாட்டில் அவசரமாகச் சிலர் குரல் கொடுத் தனர். அப்போது நாம் 'அவசரம் வேண்டாம், தீர்மான உரை வரட்டும், படித்து விட்டு முடிவு செய்யலாம்' என்று எச்சரித்தோம். முடிவில், நம் மூன்று கோரிக்கைகளுக்கும் நேராகவோ சுற்றடியாகவோ இடமளிக்காத அமெரிக்கத் தீர்மானம் சிங்கள அரசுக்கு எதிரானதோ தமிழர்களுக்கு ஆதரவானதோ அல்ல என்பது தெளிவாயிற்று.

இராசபட்சே அரசாங்கம் உலகை ஏய்ப் பதற்காகத் தனக்குத் தானே அமைத்துக் கொண்ட படிப்பினைகள்–நல்லிணக்க ஆணையத்தின் (LLRC) அறிக்கையை வலி யுறுத்துவதாகவே அமெரிக்கத் தீர்மானம் அமைந்தது, மூவல்லுனர் குழு அறிக்கை பற்றி அதில் ஒரு சொல் கூட இல்லை. ஆனால் இந்தத் தீர்மானத்தையும் கூட சிறிலங்கா ஏற்பதாக இல்லை. இந்தியா பெரும் இழுத் தடிப்புக்குப் பின் தீர்மானத்தை ஆதரித்தது என்றாலும் அதற்கு முன்பே தன்னாலியன்ற வரை அதை நீர்க்கச் செய்து விட்டது. இலங்கை அரசின் ஒப்புதலுடனேயே ஐநா அதிகாரிகள் இலங்கைக்கு ஆலோசனையும் செய்நுட்ப உதவியும் வழங்கலாம் என்ற திருத்தம் இந்தியாவால் நுழைக்கப்பட்டதே. தமிழர்களைப் பொறுத்த வரை கவைக்குதவாத தீர்மானம் என்றாலும், அதன் மீதான வாக்கெடுப்பில் சிங்களம் அடைந்த தோல்வி நமக்கு மகிழ்ச்சி அளித்தது. ஏனென்றால் பன்னாட்டு அரங்கில் சிறிலங்கா பெற்ற முதல் தோல்வி இதுவே.

## செனிவா 2013

அடுத்து வந்த 2013 தீர்மானத்தின் கதையும் கிட்டத்தட்ட இதுவேதான். ஆனால் தீர்மானம் வருவதற்கு முன்பே தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வுக்கான குரல் வலுத்து விட்டது. ஐநா மனித உரிமை மன்ற ஆணையரே இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார். பன்னாட்டு நெருக்கடிக் குழு, பன்னாட்டுப் பொதுமன்னிப்பு அவை, மனித உரிமைக் கண்காணிப்பகம் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகளும் இதே கோரிக்கையை வலியுறுத்தின. அமெரிக்காவே இந்தக் கோரிக்கையைக் கருத்தில் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால் மனித உரிமை மன்றத் தீர்மானத்தில் நேரடியாகவோ சுற்றடியாகவோ இதற்கான வழிவகை ஏதுமில்லை.

தமிழ்நாட்டில் இம்முறை மாணவர் போராட்டம் தெளிவான கோரிக்கைகளை முன்வைத்து நடைபெற்றது. அமெரிக்கத் தீர்மானத்தால் பயனில்லை, சரியான கோரிக்கைகளை (தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு, பொது வாக்கெடுப்பு) உள்ளடக்கிய ஒரு தீர்மானத்தை இந்தியாவே முன்மொழிய வேண்டும் எனக் கோரினோம். தமிழக மாணவர்கள்–மக்கள் போராட்டங்களின் அழுத்தத்தால் இந்தியா இறுதி வாக்கெடுப்பில் சிறிலங்காவுக்கு எதிரணியில் நிற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இம்முறையும் இந்தியா அமெரிக்கத் தீர்மானத்தை நீர்க்கச் செய்து விட்டுத் தான் ஆதரித்தது. பல்வேறு துறை சார்ந்த ஐநா அதிகாரிகளும் வல்லுனர்களும் இலங்கை சென்றுவர தடையற்ற அனுமதி வழங்க வேண்டும் என்ற கட்டளையை நீக்கியதும், மனித உரிமை மன்றம் 2013 செப்டெம்பரில் அறிக்கை தாக்கல் செய்ய

வேண்டும் என்பதை 2014 மார்ச்சு என்று மாற்றியதும் இந்தியாவின் கைங்கரியங்களே. இம்முறையும் தமிழர்களின் கோரிக்கை எதுவும் ஏற்கப்படவில்லை என்பதால் நமக்கு வெற்றியில்லை. ஆனால் சிங்களம் மீண்டும் தோற்றது என்ற அளவில் மகிழ்ச்சி அடைந் தோம்.

### சிறிலங்காவின் தனிமைப்பாடு

ஐநா மனித உரிமை மன்றத்தின் 2012, 2013 தீர்மானங்கள் சாரத்தில் ஒரேவிதமானவை என்றாலும், இரண்டுக்கும் இடைப்பட்ட நுட்பமான வேறுபாடுகளும், வாக்கெடுப்பில் நிகழ்ந்த மாற்றங்களும் ஈடுசெய் நீதிக்கான போராட்டத்தில் குறுவுத்திநோக்கில் முக்கிய மானவை (tactically important). நம் போராட் டங்கள் உலகில் எவ்விதத் தாக்கமும் ஏற்படுத் தாமல் போய் விடவில்லை என்பதை உணர்ந்து கொள்வதோடு, அடுத்தடுத்த போராட்ட உத்திகளை வகுக்கவும் இவை நமக்குத் துணைசெய்யும்.

தமிழர்களின் அடிப்படைக் கோரிக்கைகள் என்ற கோணத்திலிருந்து பார்த்தால் ஐநா மனித உரிமை மன்றத்தின் 2009, 2012, 2013 தீர்மானங்களின் உள்ளடக்கத்தில் பெரிதாக வேறுபாடில்லைதான். ஆனாலும் இவற்றின் மீதான வாக்கெடுப்புக் கணக்கு தமிழர்களின் உறுதியான முன்னெடுப்புகளால் உலக அரங்கில் சிங்களப் பேரினவாதம் மென்மேலும் தனிமைப்படுவதைக் காட்டும் குறிமுள்ளாகும். இலங்கையை எதிர்த்தும் ஆதரித்தும் வாக்களித்த நாடுகள் 2009இல் 13/26, 2012இல் 23/15, 2013இல் 25/13. மனித உரிமை மன்ற உறுப்பு நாடுகளில் ஏற்படக் கூடிய மாற்றத்தைக் கணக்கில் கொண்டால் சிறிலங்காவின் தனிமைப்பாடு இன்னுங்கூட துலக்கமாகும்.

### நவநீதம்பிள்ளை அறிக்கையும் காமன்வெல்த்தும்

ஐநா மனித உரிமை மன்றத்தின் 2013 அமர்வுக்கும் 2014 அமர்வுக்குமிடையில் இரு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதலாவதாக, மனித உரிமை மன்ற ஆணையர் நவநீதம்பிள்ளை நேரில் இலங்கை சென்று பார்வையிட்டார். அவர் கொழும்புவிலேயே ஸ்ரீலங்கா அரசைக் கண்டித்து அளித்த பேட்டி, பிறகு மனித உரிமை மன்றத்துக்கு வாய்மொழியாகவும் எழுத்துவடிவிலும் அளித்த அறிக்கை... எல்லாமே தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு உடனே தேவை என்ற கோரிக்கைக்கு வலுச் சேர்த்தன.

இரண்டாவதாக, 2013 நவம்பரில் கொழும்புவில் காமன்வெல்த் அரசாங்கத் தலைவர்கள் சந்திப்பு நடைபெற்றது. முதலில் கனடாவும் பிறகு மௌரிசசும் இம்மாநாட்டைப் புறக்கணிப்பதாக அறிவித்தன. **இலங்கையில் காமன்வெல்த்–எதிர்ப்பியக்கத்தின்** சார்பில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர் ஆகிய நான் மேற் கொண்ட 15 நாள் பட்டினிப் போராட்டம், தமிழக மாணவர்–மக்கள்–அரசியல் இயக்கங் களின் போராட்டங்கள், சட்டப் பேரவைத் தீர்மானம்... யாவும் சேர்ந்த தமிழ்நாட்டின் போராட்ட அழுத்தத்தால் இந்தியத் தலைமை அமைச்சர் கொழும்பு செல்ல விடாமல் தடுக்கப்பட்டார். பிரித்தானியத் தலைமை அமைச்சர் கேமரூன் தமிழர்களின் எதிர்ப்பை யும் எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் எதிர்ப்பையும் மீறி காமன்வெல்த் சந்திப்பில் கலந்து கொண்ட போதிலும் அவரது யாழ் பயணமும், பிறகு கொழும்புவில் அவர் தெரி வித்த கருத்துகளும் பன்னாட்டுப் புலனாய்வுக் கோரிக்கைக்கு வலுச் சேர்த்தன.

### செனிவா 2014 நோக்கி...

ஆக இம்முறை 2014 மார்ச்சில் ஐநா மனித உரிமை மன்றம் கூடும் போது உருப்படியாக ஒரு முன்னேற்றம் இருக்கும் என்று உலகத் தமிழர்கள் எதிர்பார்த்தார்கள். நாமும் எதிர்பார்த்தோம். நம் மூன்று அடிப்படைக் கோரிக்கைகளும் உடனே ஏற்கப்பட்டு விடும் என்று நம்பவில்லை. அவை நியாயமற்றவை என்பதாலோ நடைமுறைப்படுத்த முடி யாதவை என்பதாலோ அல்ல, அரசுகளை

மட்டுமே உறுப்புகளாகக் கொண்ட ஒரு மன்றத்தில், மனித உரிமைக் கோரிக்கைகளோடு புவிசார் அரசியல் நலன்களும் பின்னிக் கிடக் கையில், நமக்கு எந்த அளவு வாய்ப்பிருக்கும் என்று அறுதியிட்டுச் சொல்வதற்கில்லை.

தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வுக்கு வழிவகை செய்யும் தீர்மானம் நிறைவேறும் வாய்ப்பு தென்பட்டது. மற்ற இரு கோரிக்கை களுக்கும் அந்த அளவுக்கு வாய்ப்பிருப்பது போல் தெரியவில்லை. புலனாய்வும் கூட எந்தெந்தக் குற்றங்கள் மீது? இனக்கொலைக் குற்றம், போர்க்குற்றங்கள், மானிட விரோதக் குற்றங்கள் ஆகிய அனைத்தின் மீதும் தற்சார் பான பன்னாட்டுப் புலனாய்வு என்பதுதான் நம் உறுதியான கோரிக்கை. ஆனால் மூவல்லுனர் குழு அறிக்கையின் தொடர்ச்சியாகத்தான் புலனாய்வு என்றால் முதலிலேயே இனக் கொலைக் குற்றம் இடம்பெற வாய்ப்பில்லை. ஆனால் போர்க் குற்றங்களும் மானிட விரோதக் குற்றங்களும் யாரால் யாருக்கெதிராக இழைக்கப்பட்டவை என்பதையும், இந்தக் குற்றங்களின் வரலாற்றுப் பின்னணியையும் உரிய சான்றுகளோடு எடுத்துக்காட்டி, குற்றவாளிகளின் இனக்கொலை உள்நோக்கத் தையும் மெய்ப்பிக்க முடியுமானால், இந்தப் புலனாய்வு இனக்கொலைக் குற்றச்சாட்டுக்கான புலனாய்வாகவும் விரிவடையும்.

## போர்க்குற்றங்களும் இனக்கொலையும்

ஆனால் எடுத்த எடுப்பிலேயே இனக் கொலைக் குற்றத்துக்கான புலனாய்வுக்குக் குறைவான எதையும் ஏற்க மாட்டோம் என்று சொல்வதற்கான அடிப்படை வலு நமக் கில்லை. மூவல்லுனர் குழு அறிக்கையும் சரி, மனித உரிமை ஆணையர் நவிநீதம் பிள்ளை அறிக்கையும் சரி, இனக்கொலைக் குற்றம் என்று வரையறுக்கவில்லை. இனக்கொலை இல்லை என்று சொல்வதாகவும் இதற்குப் பொருளில்லை.

நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் பிறேமன் அறிக்கை மட்டுமே இனக்கொலை என்று வரையறுத்தது. ஆனால் ஐநா பார்வையிலும்




உறுப்பரசுகளின் பார்வையிலும் அது அதி காரப்பற்றுள்ள அறிக்கை ஆகாது. பிறேமன் அறிக்கையின் முக்கியத்துவத்தை நாம் குறைத்துப் பார்க்கவில்லை. இனக்கொலை என்ற அதன் வரையறுப்பும் இந்தக் குற்றத்தில் வல்லரசுகளின் பங்கு பற்றிய அதன் கண்டறி தலும் நம் அரசியல் பரப்புரைக்கும் இயக் கத்துக்கும் பயன்வாய்ந்தவை, ஆனால் ஐநா மனித உரிமை மன்றம் இனக்கொலைக் குற்றச் சாட்டைப் புலனாய்வுக்கு ஏற்றுக்கொள்ள அது போதுமானதன்று. இனக்கொலை, போர்க் குற்றம், மானிட விரோதக் குற்றம் மூன்றின் மீதும் தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு என்று தொடர்ந்து கோரிக்கை வைக்கும் போதே, இனக்கொலையை சேர்க்கா விட்டால் இந்தப் புலனாய்வு அறவே வீண் என்று நாம் கருதவில்லை.

'போர்க் குற்றங்கள் என்று சொல்வதே தவறு, இனக்கொலை என்றுதான் சொல்ல வேண்டும்' என்பது சில நண்பர்களின் வாதம். ஒவ்வொரு போர்க் குற்றமும் அல்லது ஒவ் வொரு மானிட விரோதக் குற்றமும் அதனள வில் இனக்கொலை ஆகாதுதான். ஆனால் போர்க் குற்றங்களும் மானிட விரோதக் குற்றங்களும் நடந்தன என்று சொல்வதே இனக்கொலையை மறைப்பதோ மறுப்பதோ ஆகாது.

போர்க் குற்றங்களையும் மானிட விரோதக் குற்றங்களையும் மெய்ப்பிப்பதுடன் அவற்றுக் கான உள்நோக்கத்தையும் மெய்ப்பிக்கும் போது அதுவே இனக்கொலையை மெய்ப் பிக்கும் வழி. போர்க் குற்றங்களும் மானிட விரோதக் குற்றங்களும் இனக்கொலைக்

குற்றத்தின் கூறுகளே.

இனக்கொலையைப் போர்க்குற்றம் என்று குறுக்கிப் பார்க்கக் கூடாதுதான். ஆனால் போர்க்குற்றங்களைப் போர்க்குற்றங்கள் என்று சொல்வதே இனக்கொலையை மறுப்பதாகாது. முழுமையாகப் பார்க்குமிடத்து நடந்தது போர்க் குற்றமல்ல, இனக்கொலை தான். இந்த இனக்கொலையின் கூறுகளாக நடந்தவையே போர்க் குற்றங்களும் மானிட விரோதக் குற்றங்களும். பன்னாட்டுச் சட்டங்களின் படி இனக்கொலைக் குற்றம், போர்க் குற்றம், மானிடவிரோதக் குற்றம் ஒவ்வொன்றுமே தண்டனைக்குரிய குற்றம்தான்.

'போர்க்குற்றம் என்று சொல்லாதே, போரே குற்றம்' என்பதெல்லாம் வெறும் சொற்சிலம்பமே தவிர, கொடிய இனவழிப்புக்கு ஆளான மக்களுக்குரிய ஈடுசெய் நீதிக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு ஊறுதான் செய்யும், உதவாது.

## கோரிக்கைகளின் இடைத்தொடர்பு

தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு, பாதுகாப்புப் பொறியமைவு, பொது வாக்கெடுப்பு – இந்த மூன்று கோரிக்கைகளுக்குமான இடைத்தொடர்பைப் புரிந்து கொண்டால் தான், இவற்றில் ஒன்று குறித்து ஏற்படுகிற சிறு முன்னேற்றமும் கூட முழுப் போராட்டத்தின் வளர்ச்சியிலும் தாக்கங்கொள்ளும் என்பதை உணர முடியும். இல்லாவிட்டால் இந்தக் கோரிக்கைகளே கூட ஒன்றுக்கொன்று முரண்படுவது போலத் தெரியக் கூடும்.

நீதி விசாரணை வேறு, புலன் விசாரணை வேறு, வழக்கு விசாரணை வேறு. வினவல், ஆய்தல். உசாவல் என்று வகைப்படுத்தலாம். மூவல்லுனர் குழு நடத்தியது ஒரு வகையில் நீதி விசாரணை, அடுத்து நடைபெற வேண்டியது புலன் விசாரணை அல்லது புலனாய்வு. இது வெற்றிகரமாக முடிந்தால் இறுதியாகப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்திலோ, இதற்கென அமைக்கப்படும் தனித் தீர்ப்பாயத்திலோ வழக்கு உசாவல் நடைபெற்றுத் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

## குற்றவியல் நீதியும் அரசியல் நீதியும்

இந்தச் செயல்வழி யாவும் வரிசையாகவும் சரளமாகவும் நடந்தேறி விடும் என்று நாம் நம்பிக் கொண்டிருக்கவில்லை. நமது சட்ட முயற்சியின் திசைவழியைச் சுட்டுகிறோம், அவ்வளவுதான். நமக்கு எது முக்கியமென்றால், இந்தச் செயல்வழி சிங்களத்தைத் தனிமைப் படுத்தவும், தமிழர்களுக்கு ஊக்கம் தந்து அவர்களின் அற வலுவை அரசியல் வலுவாக மாற்றவும் எந்த அளவுக்குப் பயன்படும் என்பதே. குற்றவியல் நீதிக்கான போராட்டத்தின் ஊடாக அரசியல் நீதிக்கான போராட்டத்தை வளர்த்தெடுப்பதே நம் குறி.

நீதி விசாரணையைக் குற்றக் களங்களுக்குச் செல்லாமலே கூட நடத்தி முடிக்க வாய்ப்புண்டு. ஆனால் புலனாய்வை அப்படி நடத்துதல் அரிது. புலனாய்வுக் குழுவினர் இலங்கைக்குள் அனுமதிக்கப்படுவார்களா? அனுமதிக்கப்பட்டாலும் இராணுவ மேலாதிக்கம் நீடிக்கும் போது அச்சமற்ற சூழலில் முறையான புலனாய்வுக்கு ஒத்துழைக்க மக்கள் முன்வருவார்களா? இந்த வினாக்களுக்கு விடையாக சிங்கள இராணுவம் வெளியேற்றப்பட்டு (அல்லது எப்படியும் முகாம்களில் முடக்கி வைக்கப்பட்டு) பன்னாட்டுப் பாதுகாப்புப் பொறியமைவு ஏற்படுத்த வேண்டிய அவசரத் தேவை வலுப்பெறும். புலனாய்வு முடிந்த பின் பன்னாட்டுப் பாதுகாப்புப் பொறியமைவு நிரந்தரமாக நீடிக்க இயலாது என்ற நிலையில் தமிழீழத்தின் வருங்காலம் பற்றிய பொது வாக்கெடுப்புக் கோரிக்கை வலுப்பெறும். இவையெல்லாம் தாமாகவே நடைபெறும் என்ற மயக்கம் நமக்கில்லை. விழிப்புடனிருந்து இந்தச் செயல்வழியில் முன்னேற்றம் ஏற்பட அடிதோறும் அடிதோறும் போராட வேண்டிய கடமை நமக்குள்ளது.

இந்தத் தொலைநோக்குடன்தான் ஐநா மனித உரிமை மன்றக் கூட்டத்தை எதிர் நோக்கினோம். இனக்கொலை, போர்க்

குற்றங்கள், மானிட விரோதக் குற்றங்கள் மீது தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு, பொது வாக்கெடுப்பு உள்ளிட்ட கோரிக்கை களை உள்ளடக்கிய தீர்மானத்தை இந்தியாவே தனித்தோ பிற நாடுகளுடன் சேர்ந்தோ முன் மொழிய வேண்டும் என்பது நம் கோரிக்கை, அல்லது வேறு நாடுகள் முன்மொழியும் தீர்மானத்தில் பொருத்தமான திருத்தம் கொண்டுவரலாம். இதற்கு வாய்ப்பில்லை என்று தெரிந்தபின் அமெரிக்கா கொண்டுவரப் போவதாகச் சொல்லப்பட்ட தீர்மானத்தின் மீது கவனம் செலுத்தினோம்.

## தீர்மானத்தின் குறைகள்

அமெரிக்கா, பிரித்தானியா, மௌரிசஸ், மாசிடோனியா, மாண்டிநெக்ரோ... ஆகிய ஐந்து நாடுகள் முன்மொழிவதாக இருந்த தீர்மானத்தின் முதல் வரைவு இணையத்தில் இடம் பெற்றவுடனே கவனமாகப் படித்துப் பார்த்து விவாதித்தோம். இத்தீர்மான வரைவில் தமிழர்களின் தேசிய இனச் சிக்கல், அதற்கான தீர்வு என்ற பார்வையே இல்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளும் 13ஆம் சட்டத் திருத்தத்திற்குட்பட்டும் அதிகாரப் பரவல் என்ற இந்தியாவின் மோசடித் தீர்வு தான் வலியுறுத்தப்பட்டிருந்தது. பொறுப்புக் கூறல் வழிப்பட்ட நீதியை நிலைநாட்ட உதவாத படிப்பினைகள்–நல்லிணக்க ஆணையப் பரிந்துரைகளைச் செயலாக்க வேண்டுகோள் விடப்பட்டிருந்தது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து சிறிலங்காவே நம்பகமான விசாரணை நடத்த வேண்டும் என்ற புளித்துப் போன சடங்காசார வேண்டுதலும் சேர்க்கப்பட்டிருந்தது,


இப்படிப் பலவகையிலும் 2012, 2013 தீர்மானங்களைப் போலவே ஏமாற்றமளிப்ப தாக இருந்த அளவில் இந்தத் தீர்மானத்தை அயோக்கியத் தீர்மானம் என்று சாடுவதில் தவறில்லை. ஆனால் ஈடுசெய் நீதிக்கான போராட்டத்தில் ஒரு கருவியாகப் பயன் படுத்திக்கொள்ளும் படியான சில கூறுகளும் இந்தத் தீர்மானத்தில் இடம்பெற்றிருக்கக் கண்டோம். அவற்றுள் முதன்மையானது தீர்மானத்தின் செயல்திட்டப் பகுதியின் எட்டாம் பத்தியில் மனித உரிமை மன்ற ஆணையருக்குத் தரப்பட்டிருந்த கட்டளை.

## எட்டாம் பத்தி

எட்டாம் பத்தி கூறியது என்னவென்றால், மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக் கூறலுக்கு சிறிலங்கா அரசாங்கம் நம்பகமான உள்நாட்டுச் செயல்வழி ஒன்றை நிறுவத் தவறி விட்ட நிலையில் தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு தேவை என்ற மனித உரிமை மன்ற ஆணையரின் முடிவுகளையும் பரிந்துரையையும் வரவேற்கிறோம். இலங்கை யில் இரு தரப்பினரும் புரிந்ததாகச் சொல்லப் படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் தொடர்புடைய குற்றங்கள் குறித்து ஐநா மனித உரிமை ஆணையர் அலுவலகம் புலனாய்வு செய்யுமாறு கேட்டுக் கொள் கிறோம். மனித உரிமை ஆணையர் இப் புலனாய்வின் முடிவுகளை மன்றத்தின் இருபத்தைந்தாவது அமர்வில் வாய்மொழி யாகவும் இருபத்தாறாவது அமர்வில் எழுத்துவடிவிலும் அறிக்கையிட வேண்டும்.

தீர்மானம் தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு என்று வெளிப்படையாகப் பேசவில்லை. ஆனால் இது உள்நாட்டளவிலான புலனாய்வாக இருக்க முடியாது. மனித உரிமை ஆணையர் ஐநா வல்லுனர்களின் உதவியோடு நடத்தும் புலனாய்வு பன்னாட்டுத் தன்மையும் தற்சார்பும் கொண்டதாகத்தான் இருக்க முடியும் என்பதை எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.

மனித உரிமை மன்றமே பன்னாட்டுப் புலனாய்வுக்கான ஆணையத்தை நிறுவ வேண்டும் என்றுதான் ஆணையர் நவநீதம் பிள்ளையே கேட்டார். ஆனால் சொல்லளவில் இல்லையென்றாலும் செயலளவில் ஒரு தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வுக்கு இந்தத் தீர்மானம் வழிகோலுகிறது என்பது தான் உண்மை. 2012, 2013 தீர்மானங்களைக் கடுமையாகச் சாடிய பிரான்சிஸ் பாயல் இந்த



2014 தீர்மானம் குறித்து எழுதும் போது "எதுவும் இல்லை என்பதை விட ஏதோ ஒன்று கிடைப்பது நல்லதுதான்" என்று குறிப்பிட்டார். இந்த ஏதோ ஒன்று சிறியதுதான் என்றாலும் பெரிய விளைவுகளைக் கருக் கொண்டிருப்பது என்று பார்க்கிறோம்.

## இறுதி வரைவு

தீர்மானத்தின் முதல் வரைவுகளோடு ஒப்பிடுமிடத்து இறுதி வரைவு பலவகையிலும் நீர்த்துப் போயிருந்தது. பழைய எட்டாம் பத்தி இப்போது பத்தாம் பத்தி ஆகியிருந்தது. முன்பு மனித உரிமை ஆணையரின் அறிக்கையை வரவேற்பதாக இருந்தது போய் இப்போது கவனத்தில் கொள்வதாக மட்டும் இருந்தது. ஆனால் மனித உரிமை ஆணையர் ஐநா வல்லுனர்களின் உதவியைப் பெற்றுப் புலனாய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டுவதில் மாற்றமில்லை.

புலனாய்வு செய்ய வேண்டிய குற்றங்கள் எவை? இனக் கொலை என்றோ போர்க் குற்றங்கள் என்றோ மானிட விரோதக் குற்றங்கள் என்றோ வரையறுத்துச் சொல்லவில்லை. தொடர்புடைய குற்றங்கள் (related crimes) என்று பொதுவாகச் சொல்லியிருப்பதால், இனக்கொலை உள்ளிட்ட எல்லாக் குற்றங்களைப் பற்றியும் புலனாய்வு செய்யும்படி நம்மால் வாதிட முடியும். புலனாய்வுக்குரிய காலம் படிப்பினைகள்–நல்லிணக்க ஆணையத்தின் ஆய்வுக் காலம் என்று வரையறுத்திருப்பதும் குறைதான். ஆனால், தமிழீழ மக்களது உறுதிப்பாட்டின் நேர் விளைவும் சிங்களப் பேரினவாத அகந்தையின் எதிர் விளைவும் சேர்ந்து, சொல்லாட்சியிலும் கால வரையறையிலுமான இந்தக் குறைபாடுகளைக் களைய வழிகோலும் என நம்புகிறோம். இந்தக் காலவரைக்குள்ளும் கூட நிகழ்ந்தவற்றைச் சான்றுகளுடன் நிறுவினாலே, இனக் கொலை செய்யும் உள்நோக்கத்துடன் நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள், மானிட விரோதக் குற்றங்கள் என்பதைக் காட்டி இனக்கொலைக் குற்றத்தையே நம்மால் மெய்ப்பிக்க முடியும்.

## வெற்றி

தமிழர்களின் மீதான தேசிய இன ஒடுக்குமுறைக்குத் தீர்வு என்ற கோணத்தில் இந்தத் தீர்மானம் உதவாத ஒன்று என்றாலும், தட்டுத் தடுமாறியாவது தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வுக்கு வழிதிறக்கக் கூடிய ஒன்று என்ற அளவில் வரம்புக்குட்பட்டு வரவேற்கத் தக்கது எனக் கருதினோம். இந்தத் தீர்மானத்தை இந்தியா கெடுத்து விடக்கூடாதே என்று கவலைப்பட்டோம்.

ஒருவழியாக இந்தத் தீர்மானம் வெற்றி பெற்று விட்டது. சிங்களத்துக்கு மட்டுமல்ல, இந்தியத்துக்கும் இது ஒரு தோல்வி. பன்னாட்டுப் புலனாய்வுக்கு வழிகோலும் பத்தாவது பத்தியை நீக்க பாகிஸ்தானுடன் சேர்ந்து இந்தியா செய்த முயற்சி தோற்ற பிறகுதான் இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் ஓடிப்போனது. 2012, 2013 தீர்மானங்களை



ஆதரித்து வாக்களித்த இந்தியா இம்முறை ஒதுங்கிக்கொன்டதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் முதன்மைக் காரணம்... பழைய தீர்மானங்களைப் போல் இது பல்லில் லாத தீர்மானம் அன்று என்பதே. தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு ஏற்படுத்தக் கூடிய தொடர்விளைவுகளை அது நன்கறியும். அது சிங்கள அரசோடு இந்திய அரசையும் கூண்டி லேற்றி விடக் கூடும்தானே!

## புலனாய்வும் சிங்கள எதிர்வினையும்

பன்னாட்டுப் புலனாய்வுக்கான செயல்வழி தொடங்கி விட்டது. இதை ஏற்க முடியாது என்கிறார் இராசபட்சே. ஏற்கா விட்டால் உலகம் தடைகள் விதிக்க நேரிடும் என்று யாஸ்மின் சூக்கா எச்சரிக்கிறார். ஐநா தடை கள் கொண்டு வரவிடாமல் சீனா போன்ற நாடுகள் தடுக்கக்கூடும். அப்படியும் ஐரோப் பியத் தடைகள் வருவதைத் தடுக்க இயலாது. சிறிலங்காவைப் புறக்கணிக்கும் இயக்கம் உலகு தழுவிய அளவில் வீச்சுப் பெறும். இந்தியாவிலும் இந்த இயக்கத்தை வீரியத்துடன் நடத்த நாம் முயன்றால் முடியும்.

பன்னாட்டுப் புலனாய்வுக்கான வழி திறந்திருப்பது எவ்வளவு முகாமையான முன்னேற்றம் என்பதைப் பகைவனின் ஆத்திர ஆவேசத்திலிருந்தே புரிந்து கொள்ளலாம். புலம்பெயர் தமிழர் அமைப்புகளை சிறிலங்கா அவசர அவசரமாகத் தடை செய்துள்ளது. குறிப்பிட்ட தலைவர்களையும் பயங்கரவாதிகள் என்று அறிவித்துள்ளது. புலிப்படை புத்துயிர் பெறுவதாகச் சொல்லி மூன்று தமிழ் இளைஞர்களை அநியாயமாகச் சுட்டுக் கொன்று விட்டது. வடக்கு மாகாணத்தில் அடக்குமுறையைத் தீவிரப்படுத்தியுள்ளது. மறுபுறம் உலகத் தமிழர்களோ பன்னாட்டுச் சமுதாயமோ இந்தப் பூச்சாண்டிக்கு மிரள்வதாக இல்லை. தாயகத் தமிழர்களையும் புலம்பெயர் தமிழர்களையும் பிரிக்கும் சிங்கள அரசின் சூழ்ச்சி வெல்லப் போவது இல்லை.

சிங்கள இராணுவம் இழைத்த குற்றங் களுக்குச் சான்றுகள் திரட்டும் வேலை தொடங்கி விட்டது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இனவழிப்பில் ஈடுபட்ட போர்க் குற்றவாளிகளின் முதல் பட்டியலை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டுத் தமிழர்களாகிய நாம் என்ன செய்யப் போகிறோம்? இன அழிப்புப் போர் நடந்த போது அதைத் தடுத்து நிறுத்தத் தவறி விட்டோம் என்ற குற்ற உணர்வு நமக்கு இருக்குமானால், இப்போது அதற்கு நீதி தேடும் போராட்டத்திலாவது நம் முழு வலுவையும் திரட்டி சிங்களத்தைத் தனிமைப் படுத்துவோம். தமிழ்நாட்டுத் தமிழர்கள் நிழல் என்றாலும் நிசம் என்றாலும் சிறந்த சண்டை ரசிகர்கள் என்ற அவப்பெயர் நீங்கச் செய் வோம். ஈழத் தமிழரின் நீதிக்கும் இறைமை மீட்புக்கும் விடுதலைக்குமான போராட்டத்தில் தமிழ்நாட்டு இயக்கங்களும் கட்சிகளும் கருத்து வேறுபாடுகளைக் கடந்து தமிழ் மக்களைத் திரட்டிக் களமாடுவோம். தமிழினத்தின் வீறெழுச்சி கண்டு சிங்களப் பேரினவாதமும் இந்திய வல்லாதிக்கமும் நடுநடுங்கட்டும்! ❖




# ஆங்கில வழிக் கல்வி – விருப்பமா? நெருக்கடியா?

**– மதியவன்**

சொன்னதைச் சொல்லும் 'கிளிப்பிள்ளை' கல்விமுறை, தகவல்களை இட்டு நிரப்பும் 'வங்கியியல்' கல்விமுறை, சுய சிந்தனை உள்ளவர்களையும் அடிமைகளாக இருக்க மறுப்பவர்களையும் சலித்தொதுக்கும் 'வடிகட்டல்' கல்விமுறை என்று, நிலவும் கல்விமுறைகள் குறிந்த உலக அறிஞர்களின் விமர்சனங்களை உள்வாங்கிக்கொண்டு, ஒரு முற்போக்கான, மாற்றுக் கல்விமுறையை நோக்கிச் சர்வதேசச் சமூகங்கள் விவாதத்தை முன்னெடுத்திருக்கும் காலமிது.

ஆனால், கற்றலையும் கற்பித்தலையும் பற்றியெல்லாம் கவலையில்லாமல், கற்பிக்கும் மொழியில் – கல்வி மொழியில் – ஒரு எதிர்ப் புரட்சியைத் தொடக்கி வைத்துள்ளது தமிழக அரசு. மொழிப் போருக்கு சிறப்பான பாரம் பரியமுடைய தமிழ்நாட்டில், அனைத்து பொதுப் பள்ளிகளிலும் ஆங்கில வழிக் கல்வியை தமிழக அரசே அறிமுகப்படுத்தி யுள்ளது. 1985–ல் கூட, மத்திய அரசால் 'நவோதய வித்தியாலய' என்ற பெயரில் தொடங்கப்பட்ட இந்தி–ஆங்கிலத் திணிப்பிற் கான பள்ளிகள் தமிழகத்தில் காலூன்ற முடிய வில்லை. ஆனால் தற்பொழுது 'ராஷ்ட்ரிய ஆதர்ஷ் வித்யாலயா' என்ற பெயரில், அரசு மற்றும் தனியார் கூட்டில் 'தனியார்களால்' துவங்கப்படவுள்ள 2500 மாதிரிப் பள்ளிகளில் தமிழ்நாட்டில் மட்டுமே 356 பள்ளிகள் தொடங்கப்படவிருப்பதாக, மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் 'தமிழ்' பயிற்று மொழியாக மட்டுமல்ல, ஒரு பாடமாகக் கூட இருக்க வேண்டிய கட்டாயமில்லாத இப் பள்ளிகள் பற்றிய அறிவிப்பு, தமிழ்ச் சமூகத்தில் 'தமிழ்வழிக் கல்வியா – ஆங்கில வழிக் கல்வியா' என்ற நெடுநாள் விவாதத்திற்கு மீண்டும் முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

இச்சிக்கலைக் 'குணம் நாடிக் குற்றமும் நாடி' அறிவியல் பூர்வமாகவும் அணுகுவதற்கு ஏற்றவாறு, ஆங்கில வழிக் கல்வி என்பதை அயல்மொழி வழிக் கல்வி என்றும், தமிழ் வழிக்




கல்வி என்பதை தாய்மொழி வழிக் கல்வி என்றும், அடிப்படையில் பிரித்து விளங்கிக் கொள்வது நல்லது. இது உணர்ச்சிவயப்பட்ட கருத்துகளையும் அறிவியல் பூர்வமாக அணுக உதவக் கூடும். அயல் மொழி என்பதைத் தாண்டி, ஆங்கிலத்திற்கு இருக்கும் முக்கியத்து வத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ளத் தவறப்போவதில்லை. அதேபோல் 'தாய் மொழிக்கு' இருக்கும் முக்கியத்துவத்தையும்!

தமிழ்ச் சமூகத்தில், தாய்மொழி வழிக் கல்விக்கு ஆதரவாகத் தமிழ் உணர்வாளர்கள் மொழி அறிஞர்கள் சமூக ஆர்வலர்கள் கல்வியியலாளர்கள் முற்போக்காளர்கள் என்று அறிவுசார் வட்டங்களில் ஆதரவு இருக்கிறதே தவிர, பொது மக்களில் பெரும்பான்மையினர் ஆங்கில வழிக் கல்வியையே விரும்புகின்றனர் என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

மேலோட்டமாக நோக்குமிடத்து, கணினி யுகத்தில் / உலகமயச் சூழலில் ஆங்கிலத்தின் தேவையும், ஆங்கிலம்தான் 'உலக மொழி' 'பொது மொழி' 'அறிவியல் மொழி' போன்ற கருத்துருக்களும் தான், ஆங்கில வழிக் கல்விக்கு ஆதரவான மனநிலையை தமிழ்ச் சமூகத்தில் விதைத்திருப்பதாகத் தோன்றலாம். ஆனால், ஒரு சமூகம் முழுமைக்குமே, தன் தாய் மொழியைக் கை-கழுவிவிட்டு, அயல் மொழியில் பயில முனைப்புக் காட்டுவதும் – மேல்தட்டு மக்கள், நடுத்தர வர்க்கம், பாட்டாளிகள் என்று வர்க்க பேதமில்லாமல், துறை / தொழில் பேதமில்லாமல், சிறுவர்கள் இளைஞர்கள் பெரியவர்கள் என்று வயது வித்தியாசம் இல்லாமல், ஆங்கில மோகத்தில் திளைத்திருப்பது, காரிய நோக்கம் கொண்டது அல்ல. அது அந்த சமூகம் சந்தித்திருக்கும் உளவியல் நெருக்கடி! அதிகார வர்க்கம் காரிய நோக்கத்தோடு ஏற்படுத்திய உளவியல் நெருக்கடி!

**ஆங்கிலப் பட்டறைகளும் – ஆளனுப்பும் ஊடகங்களும்**

பன்னாட்டுத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான, ஆங்கிலம் தெரிந்த 'அதிசயக் கருவி'களை உற்பத்திசெய்வதற்கும், உற்பத்தி யாகும் பொருட்களை நுகர மேற்கத்திய மோகச் சமூகத்தை உருவாக்குவதற்கும் தான், நம் நாட்டுத் தரகு முதலாளிகளின் கல்வி நிறுவனங்களும் ஊடகங்களும் இரவு பகலாக கண்விழித்து வேலை செய்து வருகின்றன. எதிர்கால இந்தியாவின் தூண்களில், யார் 'அதிசயக் கருவி'யாகத் தேறிவருவார்கள் என்பது நிச்சயமில்லாத நிலையில், அத்தனை

பேருக்கும் ஆங்கில மோகத்தை விதைப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை.

ஏனென்றால், நிச்சயத் தன்மையோடு, தேவையான எண்ணிக்கையில் மட்டும் 'கருவி'களை உற்பத்திசெய்துகொள்ளுமளவிற்கு, இன்னும் நமது கல்வி நிறுவனங்களின் 'தரம்' உயர்த்தப்படவில்லை. மனித சமூகமும், இன்னும் அந்த அளவிற்கு மடச் சமூக மாக்கப்படவில்லை. அதற்கான முயற்சியில் தான், தொலைக்காட்சி ஊடங்கள் இறங்கி யுள்ளன. இருபத்து நான்கு மணிநேரமும் மக்களை அதற்காகப் பயிற்றுவித்துக் கொண் டிருக்கின்றன.

முதலாளித்துவத்தின் சாதனைகளைப் பாருங்கள்... (தொழில் வளர்ச்சி இல்லை யென்றால் என்ன) தொழில்நுட்பத்தின் மகத் துவத்தைப் பாருங்கள்... அமெரிக்கர்கள் ஆவது ஒன்றும் அவ்வளவு சிரமமில்லை, அவர்களுக் கென்ன கொம்பா முளைத்திருக்கிறது? இனி... விளையாட்டு, பயணம், உரையாடல், பொழுதுபோக்கு, ஓய்வு, வாசிப்பு எல்லாம், தொலைக்காட்சியில் வருபவை. நீங்கள் எதற்கும் சிரமப்பட வேண்டியதில்லை, எல்லாம் தொலைக்காட்சிகளே பார்த்துக்கொள்ளும், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் தொலைக் காட்சி பார்ப்பது மட்டும்தான். மொத்தத்தில் நீங்கள் எங்களுக்கு வேண்டும், எப்படி வேண்டுமோ அப்படி! அதனால் தொடர்ந்து தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டே இருங்கள். இதற்குப் பிறகும் உங்களுக்குச் சிந்திக்கத் தோணுகிறதா, தவறில்லை, அது மனித இயல்பு. ஆனால் கிழக்கு தெற்கு வடக்கு எல்லாம் சூலம், 'மேற்கே' மட்டும் சிந்தியுங்கள் – என்று மூளையை முடமாக்கும் லேகியம் விற்றுக்கொண்டிருக்கின்றன ஊடகங்கள்.

ஆங்கிலம் தெரியாத எந்த ஒரு கிராமமும் விடுபட்டுவிடக்கூடாது என்ற சிறப்புக் கவனத்தோடு, தமிழ்நாடு முழுமைக்கும், 'தமிழர்களுக்காக' ஒளிபரப்பப்படும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள், முடிந்தவரை 'ஆங்கி லத்தில்' இருக்கும்படி பார்த்துக்கொள்ளப் படுகின்றன. எந்நேரமும் திரையை ஆக்கிர மித்திருக்கும் சிறிய மற்றும் பெரிய திரைக் கலைஞர்கள் சேர்ந்து அடிக்கும் ஆங்கிலக் கூத்தும், கிண்டலாக உச்சரிக்கப்படும் உரை நடைத் தமிழும், பார்க்கும் பார்வையாளர் களை, கழுத்தில் கத்தியை வைத்து ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்பிவைக்கின்றன. தொலைக் காட்சியை அணைத்துவிட்டு, வீட்டின் கதவைத் திறந்து வெளியில் பார்த்தால், ஆங்கிலம் நிற்குமோ என்ற அச்சத்தை உண்டு பண்ணு கின்றன.

இப்படி, மேற்கத்திய மற்றும் ஆங்கில மோகம் சமூகத்தில் முதலாளித்துவ ஊடகங் களால், தொடர்ந்து வன்முறையாகத் திணிக்கப்படுகின்றது. இத் தொடர் வன்முறை, தமிழ்ச் சூழலில், பல அசிங்கமான உளவியல் விளைவுகளை உண்டுபண்ணியிருக்கின்றது.

**தமிழ்ச் சமூகத்தின் ஆங்கில உளவியல்**

தமிழ்ச் சமூகத்தில், ஒரு பட்டதாரி, ஆய்வு கள் செய்து முனைவர் பட்டமே பெற்றிருந் தாலும், ஆங்கிலம் பேசத் தெரியவில்லை என்றால், சான்றிதழைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு தற்குறிகளின் வரிசையில் அமர்ந்து கொள்ள வேண்டும். அவரை இச்சமூகம் ஒருபோதும் படித்தவராகப் பார்க்காது. அந்த முனைவரும் கூட, உளவியளாக அதற்குப் பழக்கப்படுத்தப்பட்டு விடுவார். மொத்தத்தில், ஆங்கிலம் என்பது படித்தவர்கள் பேசும் மொழியாகவும் பட்டதாரிகளுக்கு இருக்க வேண்டிய அறிவாகவும் கருதும் மனப்பான்மை, நமது சமூகத்தில் பரவலாக நிலவுகிறது. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் பிறந்து, தமிழ் நாட்டிலேயே படித்துப் பட்டமும் பெற்ற ஒரு பச்சைத் தமிழனின் உச்சபட்ச மரியாதை 'தமிழ் அவ்வளவாக எழுதவராது' என்பதில் இருக் கிறது.

இந்த அசிங்கமான உளவியல், ஆங்கில மோகத்தோடு நின்றுவிடவில்லை. தாய் மொழியை இகழவும், தாழ்வானதாக தரமற்றதாக நம்பவும் கற்றுக்கொடுத்துள்ளது. ஒரு கடைக் காரரிடம் brown sheet என்று ஆங்கிலத்தில் கேட்டுப்பாருங்கள். அவர், விலை மற்றும் தரம் உயர்வான பளபளப்பான (polyurethane coated)

அட்டையைத் தருவார். அதையே 'காக்கி அட்டை' என்று தமிழில் கேட்டுப்பாருங்கள், தொகற்சேர்ப்ப பயினுரை (polyurethane) இல்லாத, விலை குறைவான, மட்டமான அட்டையைத் தருவார். சமூகத்தின் அனைத்து மட்டத்திலுமான, இந்தப் பாரதூரமான தாக்கம், அமெரிக்கர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்தி உருவாக்கும் நகைச்சுவைகளைப் (self deprecating jokes) போன்றது அல்ல. இது, அமெரிக்கக் கனவோடு proud to be an Indian என்று குறுஞ்செய்தி (sms) அனுப்பும், முரண்நகை உளவியலைக்கொண்ட ஒரு சமூகத்தின் அவல நிலை!

வெண்டைக் காயை ladies finger என்பதற்குச் சிரிக்காத தமிழன், சேனைக் கிழங்கை elephant foot என்பதற்குச் சிரிக்காத தமிழன், 'கைப்பேசி' என்ற அழகான 'காரணப்பெயர்'ஐக் கேட்டுத்தான் சிரிக்கின்றான். ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கேட்டு, தன் மொழியைத் தானே ஏளனம் செய்து மகிழ்கிறான். இந்தக் கேள்விகள் பெரும்பாலான நேரங்களில் 'அதிசயக் கருவி களின்' அறிவைப் போலவே மொன்னையாகத் தான் இருக்கின்றன. sim-க்கு நிகரான தமிழ்ச் சொல் கேட்டு குறுஞ்செய்திகளைப் பறக்கவிடு கின்றான். Subscriber Identity Module என்பதன் சுருக்கமான (Abbreviation) எஸ்.ஐ.எம் என்பதை 'சிம்' என்று சேர்த்து வாசிப்பதில் அவனுக்குச் சிக்கல் இல்லை. வார்த்தையல்லாத ஒன்றுக்கு இணையான தமிழ் வார்த்தையைக் கேட்டு விட்டு, அறிவார்ந்த கணையைத் தொடுத்து விட்டதாகப் புளங்காகிதம் அடைவதிலேயே குறியாய் இருக்கின்றான். (S.I.M – உறுப்பாண்மை யர் அடையாள மட்டுளி).

புதிய கண்டுபிடிப்புகளுக்குப் புதிதாய்த்தான் பெயரிட முடியும் என்ற அடிப்படை அறிவு அவனுக்கு இல்லாமலில்லை. தன் தாய் மொழியைத் தானே ஏளனம் செய்து புளங் காகிதம் அடையும் பரவச நிலையில், அதைப் பற்றியெல்லாம் சிந்திப்பதற்கு அவனுக்கு நேரமில்லை. அல்லது அவன் எடுத்துக்கொண்ட உளவியல் பயிற்சி அவனை சிந்திக்க அனு மதிப்பதில்லை.


ஆங்கில வழிக் கல்விக்கான, இச் சமூகத்தின் ஆகப் பொது ஆதரவுக் கருத்தும் கூட, கிட்டத்தட்ட இதே ஞானத்தோடுதான் இருக் கிறது. அது, 'தமிழ் வழியில் படித்தவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது' என்பது.

சரி, ஆங்கில வழியில் படித்தவர்களுக்கு?

**நமது மாணவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியுமா!**

ஆங்கில வழியில் படித்தவர்களுக்கு ஆங்கிலம் தெரியுமா? பள்ளிப் படிப்பை முடிப்பதற்குள், எத்தனை வருடங்கள்... எத்தனை பாடங்கள்... எத்தனை வகுப்புகள்... எத்தனை தேர்வுகள்... எத்தனை படித்திருப்பார்கள்... எத்தனை எழுதியிருப்பார்கள்... அத்தனையும் ஆங்கிலத்தில்! அத்தனையிலும் தேர்ச்சியும் பெற்று வந்தவர்களுக்கு, ஆங்கிலம் தெரியும் என்று சொல்வதற்குத் திராணி இருக்கிறதா?. உண்மையில், ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள, அந்த மொழி வழியிலேயேதான் கல்வியே கற்க வேண்டும் என்பதே அபத்தம், மடத்தனம். ஆங்கிலம் கற்றுக்கொள்ள ஆங்கில வழிக் கல்வி என்றால், ஸ்பானிஷ் கற்க? அல்லது வேறு மொழி ஏதேனும் கற்றுக்கொள்ள?

சமீபத்திய ஆய்வு ஒன்று தமிழ்நாட்டு மாணவர்களைத் தற்குறிகள் என்கிறது. PISA (program for international student assessment) என்பது அந்த ஆய்வு. மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை சர்வதேச மாணவர்களுக்கு, எழுத்தறிவு கணிதவியல் அறிவியல் ஆகிய பிரிவுகளில் தேர்வுகள் நடத்தி, மதிப்பிட்டு, ஆறிக்கை தருவது அதன் வழக்கம். 2009–10–ல், 74 economies (பிரதேசங்கள்) கலந்துகொண்ட தேர்வில், முதல் முறையாக 'இந்தியாவிலிருந்து' இமாச்சலப் பிரதேசமும் தமிழ்நாடும் கலந்துகொண்டன. எழுத்தறிவுத் தேர்வில், தமிழ்நாடு 72–வது இடத்தையும் இமாச்சலம் 73–வது இடத்தையும் பெற்றுள்ளன. கணிதவியல் அறிவியல் தேர்வுகள் முறையே, தமிழ்நாடும் இமச்சலமும் 72, 73 – 72, 74வது இடங்களைப் பெற்றுள்ளன. எழுத்தறிவு



(Literacy) என்பதற்கு PISA கொடுத்த விளக்கம் – 'படித்த பொருளைப் புரிந்துகொண்டு, அதை வெளிப்படுத்தத் தெரிந்திருப்பது'. இதன் அடிப்படையில், இந்திய மாணவர்கள் பெரும்பான்மையினர் தற்குறிகளாக (illiterate) இருக்கிறார்கள் என்கிறது, அந்த ஆய்வு.

பொறியியல் மருத்துவம் போன்ற மேற்படிப்பு களைக்கூட தாய்மொழியில் கற்கும் சீன மாணவர்களால்தான் முதலிடம் பெற முடிந்தது. எப்படி?

**மொழியும் தாய்-மொழியும்**

முதலில், 'மொழி' என்பதை எவ்வாறு விளங்கிக்கொள்வது என்பதைப் பார்ப்போம். அயல் மொழியாக இருந்தாலும் தாய் மொழி யாக இருந்தாலும் இரண்டும் மொழிகள்தான் என்றும், மனிதர்கள் தங்களுக்குள் கருத்துக் களைப் பரிமாறிக்கொள்வதற்கான 'ஒரு கருவி' என்பதைத் தாண்டி, மனித வாழ்க்கையில் மொழிக்கு வேறெந்தப் பங்கும் இல்லை என்றும், பொதுவாக நிலவும் கருத்துக்கள் சரியா? என்றால், 'இல்லை' என்கிறார் தலைசிறந்த மொழியியல் அறிஞர் நோம் சாம்ஸ்கி (Noam Chomsky).

சர்வதேச துணை மொழிக் (International auxiliary language) கனவோடு, போலந்து நாட்டைச் சேர்ந்த எல்.எல்.சாமின்ஹோஃப் என்பவரால் கட்டமைக்கப்பட்ட மொழி 'எஸ்பெரான்டோ'. இன்று இம் மொழியை, உலகெங்கும் 20 லட்சம் பேர் அறிந்துவைத்திருக் கிறார்கள். கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள உதவினாலும், மொழிக்கான இயற்கைச் சமூகம் (native speakers) இல்லாத வகையில், எஸ்பெரான்டோ (Esperanto) மொழியே அல்ல! என்கிறார் சாம்ஸ்கி.

மொழியறிவு என்பது 'மனித' இனத்தின் இயற்கையான திறன் என்றும், மூளையில் அதற்கென தனிக் கட்டமைப்பே (Language Faculty) இருப்பதாகவும் கூறுகிறார் சாம்ஸ்கி. இதை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது புரிந்து கொள்வதற்கு சற்றே கடினமாக இருக்கலாம். ஆனால், (பரிணாம வளர்ச்சியில்) உருவாகிக் கொண்டிருந்த மனிதர்கள், தங்களுக்குள் சொல்லிக்கொள்ள ஏதோ இருந்தது – மொழியைப் படைத்தது என்னும் எங்கெல்ஸின் கூற்றோடு பொருத்திப் பார்த்தால், 'மனித' 'இனம்' தான் தோன்றிக்கொண்டிருந்த காலம் தொட்டே, சிந்தனையை ஒழுங்கமைக்கவும், கருத்துக்களை வளர்த்தெடுக்கவும், பரிமாறிக் கொள்ளவும், பதிவு செய்யவும் மொழியை தன் வரலாறு நெடுகப் பயன்படுத்தியதன் பரிணாம விளைவு (சாம்ஸ்கியின் மொழியில்– biological evolution), மூளையில் மொழிக்கென ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். மனித இனத்திற்கே உரிய 'உழைப்பு' அதன் உடல் அமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவந்த போது, மனித இனத்தின் பிரிக்க முடியாத அங்கமான 'மொழி'யும் மூளையில் அதற்கென ஒரு கட்டமைப்பைக் கோரியதில் வியப்பென்ன இருக்க முடியும்?

செவ்வாய் கிரகத்து மொழியியலாளர் ஒருவர், நமது மொழிகளை நோக்கினாரேயானால், பூமியிலுள்ள மொழிகள் அனைத்தும் சிறு வேறுபாடுகளுடைய 'ஒரே மொழி' என்ற முடிவுக்கு வரலாம் என்கிறார் சாம்ஸ்கி. ஏனென்றால் மனித மொழிகள் ஒரு பொதுவான அடிப்படையில் வளர்ச்சியடைந்தவை என்றும், அவற்றிற்கிடையிலான வேறுபாடுகள் மேம் போக்கானவையே என்றும், அவற்றின் இலக் கணங்களுக்குப் பொதுக் கூறுகள் (Universal grammar) இருப்பதாகவும் கூறுகிறார்.

இதன் அடிப்படையில்தான், 'குழந்தைகள் மனதளவில் எந்தத் தொல்லையுமில்லாமல், ஒரு

மிதிவண்டியை ஓட்டிப் பழகுவதைப்போல், தாய் மொழியை எளிமையாகக் கற்றுக்கொள் கிறார்கள்' என்கிறார் சாம்ஸ்கி. மேலும், தாய் மொழியைக் கற்றுக்கொள்ளும் குழந்தைகள், வாக்கியங்களை அப்படியே பிரதி எடுப்ப தில்லை. இலக்கணங்களை விதிகளை ஊகித்துணர்கிறார்கள் (they deduce rules from it) என்கிறார். அறிவு வளர்ச்சியின் முன் தேவையாக, இயற்கையான சிந்தனைப் பசியால் உள்வாங்கிக்கொள்ளப்படும் 'முதல்' மொழி என்பதால், விதிகளை ஊகிப்பது (rules deduction) இயல்பாகவே நடந்துவிடுகிறது. எனவேதான் குழந்தைகள் தங்கள் தாய் மொழியைப் பயில்வதை குறிக்கும் இடங்களில், கற்றல் (learning) என்ற சொல்லுக்குப் பதிலாக முயன்று அடைதல் (acquisition) என்னும் சொல்லையே அதிகம் பயன்படுத்துகிறார் சாம்ஸ்கி. இவ்வாறு மொழியை உள்வாங்கிக் கொள்ள குழந்தைகளுக்கு இயற்கையாக அமைந்துள்ள மூளைத் திறனுக்கு அல்லது திறனுக்கான தொகுதிக்கு Language acquisition device என்றே பெயரிட்டுள்ளார் சாம்ஸ்கி.

குழந்தைகள், மரத்தைக் காட்டி 'என்ன' என்று கேட்கும் போது 'மரம்' என்று சொல்லி முடித்துக்கொள்கிறோம். (நாம் வேறு எதுவும் செய்ய முடியாதுதான்). நாம் அதை மரம் என்று ஏன் சொன்னோம்? அதுதான் அந்தப் பொருளின் பெயர். ஆனால் ஒரு பொருளுக்கு 'பெயர்' இருக்கும் என்பதே குழந்தைகளுக்குத் தெரியாதே! இங்கேயும் ஊகித்துணரும், முயன்றடையும் செயல்கள் நடைபெறுகின்றன. (ஆம், நாம் சொன்ன பதில் குழந்தைகளுக்கு நிறைவைக் கொடுத்திருக்காது) வாக்கியக் கட்டமைப்பில் இருக்கும் விதிகளையும் குழந்தைகள் தாங்களாகவேதான் முயன்றடை கிறார்கள். இரண்டாவது மொழியில் இப்பணி நடைபெறுவதில்லை. boy-ன்னா பையன், girl-ன்னா பொண்ணு என்று, தாய் மொழி வழியாகத்தான் எந்த மொழியும் மூளையைச் சென்றடையும். இல்லையில்லை, நான் அயல் மொழியையும் வலிந்து ஊகித்துணரும், முயன்றடையும் செயல்களுக்கு உட்படுத்தப் போகிறேன் என்றால், அதற்கு முதலில் நீங்கள் அந்த மொழியைக் கற்றாக வேண்டும். ஏனென்றால் நீங்கள் செய்யப்போவது மொழி ஆராய்ச்சி!

இந்த அறிவியல் விளக்கங்களை ஏற்றுக் கொள்கிறோமோ இல்லையோ, நாம் நமது குழந்தைகளுக்கு, ஐம்பது வார்த்தைகளுக்கு மேல் கற்றுக்கொடுத்திருக்க மாட்டோம் என்பது நமக்குத் தெரியும். இலக்கணமும் அப்படியே! எந்த ஒரு குழந்தைக்கும் தாய்மொழி பிறரால் வலிந்து கற்றுக்கொடுக்கப்படுவதில்லை. குழந்தைகள் தங்கள் தாய் மொழியை, தாங்களே தங்கள் சமூகத்தோடு சேர்ந்து இயல்பாகக் கற்றுக்கொள்கிறார்கள், அல்லது முயன்று அடைகிறார்கள் என்பது தெளிவு. (தாய் மொழி என்பதற்கான சரியான விளக்கம் இதற் குள்ளாகத்தான் இருக்க முடியும்)

எனவே மொழி என்பது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் கருவியாக மட்டும் இருக்க முடியாது. அதிலும் தாய் மொழியை அல்லது முதல் மொழியை 'வெறும் கருவி' என்ற வரையறைக்குள் அடைப்பது அறிவுடைமை யாகாது. தாய் மொழியானது கிட்டத்தட்ட ஒரு மனிதனின் அடிப்படை அறிவுத் திறனாக அமைகிறது. மற்ற எதையும் அவன் இதன் வழியாகத்தான் கற்கிறான், அது இன்னொரு மொழியாகவே இருந்தாலும். கற்றலில் அவன் தொடும் எல்லையைத் தீர்மானிப்பதில் 'தாய் மொழித் திறன்' முக்கியப் பங்காற்றுகிறது. இங்கு 'கற்றல்' என்று நாம் குறிப்பிடுவது, கல்வி கற்றல், அறிவுசார் கற்றலைத் தான். மிதிவண்டி கற்றலை அல்ல. அது கற்கக் கூடியதும் அல்ல, பயின்று, பழகக் கூடியது. இரண்டையும் போட்டுக் குழப்பிகொள்ளக் கூடாது.

**குழந்தைகள் மீதான வன்முறை**

இயற்கையாக, அனைத்தையும் தங்கள் தாய் மொழியில் புரிந்துவைத்திருக்கும் குழந்தை களுக்கு, பள்ளிக் கூடங்களில் அயல் மொழியில் கற்பிக்கும் போது, அவர்களின் சிந்தனை தொந்தரவிற்குள்ளாகிறது. இது, குழந்தைகளின்

சிந்தனையில் நாம் செலுத்தும் கொடிய வன்முறை ஆகும். தொடர்ந்து கட்டாயப்படுத்தி திணிக்கப்படும் அயல் மொழி வழி கற்பிக்கும் 'முயிற்சி', குழந்தைகளுக்குள் வளர்ந்து கொண்டிருக்கும் தாய் மொழித் திறனையும் படிப்படியாக காலி செய்துவிடுகிறது. மாண வர்கள் தற்குறிகளாகும் புள்ளி இதுதான். முடி வாக அவர்கள் கற்பதையே (learning) நிறுத்திவிடு கின்றனர். ஆசிரியர்களும் கற்பித்தலை (teaching) நிறுத்திவிடுகின்றனர். பிறகு நடப்பதெல்லாம் மதிப்பெண்களை நோக்கிய பயிற்சிதான் (coaching). அவர்கள் எடுக்கும் பயிற்சி, புத்தகங் களில் இருப்பதைப் பிரதி எடுப்பதற்குத்தான். எடுக்கப்படும் பிரதிகள் ஆங்கிலத்தில் இருந்து விடுகின்றன அவ்வளவுதான். மற்றபடி ஆங்கிலப் புலமையெல்லாம் ஆங்கிலம் கற்பதால் சாத்தியமே தவிர, ஆங்கில வழியில் பிரதி எடுப்பதால் (கற்பதால்?) அல்ல.

பிற்காலத்தில் தங்களை 'அதிசயக் கருவி' களாகிக்கொள்வதற்கு 'எப்படிச் சிரிப்பது' 'எப்படி கை–குலுக்குவது' 'எப்படிப் பார்ப்பது' 'எப்படி தன்னை விற்பது!' (Personality Development) என்று பட்டைதீட்டி நிமிர்த்து வதற்கு முன் நிபந்தனையாக – குழந்தைகளின் 'சுய மரியாதை' 'சுய சிந்தனை' 'படைப்புத்திறன்' அனைத்தையும் அடித்து நொறுக்கி அழித் தொழித்துப் புடம்போடப்படும் இடமாகத்தான் இந்தப் பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன.

**கற்றலில் மொழி**

பள்ளி என்பது கற்றலைக் கற்பிக்கும் இடம் தான், உண்மையான கல்வி பள்ளியை விட்டு வெளியேறிய பிறகே நடக்கிறது – என்கிறார் கல்வியியலாளர் ஜான் டூவி (John Dewey). அயல் மொழி வழியில் கற்கும் மாணவர்களைப் பொறுத்தவரையில், பள்ளிக்குள்ளும் சரி, பள்ளிக்கு வெளியிலும் சரி, 'கற்றல்' அதன் உண்மையான பொருளில் நடப்பதே கிடையாது. என்னதான் படித்தவராக இருந்தாலும், எந்த ஒரு மொழியிலும் பாண்டித்தியம் இல்லாத ஒருவரால், எதையும் முழுமையாகக் கற்க இயலாது. ஒரு ஆழமான புத்தகத்தைக் கூட படித்துப் புரிந்துகொள்ள முடியாது. 'வாசிக்கும் மொழியில் பாண்டித்தியம்' அல்லது 'வாசிக்கப்படும் பொருளில் அடிப்படை அறிவு' இந்த இரண்டில் ஏதேனும் ஒன்றாவது இல்லாமல், தினத்தந்தி செய்தியைக் கூட முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது.

PISA தேர்வில் நமது மாணவ மணிகளின் நிலை இதுவாகத்தான் இருந்திருக்கின்றது. சீன மாணவர்களுக்கு தாய்மொழி வழிக் கல்வி கொடுத்த மொழிப் பாண்டித்தியம், தேர்வுப் பொருள் பற்றிய அடிப்படை அறிவிற்கு ஆதாரமாக இருந்து கைகொடுத்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் PISA-2012 ஆம் ஆண்டிற்கான தேர்வு முடிவுகளும் வெளியாகிவிட்டன. இம்முறையும் சீன மாணவர்கள் தான் அசத்தியுள்ளனர். (இம் முறை, இந்தியா பங்கேற்கவில்லை! ) ஏதேனும் ஒரு மொழியில் பாண்டித்தியம் என்பது கற்றலுக்கு அவசியமான ஒன்று. தாய்மொழியில் பாண்டித்தியம் பெறுவதே இயற்கையானதும் எளிமையானதும் இயல்பானதும் ஆகும். அதற்கு தாய்மொழி வழிக் கல்வியே சிறந்த வழி.

இப்படிக் கூறுவதானது, தாய் மொழியைத் தவிர வேறு மொழிகளில் பாண்டித்தியம் பெற முடியாது என்பதாகுமா? அப்படியில்லை. ஒரு நூலை எவ்வாறு கற்பது என்பதற்கே, 1000 பக்கங்களில் விளக்கப் புத்தகங்கள் தேவைப் படுகிற நூல், காரல் மார்க்ஸின் மூலதனம் (Das Capital). அவ்வளவு கடினமான நுட்பமான நூலை, ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்க, பதின்ம வயதில் தன் வாழ்வைப் புரட்சிப் பணிக்கு அர்பணித்த தோழர் தியாகுவிற்கு முடிந்திருக்கின்றது. Das Capital–ஐப் பொருத்தவரை, இந்திய மொழிகளில் இது தான் முதல் முழுமையான மொழி பெயர்ப்பு. (தோழர் தியாகு தான், தமிழகத்தின் முதல் தாய்த் தமிழ்ப் பள்ளியைத் தொடங்கியவர். அதே பள்ளியில் தனது மகளை முதல் மாணவியாகச் சேர்த்தவரும் கூட). ஆக, அயல் மொழியில் பாண்டித்தியம் என்பது சாத்தியமே.

ஆனால் இது போன்ற அரிதிலும் அரிதான சாத்தியப்பாட்டை நோக்கி, ஒரு சமூகத்தையே அயல்–மொழியில் நகர்த்துவது முட்டாள்த் தனம் என்கிறோம். பில் கேட்ஸ் (ஹாவார்டு) பல்கலைக்கழகப் படிப்பை இடைநிறுத்தியும் சாதிக்க முடிந்தது என்பதற்காக, கணினித் துறையில் சாதிக்க விரும்புபவர்களெல்லாம், கல்லூரிகளை விட்டுப் பாதியிலேயே ஓடிவந்து விடுவதில்லையே!

**அன்பிற்கினிய உழைக்கும் மக்களே!**

ஆங்கிலத்தையோ வேறு ஏதேனும் அயல் மொழியையோ கூட கற்றுக்கொள்வது, இக் காலங்களில் அவ்வளவு கடினமானது அல்ல. கைப்பேசி போன்ற பல மின்னியல் உப கரணங்கள் (gadgetries), எப்போதும் கைகளில் இருக்கும்படியான மின்னியல் அகராதிகள், இணையதளப் பயன்பாடு, ஆசிரியர்களைத் தொடர்புகொள்ள எளிமைப்படுத்தப்பட்ட வசதிகள், பன்மொழித் திரைப்படகளையும், செய்திகளையும் பார்க்கும் வாய்ப்புகள் போன்றவை, அயல் மொழி கற்றலை எளிமைப்படுத்தக் கூடியனவாக இருக்கின்றன. எனவே ஆங்கிலத்திற்காக, ஆங்கில வழியிலேயே கல்வியைத் தேர்ந்தெடுத்து, 'தற்குறி'களாக வேண்டிய அவசியமில்லை.

நம் சமூகத்திற்கு ஆங்கிலம் பயன்படலாமே தவிர, ஆங்கில – அயல் – மொழிக் கல்வி, கேடு விளைவிக்கவே செய்யும். எந்த ஒரு சமூகத்திற்குள்ளும், அதன் சமூக (தாய்) மொழியைப் புறக்கணித்துவிட்டு, அயல்மொழி வழிக் கல்வியைத் திணிப்பது, அச்சமூகத்தின் ஆளுமையைச் சீரழிக்கக் கூடியது. சமூகத்தோடு ஒன்றி வாழாத, உற்பத்தியில் பங்குகொள்ளாத, மேல்தட்டு கனவான்களுக்குச் சாதகமானது. உழைக்கும் பாட்டாளி மக்களைப் பலகீனப் படுத்தக்கூடியது. சமூகத்தின் பெருவாரி மக்களை அறிவிலிகளாக்கி, போராட்ட உணர்வை மழுங்கடித்து, ஒட்டச் சுரண்ட வழிவகுக்கக் கூடியது.

ஜெர்மனி, பிரான்ஸ், சீனா, ஜப்பான், ரஷ்யா போன்ற வளர்ந்த நாடுகளில், மேற்படிப்புகள் கூட, தாய் மொழியில் கற்க முடிகிறது. (ஆங்கிலமே இயல்பு மொழியாகவுள்ள (de facto), இங்கிலாந்து அமெரிக்கா ஆஸ்திரேலியாவையும் கூட இந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம் தானே?). உலகிலேயே, வளமையான மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்ட தேசிய இனங்களுக்கு, அடிப்படைக் கல்வியையே அயல் மொழியில் கற்பிக்கும் நாடு 'இந்தியா' மட்டும் தான்! வேறெந்த நாட்டிலும் இந்த அவலம் இல்லை. இதை மக்களின் விருப்பம் என்பது, எல்லோரையும் சொல்லி ராசா குசு விட்ட கதை (சொலவடை) தான்.

அன்பிற்கினிய உழைக்கும் மக்களே, இது நமக்கான உரையாடல். நமது மொழி – நமது பலம், நமது கல்வி – நமது உரிமை. அமெரிக்கா சென்றால் என்ன செய்வது... ஆஸ்திரேலியா சென்றால் என்ன செய்வது... டெல்லியில் குடியேறினால் என்ன செய்வது... குஜராத்தில் குடியேறினால் என்ன செய்வது... போன்ற, சொற்ப மேல்தட்டுக் கனவான்களின் சுய அரிப்பிற்காக, நமது உரிமைகளை விட்டுக் கொடுத்துச் சீரழிய முடியாது. இக் கனவான்கள், அங்குள்ள உழைக்கும் மக்களோடும் கூட, ஒன்றி வாழப் போவதில்லை, ஒட்டச் சுரண்டும் ஒட்டுண்ணிகளாகவே செல்கிறார்கள் என்பது திண்ணம். இவர்களின் சர்வ தேசியமும் பொது மொழிச் சிந்தனையும், ஒருபோதும் மக்கள் நலன் கருதி உதயமானது அல்ல.


ஸ்டீவ் ஜாப்ஸ்–காக கண்ணீர்விடும் இக் கனவான்களுக்கு, நமது ஆறுகளின் அவல நிலையைப் பற்றிக் கவலையில்லை. பில் கேட்ஸ் எந்தத் தேதியில் எங்கே ஒண்ணுக்குப் போனார் என்று தெரிந்த இவர்களுக்கு, தனது மாவட்டத்தில் எத்தனை ஆறுகள் ஓடுகின்றன என்பது தெரியாது. இவர்களின், ஐரோப்பிய அத்தை தேடும் கனவிற்கு, சர்வதேசியத்தைச் சாட்டையால் அடித்தா சாத்தியப்படுத்த முடியும்? சிந்தியுங்கள் தோழர்களே...! ❖

தமிழுக்கும் அமுதென்று பேர்!

# தாய்த் தமிழ் மழலையர் தோட்டம் தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளி

வெங்கடாபுரம் ஆலமரம் அருகில், அம்பத்தூர், சென்னை–600 0053.



எமது தாய்த் தமிழ் கல்விப் பணியும் தாய்த் தமிழ்ப் பள்ளியும் தொடங்கி கால் நூற்றாண்டு நிறைவடையப் போகிறது. எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கு நடுவில் இத்துணைக் காலமும் இம்முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுக்கத் துணை நின்ற அனைவரையும் தாய்த் தமிழ் கல்விப் பணியின் சார்பில் நன்றியுடன் வணங்குகிறேன். குறிப்பாகச் சொன்னால், எமது கல்விப் பணியில் நம்பிக்கை வைத்துத் தம் குழந்தைகளை எம் பொறுப்பில் ஒப்படைத்து படிப்பும் பண்பும் கற்கச் செய்த பெற்றோரைப் போற்றுவது என் கடமை. எம்மிடம் கல்வி பயின்ற குழந்தைகள் கல்வியிலும் வாழ்விலும் உயர்ந்து நிற்பது கண்டு பணிவுடன் பெருமை கொள்கிறோம்.

அதே போது எம் பணி மேலும் முன்னேறிச் செல்ல வேண்டிய தேவையை உணர்ந் துள்ளோம். எமது பள்ளியை முன்னோடியாகக் கொண்டு தொடங்கப் பெற்ற சில பள்ளிகள் எம்மை விடவும் சிறப்பாக வளர்ச்சி பெற் றுள்ளது கண்டு மகிழ்கிறோம்.

இந்த வகையில் திண்டிவனத்தில் பேரா சிரியர் திரு பிரபா கல்விமணி அவர்கள் தலைமையில் *14* ஆண்டுகளாக இயங்கி வரும் தாய்த் தமிழ்த் தொடக்கப் பள்ளி குழந்தை களிடம் கட்டணம் பெறாமல் இலவயக் கல்வி வழங்கி வருவது பெருமைக்குரிய செய்தி. தமிழ் அன்பர்கள், கல்வியுரிமை ஆர்வலர்கள் மனமு வந்து செய்யும் உதவிகொண்டு அவர்கள் இதனைச் சாதித்துள்ளார்கள்.

எமது அம்பத்தூர் தாய்த் தமிழ்ப் பள்ளி யிலும் இலவயக் கல்வி நோக்கிய முயற்சிகளை இந்த ஆண்டு தொடங்குகிறோம். முதல் கட்ட மாகத் தாய்த் தமிழ் மழலையர் தோட்டத்தில் பூக்கள், பிஞ்சுகளாக இந்தக் கல்வியாண்டில் சேர்க்கப்படும் குழந்தைகளிடம் சேர்க்கைக் கட்டணமோ மாதக் கட்டணமோ பெறுவ தில்லை என்று முடிவு செய்துள்ளோம். அவர் களுக்கு முழுக்க முழுக்க இலவயக் கல்விதான். இவ்வகையில் *50* பேருக்கு மட்டும் இடந் தரப்படும், சமூகப் பொருளியல் நோக்கில் நலிவுற்றவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

இரண்டாவதாக, தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளியில் இனி எந்த வகுப்புக்கும் சேர்க்கைக் கட்டணம் கிடையாது. மாதக் கட்டணம் மட்டுமே பெறப்படும்.

அன்பான தமிழ் மக்களே! எமது இந்தப் புதிய முயற்சிக்கு எல்லா வகையிலும் ஊக்கமளிக்க வேண்டுகிறோம். எமது கல்விப் பணியை உங்கள் துணையோடும் பங்கேற்போடும் மேலும் விரிவாக, மேலும் செறிவாக வளர்த்துச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையுடன்...

அம்பத்தூர்,
30. 04. 2014.

**தியாகு,**
தாளாளர்



# மார்க்சியக் குறள்

(குறள் வடிவில் மார்க்சியம்)

## மாற்றம்

(மெய்யியல்)

1) பொருள்மாறும் இயக்கம்மாறும் மாறிக் கொண்டே
இருப்பதே பொருளின் நிலை.

2) அளவேற்றம் கொள்ளும் எதுவும், ஒருநிலையில்
குணமாற்றம் கொண்டு விடும்.

3) உறுதிகொண்ட உருக்குமுரு கியோடும், சூடேறும்
அளவு கூடும் போது.

4) போராட்டம் அளவேற்ற மாயின், வெடிக்கும்
புரட்சியே குணமாற்ற நிலை.

5) ஏற்றமின்றி நிகழாது மாற்றம், மாற்றம்
இன்றி அமையாது உலகு.

6) குரங்கினம் குணமாற்றம் கொள்ளா திருப்பின்
புவிமீது மனிதயின மேது?

7) குணமாற்றம் கொள்ளாது கதிர்வெப்பம் கொள்ளும்
கடல்நீரில் வாழாது உயிர்.

8) குணமாற்றம் கொள்ளாது வளரும் குழந்தையை
தாயும்தன் மடிக்கொள் ளாள்.

9) புறச்சூழல் பொருந்த வேண்டும், ஆயினும்
அகநிலையே மாற்றத்தின் அடி.

10) இற்றைநிலை நேற்று இல்லை, மாறும்
நாளை இராதுஇந் நிலை.

- மா. பாலு

❖ தமிழ்நன்

## பெரியார்



நாங்கள்
இளைப்பாற
நீ சுற்றினாய்

நாங்கள்
பேச
நீ முனகினாய்

நாங்கள்
வழி பெற
நீ வலி பெற்றாய்

எங்கள்
உணர்வுப் பசிக்கு
மானம் ஊட்டினாய்

எங்கள்
அறியாமையை அறிய
பொய்களின் மெய்யைச்
சொன்னாய்

காலுக்கடியில்
கிடந்த பெண்களைத்
தோளுக்கருகில் உயர்த்தி
தோழர்களாக்கினாய்

விடைகளையே
நீ
வினாக்குள்ளாக்கினாய்

கல்வீசிப்
புண்படுத்திய போதும்
சொல்வீசிப் பண்படுத்தினாய்

இன இறக்கம்
பொறுக்காத நீ
குடல் இறக்கம் பொறுத்தாய்

இழிவைத் தூக்கிச் சுமந்த
இனத்திற்காய்க்
கழிவைத் தூக்கிச் சுமந்தாய்

ஆட்டம் கண்ட
இனத்தைத்
தள்ளாட்டம் கண்டாலும்
தாங்கினாய். ❍

## திலீபன்



ஒவ்வொரு பொழுதைக்
கடக்கும் போதும்
உயிரன்று
உரிமையே அழிகிறது என்றாய்

யாக்கை
சுருங்கிய போதும்
வேட்கையுடன் விரிந்தாய்

இறுதியின் நெருக்கத்திலும்
உன் வேட்கை
தண்ணீரை
நோக்கி இல்லாமல்
தாயகத்தை
நோக்கி இருந்தது

பசித்த வயிற்றோடு
இறப்பை
உண்டாய். ❍

## கண்ணீர் அஞ்சலி



எண்ணிலா மாணவர்க்கு ஏற்றம் தந்த ஏணி
அண்டியவர்களை அணைத்துக் கரைசேர்த்த தோணி
அன்பின் திரு உருவம் பண்பின் மறு வடிவம்
தனக்கென்று ஏதும் கொள்ளாத தங்கத் தனிப்படிவம்

**திரு S.A. சுப்ரமணியன்,** M.A., M.Ed.

தோற்றம்: 1936, மே 15 மறைவு: 2014, மார்ச்சு 31

ஆறாத் துயரோடும் மாறா நினைவோடும்...
கவிஞர் சு. தாமரை

பொறிஞர் சு. பூங்குன்றன் * பொறிஞர் சு. மல்லிகை
குடும்பத்தினர் * உறவினர்கள் * நண்பர்கள்



# ஏ! கல்வியில் தாழ்ந்த

**பி**ராத்தம் என்னும் பெரிய அரசுசாரா அமைப்பு ஒன்று மும்பையில் 1994 முதல் இயங்கி வருகிறது. இது மும்பைக் குடிசை வாழ்ப் பகுதி மாணவர்களுக்குக் கல்வியளிக்கும் நோக்கில் கலவியாளர்கள் பலரும் சேர்ந்து தொடங்கியதாகும். இது 1 முதல் 8ஆம் வகுப்பு வரையிலான இந்தியக் கிராமப்புற மாணவர்களின் கல்வித் தரத்தை மதிப்பீடு செய்யும் பொருட்டு **அசர்** என்னும் ஏற்பாட்டை 2005இல் தொடங்கியது. இது ஒவ்வோர் ஆண்டும் இந்திய மாநிலங்களின் கிராமப்புறப் பள்ளி மாணவர்களின் கல்வித் தரத்தை மதிப்பீடு செய்து, அதன் அடிப் படையில் தனது அறிக்கையை அணியப்படுத்தி நடுவண் அரசிடம் முன்வைக்கிறது. 2013ஆம் ஆண்டுக்கான அறிக்கையை நடுவண் அரசின் திட்டக்குழுத் துணைத்தலைவர் மான்டெக் சிங் அலுவாலியா 2014 சனவரி 15 அன்று வெளியிட்டார். இந்த அறிக்கை **ஆண்டுக் கல்வித் தகுநிலை அறிக்கை** (Annual Status of Education Report) எனப்படுகிறது. இதுதான் சுருக்கமாக அசர் (ASER) எனப்படுகிறது. மேலும் இந்தியில் அசர் என்றால் தாக்கம் என்று பொருள்.

அசர் கிட்டத்தட்ட இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் இந்த மாணவ மதிப்பீட்டை நடத்துகிறது. அசர் 2013இல் இந்தியாவின் 550 மாவட்டங்களில் 16,000 கிராமங்களில் 14,000க்கு மேற்பட்ட அரசுப் பள்ளிகளையும் ஆயிரக்கணக்கான தனியார்ப் பள்ளிகளையும் சேர்ந்த 6 லட்சத்துக்கு மேற் பட்ட மாணவர்களைச் சென்றடைந்துள்ளது. இது தவிர கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் வீட்டுக் கதவுகளைத் தட்டி மாணவர்களின் பெற்றோர்களிடம் கலந்துரையாடியுள்ளது. நமது தமிழகத்தைப் பொறுத்த வரை, 29 மாவட்டங்களில் 630 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 12,000 மாணவர்களைச் சென்றடைந் துள்ளது. எனவே ஏனோதானோவென்று இல்லாது பெரும் மாதிரி ஒன்றின் பள்ளி விவரங்களைக் கொண்டு மதிப்பீடு செய்யப் பட்டதே அசரின் ஆய்வறிக்கை. எனவேதான் அசர் அறிக்கைகள் பெரும் நம்பகத்தன்மை கொண்டவையாக மதிக்கப்படுகின்றன.

படித்தல் அறிவு, கணித அறிவு ஆகிய இரண்டிலும் மாணவர்களின் திறனை மதிப்பீடு செய்கிறது அசர். அது பிசா போன்று மாணவர்களின் அறிவியல் அறிவை



# தமிழகமே!

◎ நலங்கிள்ளி

மதிப்பீடு செய்வதில்லை. மேலும் மாணவர்களின் கல்வித் திட்டத்தைத் தாண்டி நடைமுறை சார்ந்த வினாக்கள் தொடுப்பதில்லை. மாணவர்களிடம் அவர்களின் பாடப் புத்தகங்களைப் படித்துக் காட்டச் சொல்கிறது, கணக்குப் பாடப் புத்தகங்களில் இடம்பெறும் எளிமையான கணக்குகளுக்கு விடை காணச் சொல்கிறது, அவ்வளவுதான்.

பிசா அமைப்பாவது பாடப் புத்தகங்கள் தாண்டி மாணவர்களின் படித்தல் அறிவைக் குடைந்து பார்த்ததால் நம் மாணவர்கள் திணறி விட்டார்கள் என நாம் தேற்றிக் கொள்ளலாம். ஆனால் மாணவர்களின் படித்தல் அறிவை அசர் எப்படி மதிப்பீடு செய்தது தெரியுமா? மாணவர்களிடம் வெறுமனே அவர்களின் தமிழ்ப் பாடப் புத்தகங்களையும் ஆங்கிலப் பாடப் புத்தகங்களையும் படித்துக் காட்டச் சொன்னது, அவ்வளவுதான்.

2013இல் அசர் குழுவினர் நமது தமிழகக் கிராமங்களைச் சேர்ந்த அரசு மற்றும் தனியார்ப் பள்ளிக்கூடங்களின் முதல் வகுப்பு மாணவர்களிடம் அவர்களின் தமிழ்ப் பாட நூல்களைப் படித்துக் காட்டச் சொன்னார்கள்.

**கதை**

அன்று விடுமுறை நாள். தேவியும், ராமுவும் மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்தனர். மரத்திலிருந்து ஒரு அணில்குட்டி தொப்பென்று கீழே விழுந்தது. இருவரும் அணில்குட்டியை மெதுவாக எடுத்து அப்பாவிடம் கொடுத்தனர். அப்பா அதற்கு பஞ்சால் பால் ஊட்டினார். ஒரு அட்டைப் பெட்டியில் வைத்தார். சிறிது நேரம் கழித்து அணில்குட்டி அங்கும் இங்கும் ஓடியது. தேவியும், ராமுவும் அணில்குட்டியை வளர்க்க விரும்பினர். ஆனால் அப்பா அணில்குட்டியை அதே மரத்தடியில் விட்டு விட்டார்.

மாணவர்கள் படித்துக் காட்டிய பாடவுரை

இந்த நூல்களை 98% மாணவர்களால் படிக்க முடியவில்லை. பின்னர் அசர் குழுவினர் 2ஆம் வகுப்பு மாணவர்களிடம் இந்த முதல் வகுப்புப் பாட நூல்களை படிக்கச் சொன்னார்கள். இப்போது 90% மாணவர்கள் படிக்க முடியாது திணறினர். இப்படியே ஒவ்வொரு வகுப்பாக மேல் நோக்கிச் சென்ற குழுவினருக்கு மோசமான அனுபவமே ஏற்பட்டது.

## படித்தல் அறிவு

அட்டவணை 1 குழந்தைகளின் வகுப்பும் படித்தல் மட்டமும் விழுக்காட்டில் அனைத்துப் பள்ளிகளும் 2013

| வகுப்பு | எழுத்து கூட படிக்காதவை | எழுத்து | சொல் | மட்டம் 1 (வகுப்பு 1 பாடவுரை) | மட்டம் 2 (வகுப்பு 2 பாடவுரை) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| I | 53.4 | 34.2 | 10.3 | 1.8 | 0.3 | 100 |
| II | 22.0 | 35.9 | 32.8 | 7.6 | 1.6 | 100 |
| III | 8.9 | 21.4 | 40.7 | 21.1 | 7.9 | 100 |
| IV | 4.0 | 9.9 | 33.8 | 35.1 | 17.2 | 100 |
| V | 2.7 | 7.4 | 22.6 | 35.5 | 31.9 | 100 |
| VI | 1.5 | 3.5 | 17.8 | 31.0 | 46.1 | 100 |
| VII | 0.8 | 3.0 | 11.4 | 29.2 | 55.5 | 100 |
| VIII | 0.3 | 1.8 | 7.2 | 22.4 | 68.3 | 100 |
| மொத்தம் | 11.2 | 14.3 | 22.0 | 23.3 | 29.3 | 100 |

இந்த அட்டவணையைப் படிப்பதெப்படி: ஒவ்வொரு பெட்டியும் ஒரு குழந்தை சாதிக்கும் பெருமப் படிப்பு மட்டத்தைக் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, 3ஆம் வகுப்பில், எழுத்துகளைக் கூட படிக்க முடியாதோர் 8.9%. எழுத்து தாண்டி வேறேதும் படிக்க முடியாதோர் 21.4%. சொற்களைப் படிக்க முடிந்தாலும் முதல் அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்புப் பாடவுரையைப் படிக்க முடியாதோர் 40.7%. முதல் வகுப்புப் பாடவுரையைப் படிக்க முடிந்தாலும் 2ஆம் வகுப்புப் பாடவுரையைப் படிக்க முடியாதோர் 21.1%. 2ஆம் வகுப்புப் பாடவுரையைப் படிக்க முடியாதோர் 7.9%. ஒவ்வொரு வகுப்புக்கும் இந்தத் தனியினங்கள் அனைத்தின் மொத்தம் 100% ஆகும்.

## கணித அறிவு

அட்டவணை 2 குழந்தைகளின் வகுப்பும் கணித மட்டமும் விழுக்காட்டில் அனைத்துப் பள்ளிகளும் 2013

| வகுப்பு | 1-9 கூட முடியவில்லை | எண்கள் தெரிதல் | | கழிக்க முடிதல் | வகுக்க முடிதல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | 1-9 | 10-99 | | | |
| I | 41.8 | 40.3 | 17.0 | 0.8 | 0.1 | 100 |
| II | 14.9 | 29.6 | 51.9 | 3.5 | 0.2 | 100 |
| III | 4.3 | 16.1 | 61.1 | 17.8 | 0.7 | 100 |
| IV | 2.0 | 6.8 | 48.8 | 38.4 | 4.1 | 100 |
| V | 1.7 | 4.0 | 39.5 | 40.8 | 14.0 | 100 |
| VI | 0.9 | 2.4 | 32.8 | 40.5 | 23.4 | 100 |
| VII | 0.8 | 1.8 | 30.1 | 37.7 | 29.7 | 100 |
| VIII | 0.2 | 1.3 | 23.4 | 36.1 | 39.1 | 100 |
| மொத்தம் | 7.9 | 12.3 | 38.0 | 27.4 | 14.3 | 100 |

இந்த அட்டவணையைப் படிப்பதெப்படி: ஒவ்வொரு பெட்டியும் ஒரு குழந்தை சாதிக்கும் பெருமக் கணித மட்டத்தைக் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, 3ஆம் வகுப்பில், 19 எண்கள் கூட தெரியாதோர் 4.3%. 9 வரை தெரிந்தாலும் அதற்கு மேல் தெரியாதோர் 16.1%. 99 வரை தெரிந்தாலும் கழிக்கத் தெரியாதோர் 61.1%. கழிக்கத் தெரிந்தாலும் வகுக்கத் தெரியாதோர் 17.8%. வகுக்கத் தெரிவோர் 0.7%. ஒவ்வொரு வகுப்புக்கும் இந்தத் தனியினங்கள் அனைத்தின் மொத்தம் 100% ஆகும்.

இந்த முதல் வகுப்புப் பாட நூல்களை 71% மூன்றாம் வகுப்பு மாணவர்களாலும், 48% நான்காம் வகுப்பு மாணவர்களாலும், 33% ஐந்தாம் வகுப்பு மாணவர்களாலும் படிக்க முடியவில்லை!

கணித மேதை ராமானுஜன் பிறந்த தமிழகம் கணித அறிவில் எப்படி எனப் பார்ப்போம். கணித அறிவை அசர் குழுவினர் 4 மட்டங்களாகப் பிரிக்கின்றனர். முதல் மட்டத்தில் 1 முதல் 9 வரையிலான எண்களை அடையாளம் காண வேண்டும். இரண்டாம் மட்டத்தில் 10 முதல் 99 வரையிலான எண்களை அடையாளம் காண வேண்டும். மூன்றாம் மட்டத்தில் ஈரிலக்க எண்களை யேனும் கழித்துக் காட்ட வேண்டும் (எ.கா.: 45 – 27). நான்காம் மட்டத்தில் மூவிலக்க எண்ணை ஓரிலக்க எண்ணால் வகுத்துக் காட்ட வேண்டும் (எ.கா.: 365/3).

மேற்கண்ட ஒவ்வொரு மட்டத்திலும் 8ஆம் வகுப்பு மாணவர்களின் நிலை என்ன எனக் காண்போம். இந்த நான்கு மட்டங்களில் முதல் மட்டத்தை மட்டும் கடந்து மற்ற மட்டங்களில் தேற முடியாது போனவர்கள் 1.5 விழுக்காட்டினர் ஆவர், அதாவது இவர்களால் 10 முதல் 99 வரையிலான எண்களைக் கூட அடையாளம் காண முடியவில்லை. முதலிரு மட்டங்களைக் கடந்து 3ஆம், 4ஆம் மட்டங்களில் தேறாது போனவர்கள் 25 விழுக்காட்டினர் ஆவர், அதாவது இவர்களால் 1 முதல் 99 வரையிலான எண்களை அடையாளம் காண முடிகிறதே தவிர எளிய கழித்தல், வகுத்தல் கணக்குகளைக் கூட செய்ய முடியவில்லை. முதல் மூன்று மட்டங்களைக் கடந்தாலும் 4ஆம் மட்டத்தைத் தொட முடியாது திணறியவர்கள் 61 விழுக்காட்டினர், அதாவது இவர்களால் 1 முதல் 99 வரையிலான எண்களை அடையாளம் காண முடியும், ஈரிலக்க எண்களைக் கழித்துக் காட்ட முடியும், அவ்வளவுதான், ஆனால் எளிய வகுத்தலைக் கூட செய்ய முடியாது. தமிழகக் கிராமங்களில் 8ஆம் வகுப்பில் 61 விழுக்காட்டு மாணவர்களுக்கு எளிய வகுத்தல் கணக்கு கூட தெரியவில்லை என்பது வெளிச்சத்துக்கு வந்து விட்டது.

மற்ற வகுப்புகளில் கணிதம் தொடர்பான சில புள்ளிவிவரங்களைப் பார்ப்போம்.

5ஆம் வகுப்பில் 45 விழுக்காட்டினருக்கு ஈரிலக்கக் கழித்தலோ மூவிலக்க வகுத்தலோ கூட தெரியவில்லை. 86 விழுக்காட்டினருக்கு வகுத்தல் தெரியவில்லை. அதாவது வெறும் 14% 5ஆம் வகுப்பு மாணவர்களுக்கே கழித்தலும் வகுத்தலும் நன்கு தெரிந்துள்ளது.

1 முதல் 9 வரையிலான எண்களைக்கூட அடையாளம் காண முடியாத மாணவர்களின்

விழுக்காட்டுக் கணக்கைப் பாருங்கள்: 1ஆம் வகுப்பில் 42%, 2ஆம் வகுப்பில் 15%, 3ஆம் வகுப்பில் 4%.

4ஆம் வகுப்பில் 9% மாணவர்களாலும், 5ஆம் வகுப்பில் 6% மாணவர்களாலும் 1099 வரையிலான எண்களை அடையாளம் காண முடியவில்லை!

அசர் படித்தல் அறிவுச் சோதனையை அவரவர்கள் தாய்மொழியில் மட்டுமே எப்போதும் நடத்துகிறது. ஆனால் 2012 அசர் அறிக்கை மாணவர்களின் ஆங்கிலப் படித்தல் அறிவையும் சோதித்துப் பார்த்தது. தமிழர்கள் பெரிதும் மோகப்படும் ஆங்கிலத்தில் இந்த மாணவர்களின் தரம் எப்படி இருந்தது? தமிழ் மாணவர்களின் வாயில் ஆங்கிலம் தவழச் செய்வதே தங்களின் இலட்சியம் எனப் பல ஊடகங்களிலும் பீற்றிக் கொள்ளும் கல்வி முதலாளிகள் நடத்தும் பள்ளிகளின் மாணவர் களேனும் ஆங்கிலத்தில் பிளந்து கட்டினார் களா? 8ஆம் வகுப்பைச் சேர்ந்த 17% மாணவர்களால் ஆங்கிலத்தில் சிற்றெழுத்துக் களைக் கூட படிக்க முடியவில்லை. தமிழகக் கிராமப்புற மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் இங்கிலீஷ் இலட்சணமும் இதுதான்! அரசுப் பள்ளிகளின் நிலையும் இதுதான்!

அடடா! தமிழ்நாட்டுக்கா இந்த அவல நிலை என வருத்தப்படுவோருக்கு ஒரு சிறு ஆறுதல் செய்தி. 40 ஆண்டுகளாய் பாரத கம்யூனிஸ்டு கட்சிகளின் 'புரட்சிகர' தோழர் களின் ஆட்சியில் ஊறித் திளைத்த மேற்கு வங்கமானாலும் சரி, லோகியா, அம்பேத்கர் வழிவந்தவர்கள் எனப் பீற்றிக் கொள்ளும் சமாஜ்வாதிகளும் பகுஜன்களும் மாறி மாறி ஆட்சி புரிந்து வரும் உத்திரப் பிரதேசமானாலும் சரி, இந்தியாவின் எழுத்தறிவு மிக்க மாநில மென மார்தட்டிக் கொள்ளும் கேரளமானாலும் சரி, இந்தியாவிலேயே 'நம்பர் ஒன்' இடத்துக்குத் தமது மாநிலத்தைக் கொண்டு செல்லப் போராடும் மனிதர், இந்தியாவை மீட்க வந்த அவதார புருஷர் என்றெல்லாம் ஊடகங்களால் வானளாவப் போற்றப்படும் இந்துத்துவ வெறியரான நரேந்திர மோடியின் குசராத் ஆனாலும் சரி, உலகத் தமிழினத்தின் 'ஒரே' தலைவராலும், 'புரட்சி' தலைவராலும் தலைவியாலும் மாறி மாறி ஆளப்பட்டு வந்துள்ள திராவிடக் கட்சிகளின் தமிழ்நாடு ஆனாலும் சரி, ஏறத்தாழ எல்லா மாநிலங் களின் கல்வித் தரமும் ஒன்றுதான். இன்னும் சரியாகச் சொன்னால், கடந்த 60 ஆண்டுகளில் ஓராண்டு நிதிநிலை அறிக்கையில் கூட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) பத்து விழுக்காட்டையேனும் கல்விக்கு ஒதுக்காத இந்தியமும் காங்கிரசுமுமே தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களின் கல்விக் கேட்டுக்கு முழுப் பொறுப்பாகும்.

முன்பு அசர் 2011 அறிக்கையை கபில் சிபல் வெளியிட்ட போது துக்கம் தொண் டையை அடைக்கப் பேசினார். இந்திய மாநிலங்களின் இத்தகைய மோசமான கல்வித் தரத்தால் அவர் மனம் நொந்து விட்டாராம். இந்தக் கீறல் விழுந்த வசனத்தைத்தான் நேரு தொடங்கி மன்மோகன் சிங் வரை எல்லோ ரிடமும் கேட்டு வருகிறோமே! இந்தியாவை மீட்டெடுக்க பண்டித நேரு தொடங்கி, நேருவின் மகள் இந்திரா, இந்திராவின் மகன் ராசீவ், ராசீவின் மனைவி சோனியா, சோனி யாவின் மகன் ராகுல் வரை தலைமுறைச் சபதம் போடாத நாளே கிடையாது, ஒப்பாரி வைக்காத கூட்டங்களே கிடையாது. அதே சபதம், அதே ஒப்பாரி, அதே இந்தியா! இந்த காங்கிரஸ் ஒப்பாரியில் கபிலும் சேர்ந்து கொண்டுள்ளார். அவர் கூறுகிறார், இந்தக் கல்விச் சீர்கேட்டுக்கு இந்திய அரசு பொறுப் பாகாதாம்! இதற்கு மாநில அரசுகள்தான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமாம்!

ஒரு வரி மீதமில்லாமல் மாநிலங்களிடமிருந்து பறித்துக் கொள்கிறது இந்தியா, தமிழீழம், காசுமீரம், நாகலாந்து உள்ளிட்ட தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கித் தனது வல்லா திக்கக் கனவுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெரும் பகுதியைக் கொலைக் கருவிகள் செய்ய விரயம் செய்கிறது இந்தியா, நாட்டு வளர்ச்சி யின் உயிர் மூச்சாகிய கல்விக்கு ஒரு சிறு தொகையையே மாநிலங்களிடம் விட்டு எறி

கிறது. அந்தக் கல்விக்குச் செலவிடும் பணத்தையும் பெருமளவுக்கு ஒன்றுக்கும் உதவாத ஐஐடி (இந்தியத் தொழில்நுட்பப் பயிலகம்) போன்ற உயர் கல்வி நிறுவனங்களுக்கு ஒதுக்குகிறது. இந்தக் கல்வி அரண்மனைகளில் படித்து விட்டு அமெரிக்கா ஓடும் பார்ப்பனர்களுக்குச் செலவழிக்கும் பணத்தில் ஒரு சிறு பகுதியை இந்த மண்ணுக்காகப் பல்லாயிரம் ஆண்டுகளாய் உழைத்து வரும் பாட்டாளி வீட்டுப் பிள்ளைகளின் அடிப்படைக் கல்விக்குச் செலவிட்டிருந்தால் இந்தக் கல்விச் சீர்கேடு எப்படி ஏற்பட்டிருக்க முடியும்? தில்லி உச்சி முகர்ந்து கொஞ்சி வளர்க்கும் ஐஐடிகளின் இலட்சணம் என்ன தெரியுமா? உலகின் தலைசிறந்த முதல் 450 கல்லூரிகளில் இந்தியாவின் ஒரு ஐஐடி கூட இடம்பெறவில்லை! போதாக்குறைக்கு, கல்வியை மாநிலப் பட்டியலிலிருந்து களவாடிப் பொதுப் பட்டியலுக்குள் எறிந்துவிட்டது. இவ்வாறு பல வகையிலும் தலைமுறை தலைமுறையாகக் கல்விக்கு இயன்ற சீர்கேட்டை எல்லாம் செய்துவிட்டுக் கடைசியில் மாநிலங்களின் தலையில் மிளகாய் அரைக்கிறது காங்கிரஸ்.

அசர் 2013 அறிக்கையின்படி, இந்திய மாநிலங்களுக்கு இடையில் மட்டுமல்ல, அரசு, தனியார்ப் பள்ளிகளுக்கு இடையிலும், தமிழ் வழி, ஆங்கிலவழிப் பள்ளிகளுக்கு இடையிலும் கல்வித் தரத்தில் பெரிய வேறுபாடில்லை. இதைத்தான் பிசா அறிக்கையும் கூறியது எனக் கண்டோம். அதாவது இரு அறிக்கைகளும் அரசு, தனியார் பள்ளிகளுக்கிடையே, தமிழ்வழி, ஆங்கிலவழிப் பள்ளிகளுக்கிடையே கல்வித் தரத்தில் பெரிய வேறுபாடில்லை என்கின்றன. அப்படியானால் சமூகப் பண்பாட்டுப் பொருளியல் காரணிகளும் மொழிக் காரணிகளும் கல்வித் தரத்தில் தாக்கம் செலுத்துவதில்லையா? எனும் ஐயப்பாடு இங்கும் நமக்கு எழுகிறது. இந்தக் காரணிகள் உலக நாடுகளின் கல்வித் திட்டத்தில் எந்தளவுக்குத் தாக்கம் செலுத்தியுள்ளன என்பது குறித்து விரிவான புள்ளிவிவரங்களின் அடிப்படையில் ஆய்ந்துள்ளது பிசா.

நாடுகள் தங்கள் கல்வித் திறனில் எந்தளவுக்குச் சாதித்துள்ளன என்பதைக் காட்டும் வகையில், ஒவ்வொரு நாட்டிலும் அரசு, தனியார்ப் பள்ளிகளின் மாணவர்கள் பெற்றுள்ள சராசரிப் புள்ளிகளைத் தனித் தனியே வழங்கியுள்ளது பிசா. இதே போல், ஒவ்வொரு நாட்டிலும் தங்கள் தாய்மொழியையே பயில் மொழியாகவும் (முதல் மொழியாகவும்), பயிற்று மொழியாகவும் கொண்ட மாணவர்கள் பெற்ற சராசரிப் புள்ளிகளையும், தங்கள் வீட்டின் மொழியல்லாத வேறொரு மொழியைப் பயில் மொழியாகவும், அந்த நாட்டின் மொழியைப் பயிற்று மொழியாகவும் கொண்ட மாணவர்கள் பெற்ற சராசரிப் புள்ளிகளையும் தனித் தனியே வழங்குகிறது பிசா. இத்தகைய புள்ளிகளை நமது தமிழ் நாட்டுப் பள்ளிகளுக்கும் விரிவாக வழங்கியுள்ளது. இந்தப் புள்ளிவிவரங்கள் நமது தமிழக மாணவர்களின் கல்வித் தகுநிலையை வர்க்க அடிப்படையிலும், பயிற்று மொழி அடிப்படையிலும் ஆய்வு செய்வதற்குத் துணைபுரிகின்றன.

முதலில் வர்க்க அடிப்படைச் சிக்கலைப் பார்த்து விட்டுப் பயிற்றுமொழிச் சிக்கலுக்குச் செல்வோம்.

தமிழகத்தில் காசு பறிக்கும் தனியார்ப் பள்ளிகளும் இலவசக் கல்வி வழங்கும் அரசுப் பள்ளிகளும் பிசாவிடம் வாங்கியுள்ள சராசரிப் புள்ளிகள் ஏறத்தாழ ஒன்றே. அப்படியானால் தமிழ்நாட்டில் காசு கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் கிடைக்கும் கல்விச் சரக்கின் தரத்தில் மாற்றமேதும் இல்லை.

ஏழைப் பெற்றோர்களுக்கு இந்த விவரம் தெரிந்தால் கல்வியை வாங்குவதற்கு அண்டா குண்டாவை அடகு வைத்து மீளாக் கடனில் மாட்டிக் கொண்டு வாடுவதற்குப் பதிலாக அரசுப் பள்ளிகளிலேயே தங்கள் பிள்ளைகளைச் சேர்த்து விட்டு நிம்மதியாக இருக்கலாம். எனவே அவர்களுக்கு அறிவுரை வழங்குவதில் அர்த்தமுண்டு. ஆனால் தமிழ் பற்றி வீர வசனம் பேசிப் பதவி இன்பங்களைச் சுவைத்து வரும் அரசியல்வாதிகளும் பசையுள்ள நம் தமிழ்ப் பற்றாளர்களும் தமிழ்க் கவிஞர்களும் தங்கள் பிள்ளைகளைக் கவன


மாக 'மம்மி டாடி' தனியார்ப் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்களே, இவர்களுக்கு என்ன அறிவுரையை வழங்குவதாம்?

குடிகார மருத்துவரிடம் போய் எவரேனும் சாராயத்தால் நேரும் உடல் பாதிப்புகள் பற்றி அறிவுரை கூற முடியுமா? தமிழ்வழிக் கல்வியின் அருமை பெருமைகள் பற்றி நன்கு தெரிந்த நமது தமிழ்ப் பற்றாளர்களுக்குத் தமிழ்வழிக் கல்வியின் அருமை பெருமைகள் தெரியாதா என்ன? அவர்கள் எல்லாம் தெரிந்தேதான் பிள்ளைகளை இங்கிலீஷ் மீடியத்துக்கு அனுப்புகிறார்கள்.

பெரும்பாலும் சாதிமறுப்பு வாழ்க்கை வாழும் அவர்களிடம், "ஏன் உங்கள் குழந்தைகளை ஆங்கிலவழிக் கல்வி அளிக்கும் தனியார்ப் பள்ளிகளுக்கு அனுப்புகிறீர்கள்?" எனக் கேட்டால், அவர்களிடம் வர்க்கச் சார்புக் கருத்துகள் வெளிப்படுகின்றன. "கண்ட கண்ட வீட்டுப் பிள்ளைகளும் படிக்கும் அரசுப் பள்ளிகளுக்கு எங்கள் பிள்ளைகளை எப்படி அனுப்புவது?" என்கிறார்கள். வேறு சிலர் "கெட்ட வார்த்தைகள் பேசும் அந்த வீட்டுப் பிள்ளைகளுடன் எங்கள் பிள்ளைகளை எப்படிப் படிக்க வைப்பது?" என்கிறார்கள். ஆனால் பணக்கார வீட்டுப் பிள்ளைகளிடம் பழகி 'ஷிட்' (மலம்) என்று ஆங்கிலத்தில் பேசினால் இவர்கள் பிள்ளைகளின் வாய் மணக்கும் போலிருக்கிறது.

தனியார்ப் பள்ளியோ, அரசுப் பள்ளியோ பிள்ளைகளுக்குக் கிடைக்கப் போகும் கல்விச் சரக்கின் தரம் என்னவோ ஒன்றுதான் என்ற உண்மையை இவர்கள் எப்படியோ தெரிந்து வைத்துள்ளனர் போலும். பிசா அறிக்கையும் இந்த உண்மையைத்தானே போட்டு உடைத்துள்ளது! அதற்காகப் பணம் காசு புரளும் நமது தமிழ்ப் பற்றாளர்கள் கல்வியில் காட்டும் இந்த வர்க்கச் சார்பு நிலையை எவரும் ஞாயப்படுத்த வேண்டியதில்லை.

ஆனால் இங்கு நாம் விடை காண வேண்டிய முக்கியக் கேள்வி ஒன்று உள்ளது.



வர்க்கச் சார்புள்ள இந்த இருவேறு கல்வி முறைகளிலும் கல்வித் தரம் ஒன்றே என பிசாவும் அசரும் கூறுகின்றனவே, இதற்கு என்ன காரணமாக இருக்க முடியும்? இந்தக் காரணத்தைப் படிப்பறிவில்லாத ஏழைப் பெற்றோர்களுக்கும் பசையுள்ள தமிழ்ப் பற்றாளர்களுக்கும் என்ன விளக்கம் கொடுத்துப் புரிய வைப்பது? பயிற்றுமொழி குறித்து அடுத்து நாம் செய்யவிருக்கும் ஆய்வு இந்த வினாக்களுக்குத் தெளிவான விடையை அளிக்கும்.

மாணவர்களின் வீட்டு மொழி, பயில் மொழி, பயிற்று மொழி (medium of instruction) தொடர்பான புள்ளி விவரங்களை அலசுமுன் பயில் மொழி என்றால் என்ன? பயிற்று மொழி என்றால் என்ன? எனக் காண்போம்.

உலகக் கல்வியியல் வரையறையின்படி, பயில் மொழி என்பது மொழிக் கல்விக்குரிய முதல் மொழியாகும். அதாவது ஒரு மாணவர் மூன்று நான்கு வயதில் முதல் முறையாக வகுப்பறையில் அடி எடுத்து வைக்கும் போது அவர் கட்டாயமாக எந்த மொழியைக் கற்றுக் கொள்ளத் தொடங்குகிறாரோ அதுவே அவரது பயில் மொழி அல்லது முதல் மொழி ஆகும். இந்த மொழியே அவர் எந்த உயர்

கல்விக்குச் சென்றாலும் அவரது முதல் மொழியாகத் தொடரும். அந்த முதல் மொழி அறிவை அடிப்படையாகக் கொண்டு அவர் இன்னோர் மொழியைக் கற்றுக் கொள்ள முயல்வாரானால் அதுவே அவரது இரண் டாம் மொழி ஆகிறது. உலக நாடுகள் எங்கும் ஒரு மாணவர் கட்டாயமாகக் கற்றுக் கொள்ளும் அந்த முதல் மொழி அவரது தாய்மொழியே ஆகும், அதாவது அவரது சமூகத்தின் மொழியே ஆகும்.

இங்கு கட்டாயம் என்பதைத் திணிப்பு எனப் புரிந்து கொள்ளக் கூடாது. மனித வாழ்வைப் பொறுத்த வரை, இயற்கை வளங்களான நீரும் காற்றும் கட்டாயத் தேவை என எந்தப் பொருளில் கூறுகிறோமோ அதே பொருளில்தான் இங்கும் ஒரு மாணவர் அவருக்கு இயற்கையாக வாய்க்கப் பெற் றிருக்கும் அவரது தாய்மொழியையே முதல் மொழியாகப் பயில்வதென்பது அவரது கட்டாயத் தேவை எனக் கூறுகிறோம். இதன் படி அந்த மாணவர் ஒரு குறிப்பிட்ட வகுப்பு வரை, உலகக் கல்வியியலின் பொதுவான நடைமுறைப்படி குறைந்தது ஐந்தாம் வகுப்பு வரை, தமது முதல் மொழியாகிய தாய்மொழியில் நல்ல தேர்ச்சி பெற்ற பிறகு அந்த மொழியை அடிப்படையாகக் கொண்டு, சரியாகச் சொன்னால் அந்த மொழியின் பெயர்ப்பாக இன்னோர் அயல்மொழியைக் கற்றுக் கொள்ளத் தொடங்குவார். இந்த இரண்டாவது மொழி அவரது விருப்ப மொழியாக இருக்கும். அதாவது தமது இரண்டாவது மொழி என்ன என்பதை அவரே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அவர் இன்னும் எத்தனை மொழிகளைப் பயில முற்பட்டாலும், அம்மொழிகளைத் தமது தாய்மொழியாகிய முதல் மொழியின் பெயர்ப்பாகத்தான் கற்றுக் கொள்வார்.

இஃதன்னியில், உலக நடைமுறையின்படி ஒரு நாட்டின் சமூக மொழியைத் தமது வீட்டு மொழியாகக் கொண்டிராத மாணவர்களும் அந்த நாட்டின் சமூக மொழியையே தனது பயில்/முதல் மொழியாக ஏற்றுக் கொண்டுதான் கல்வியகங்களில் படித்தாக வேண்டும். அதாவது ஒரு மாணவருக்கு அவரது வீட்டில் பேசும் மொழி ஒன்றாகவும் அவரைச் சுற்றி வாழும் சமூகத்தின் மொழி வேறொன்றாகவும் இருந்தால் கூட கல்வியகங்களில் அவரது பயில்/முதல் மொழி என்பது சமூகத்தின் மொழியே! அந்த மாணவர் இரண்டாம் மொழியாக வேண்டுமானால் தனது வீட்டு மொழியை விரும்பித் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

உலகக் கல்வியியல் வரையறையின்படி பயிற்று மொழி என்பது ஒரு மாணவர் தமது கல்வியகத்தில் அறிவியல், கணிதவியல், புவியியல், வணிகவியல், பொருளியல் என அனைத்து அறிவுத் துறைகளையும் எந்த மொழியின் வாயிலாகக் கற்றுக் கொள்கிறாரோ அதுவே அவரது பயிற்று மொழி ஆகும். உலக நாடுகள் அனைத்திலும் அனைத்து மாணவர்களுக்கும் வீட்டு மொழியும், அதாவது முதல் மொழியும், பயிற்று மொழியும் ஒன்றே. இந்த நாடுகளில் வீட்டில் ஒரு மொழி பேசி பள்ளிகளில் வேறொரு மொழியில் பயிலும் மாணவர்களும் உண்டு.

பிசா குழுவினர் மாணவர்களிடம் தேர்வுத் தாளைக் கொடுக்குமுன் ஒரு வினாத் தொடுக்கிறார்கள். நாங்கள் நடத்தும் தேர்வின் மொழிதான் உங்கள் முதல் (வீட்டு) மொழியா? பிசா மதிப்பீடு செய்த அனைத்து நாட்டு மாணவர்களும் மிகப் பெரும்பாலும் தங்களின் முதல் மொழியும் தேர்வு மொழியும் ஒன்றே என விடையிறுத்தனர். மிகச் சில மாணவர்களே தங்களின் முதல் மொழி வேறு, தேர்வு மொழி வேறு எனக் கூறினர். அதாவது அந்த மாணவர்கள் தங்கள் முதல் மொழியில் அந்தத் தேர்வுகளை எழுதவில்லை எனப் பொருள். ஒரு நாட்டின் முழுப் பரப்பில் சிறு பான்மை மொழி இனத்தினராக இருந்தாலும் அந்நாட்டின் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் பெரும்பான்மை மொழியினராக வாழ்வோரின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இப்படிப்பட்ட விதிவிலக்கான சூழல் நிலவுகிறது. இந்த மாணவர்களின் விழுக்காடு


என்ன எனச் சில நாடுகளில் காண்போம்: ருஷ்யக் கூட்டரசில் 10%. பின்லாந்து, மெக்சிகோ, அர்ஜென்டைனா, பிரேசில், துருக்கி, பிரான்சு ஆகிய நாடுகளில் 5%; சீனத்தில் 1.5%; இத்தகைய சின்னஞ்சிறு மாணவர் தொகையை விலக்கிப் பார்த்தால், பிசா பட்டியலில் அடங்கிய அனைத்து நாடுகளிலும் அனைத்து மாணவர்களுக்கும் முதல் மொழியும் தேர்வு மொழியும் ஒன்றே! முதல் மொழியும் பயிற்று மொழியும் ஒன்றே – ஒரே ஒரு நாட்டைத் தவிர, அதுதான் இந்தியா!

இந்தியாவில் தமிழ்நாட்டின் கதையைப் பார்ப்போம். பிசா குழுவினர் தாங்கள் வீட்டு மதிப்பீடு செய்த தமிழக மாணவர்களிடம், "நாங்கள் நடத்தும் தேர்வு மொழியும் உங்களின் முதல் மொழியும் ஒன்றா?" எனக் கேட்டனர். அப்போதும் 68% மாணவர்கள்தாம் "ஆமாம்" என்று விடையளித்தனர். அப்படியானால் 32% தமிழ் மாணவர்கள் தங்கள் தாய்மொழியில் பிசா தேர்வு எழுதவில்லை எனப் பொருள். உலகில் காணவியலாத இந்த வேடிக்கைச் சூழலைப் புரிந்து கொள்வது கடினம்.

ஆனால் இதை விடவும் வேடிக்கையான கதையாடல்கள் கூட தமிழகத்தில் உலா வருகின்றன. நமது தமிழ்நாட்டில் சீனாவைப் பாருங்கள், ஜப்பானைப் பாருங்கள், அவர்கள் எல்லாம் ஆங்கிலம் படிக்கத் தொடங்கி விட்டார்கள், இங்கு தமிழ்நாட்டில்தான் சில தமிழ் வெறியர்கள் தமிழ் தமிழெனக் கூப்பாடு போடுகிறார்கள் என்று **இந்து, துக்ளக்** போன்ற பார்ப்பன ஏடுகளும், பல புத்தி ஜீவிகளும் கதையளந்து வருகிறார்கள். அவர்களுக்கு நாம் இங்கு வழங்கியிருக்கும் முதல் மொழி, பயிற்று மொழி விளக்கமும், மேலே கண்ட பிசாவின் புள்ளி விவரமும் சரியான பதிலடியாக இருக்கும். அந்த நாடுகளில் எல்லாம் ஆங்கிலம் படிக்க ஆரம்பித்திருப்பது உண்மைதான். ஆனால் தமிழகம் போல் முதல் மொழியாக இல்லை, பயிற்று மொழியாகவும் இல்லை, ஆங்கிலத்தை ஓர் இரண்டாவது விருப்ப மொழியாக, அதுவும் 6ஆவது, 7ஆவது வகுப்பிலிருந்து படித்து வருகிறார்கள், அவ்வளவுதான். உலகக் கல்வி பற்றிய இந்தப் பேருண்மைகளை மறைத்து விட்டுத்தான் இங்கு பலர் நமது தொடையில் கயிறு திரிக்கிறார்கள்.

உலகக் கல்வியியல் வரையறையின்படி, ஒரு மாணவரின் முதல் மொழி என்பது அவரது தாய்மொழி என்றும், எனவே அதுவே அவரது கட்டாய மொழி என்றும் கண்டோம். அதேபோது ஒரு மாணவரின் இரண்டாம் மொழி என்பது அவரது முதல் மொழியைப் பெயர்த்துக் கற்றுக் கொள்ளும் அயல் மொழி என்றும், எனவே அது அவர் விரும்பித் தேர்ந்தெடுக்கும் மொழி என்றும் கண்டோம். ஆனால் தமிழகத்தின் கல்வி நடைமுறை எப்படி உள்ளது?

பயில்மொழியைப் பொறுத்த வரை, தமிழகத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை முதல் மொழி தமிழ் என்பது விருப்ப மொழியாகவும் இரண்டாம் மொழி ஆங்கிலம் என்பது கட்டாய மொழியாகவும் இருந்து வந்தது. தமிழ் மொழி முதல் மொழி என்று பேருக்கு உயர்த்திக் கூறப்பட்டாலும் விருப்பப் பாடமாகவும், ஆங்கில மொழி இரண்டாம் மொழி என்று பேருக்குத் தாழ்த்திக் கூறப் பட்டாலும் கட்டாயப் பாடமாகவும் இருந்து வந்த நிலை என்பது வேடிக்கையானதே. ஆனால் இன்று பத்தாம் வகுப்பு வரை தமிழ், ஆங்கிலம் இரண்டுமே கட்டாயப் பாடங்கள் என்னும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்போது முதல் மொழி தமிழைப் பன்னிரண்டாம் வகுப்பு வரை கட்டாயமாக்குவதும், அனைத்து வகுப்புகளிலும் இரண்டாம் மொழி ஆங்கிலத்தைப் பல மொழிகளுக்கு இடையே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு விருப்ப மொழியாக்குவதுமே பயில்மொழிக் கொள்கையில் ஒரு தெளிவான இலக்கணத்தை ஏற்படுத்திக் கொடுக்கும். இதற்குப் புறம்பாகத் தாய்மொழி தமிழ், அயல்மொழி ஆங்கிலம் இரண்டையுமே கட்டாயப் பயில்மொழிகளாகச் சமத்தகுநிலையில் வைப்பது மொழிக் கல்வி இலக்கணத்துக்கே முரணாக அமைந்து விடும்.




பயிற்று மொழியைப் பொறுத்த வரை, முதல் மொழியே பயிற்று மொழியாகவும் இருக்க வேண்டும் என்ற கல்வியியல் வரையறையைக் கண்டோம். இவ்வகையில் தமிழகக் கல்விக் கொள்கையில் குழப்பமே நிலவுகிறது. தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் முதல் மொழியாகத் தமிழ் கட்டாயமாக இருந்தாலும், பல பள்ளிகளில் ஆங்கிலமே பயிற்று மொழியாகக் கோலோச்சுகிறது. பிசா இப்படிக் குழப்பமான கல்விக் கொள்கை கொண்ட மாணவர்களிடம் தேர்வு நடத்தி, அவர்களுக்குரிய சராசரிப் புள்ளிகளையும் வழங்கியது.

தமிழையே முதல் மொழியாகக் கொண்ட இந்த மாணவர்களிடையே தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டவர்களுக்கும் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்டவர்களுக்கும் வேறுபாடு இருப்பதாக பிசா தேர்வு காட்டியதா? இல்லை என பிசா கூறக் கண்டோம். அங்கேயே கூறியது போல் அதற்கான காரணத்தை இப்போது ஆயப் புறப்படுவோம்.

நாம் கண்ட இவ்விரு வகைப்பட்ட மாணவர்கள் பெற்ற சராசரிப் புள்ளிகளைத் தனித் தனியே பிரித்துக் கொடுத்துள்ளது பிசா. இவ்விரு வகைப்பட்ட சராசரிப் புள்ளிகளுக்கு இடையே பெரிய இடைவெளி இல்லை. அதாவது மாணவர்கள் தமிழ்வழியில் படித்தாலும் ஆங்கிலவழியில் படித்தாலும், பெரிய வேறுபாடேதும் இல்லை என்பதைப் புள்ளி விவர அடிப்படையில் தெளிவாக மெய்ப்பித்துள்ளது பிசா.

அப்படியானால் தாய்மொழிக் கல்விக்கும் அயல்மொழிக் கல்விக்கும் இடையே பெரிய வேறுபாடேதும் இல்லையா? தாய்மொழிக் கல்வியில் படிக்கும் மாணவர்களால்தான் அயல்மொழிக் கல்வி மாணவர்களை விட நல்ல முறையில் படித்து முன்னேற முடியுமெனக் காலங்காலமாகத் தமிழகக் கல்வியாளர்களும் தமிழ்ப் பற்றாளர்களும் கூறி வருவது அபத்தமா? நமது தமிழ்ப் பற்றாளர்கள் வர்க்கச் சார்புடன் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலவழிப் பள்ளிகளுக்கு அனுப்புவது ஒரு வழியில் நியாயந்தானா? இந்தச் சிக்கலை இன்னுங்கொஞ்சம் ஆழமாகப் பார்ப்போம்.

ஒரு பள்ளிக்கூடம் நல்ல பள்ளிக்கூடம் என்றால், அந்தப் பள்ளிக்கூடத்துக்குச் செல்லும் மாணவர்கள், குறிப்பாகத் தொடக்கப் பள்ளி மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கும்மாளம் போட்டுக் கொண்டு வகுப்பறைகளில் நுழைய வேண்டும். பள்ளிக்கூடம் முடிந்ததும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வெளியேற வேண்டும். ஏனென்றால் அங்குதான் அந்தச் சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் கலந்துரையாடுவதற்கு அவர்கள் வயதையொத்த நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் தமிழக நிலவரம் என்ன? பள்ளிக்குச் செல்ல பிள்ளைகள் அடம்பிடிக்க, அவர்களைப் பெற்றோர் அடித்து உதைத்து அனுப்பி வைக்க வேண்டியுள்ளது. பள்ளி இறுதி மணி அடித்ததும் சிறைக் கதவு உடைக்கப்பட்டு வெளியேறும் கைதிகளைப் போல் பிள்ளைகள் மகிழ்ச்சிக் களிப்பில் ஆடிப் பாடிக் கொண்டு வெளியே ஓடி வருகிறார்கள், இதற்கு என்ன காரணம்?

ஆசிரியர்கள் மாணவர்களிடம் "அங்கே பார்க்காதே", "அவனைத் தொடாதே", "அவளுடன் பேசாதே" எனக் கூறி அவர்களின் இயல்பான நகைப்புப் பேச்சுக்களைக் குலைக்கிறார்கள். இவர்களும் அவர்களுடன் மகிழ்ச்சியுடன் உரையாடுவதில்லை. அப்படிப் பேசினால் மாணவர்கள் அமெரிக்கா போய்க் கணினி வேலை செய்து பணத்தைக் குவிக்க

முடியாதாம். இந்த ஆசிரியர்கள் அதனால் தானோ என்னவோ மாணவர்களைக் கணினி போன்றே கையாள்கிறார்கள். தங்களுக்குத் தெரிந்த கருத்துகளை மாணவர்களின் மூளை களில் அப்படியே பதிவேற்றம் செய்கிறார்கள். பிறகு மாணவர்களிடம் அந்தக் கருத்துகளைப் பதிவிறக்கம் செய்யச் சொல்கிறார்கள். அந்தச் சின்னஞ்சிறார்கள் இவர்கள் சாவி கொடுத்துப் பேசும் நெட்டுருப் பொம்மைகளாகிப் போகி றார்கள்.

ஒரு முறை தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கல்வியாளரும் எழுத்தாளருமான ஆயிஷா நடராஜன் கூறினார். ஒன்றாம் வகுப்பு இரண்டாம் வகுப்பு மாணவர்கள் தொலைக்காட்சியில் நடிகர் விஜய் தோன்றி னால் அப்படியே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருக்கிறார்களே, இப்படி அவர்கள் ஏன் ஆசிரியர்களைப் பார்ப்பதில்லை? கண்டிப்பு என்ற பெயரில் இறுகிப் போன ஆசிரிய முகங்களை அல்லவா மாணவர்கள் அன்றாடம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்? இத்தகைய ஆசிரியர்களிடம் மாணவர்களுக்கு என்ன கவர்ச்சி இருக்க முடியும்? அதற்கு ஆசிரியர்களும் விஜயாக மாற வேண்டும் என்கிறார் நடராஜன். அவர் கூறுவதை நிறைவேற்றுவதற்கு நமக்குள்ள வழி என்ன? ஆசிரியர்கள் ஆடிப் பாடியும், கோணங்கித் தனங்கள் செய்தும் மாணவர்களைக் கட்டிப் போட வேண்டும். இப்போது தங்களைக் கண் கொட்டாது ரசித்துக் கொண்டிருக்கும் மாண வர்களிடம் எழுத்துகளையும் எண்களையும் அழகாக அறிமுகப்படுத்த வேண்டும். இவ் விதம் பெறப்படும் அறிவை அன்றாட நடை முறைகளுடன் ஒப்புநோக்கக் கற்றுத் தர வேண்டும்.

மாணவர்கள் மேல் வகுப்புக்குச் செல்லச் செல்ல அவர்களிடம் நண்பர்களாகப் பழகி அறிவுசார் விவாதங்கள் நடத்த வேண்டும். அந்த விவாதங்களினூடாக மொழிக்கும் வாழ்வியலுக்குமான உறவை, எண்ணுக்கும் அறிவியலுக்குமான உறவை மாண்வர்களிடம் கொண்டுசெல்ல வேண்டும். இதுதான் உண்மையான படைப்புச் சிந்தனையை மாணவர்களிடம் இயற்கையாகத் தூண்டி வருங்காலத்தில் அவர்களை உண்மையான படைப்பாளிகளாக்கும், பெரும் அறிவியலர் களாக்கும்.

இப்படி ஆட்டம் பாட்டம் போட்டு மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் கற்றுத் தந்து, நட்பார்ந்த விவாதங்கள் நடத்தி அவர் களின் அறிவூற்றை இயல்பாகச் சுரக்கச் செய்கிற ஓர் ஆசிரியப் பண்பாட்டை, கல்விப் பண்பாட்டை நாம் வளர்த்தெடுக்க வேண்டு மானால் அது தாய்மொழிக் கல்வியில் மட்டுமே கைகூடும். அப்போது அங்கு பதிவேற்றக் கல்விமுறைக்கும் வழியிருக்காது, ஆங்கிலவழிப் பயிற்றுவிப்புக்கும் வழியிருக்காது.

பிசாவின் சராசரிப் புள்ளிகள் தமிழ்வழிக் கல்வி மாணவர்களுக்கும் ஆங்கிலவழிக் கல்வி மாணவர்களுக்கும் ஏறத்தாழ ஒன்றாக இருப் பதற்கான காரணம் இப்போது புரிகிறது அல்லவா? படைப்பாற்றலற்ற நெட்டுருக் கல்வி எனும் போது இரு கல்வி முறைகளுக்கும் பெரிய வேறுபாடு இல்லாமல் போகிறது. எனவேதான் பிசா வினவும் நடைமுறை சார்ந்த வினாக்களுக்கு இரு வகை மாணவர் களுமே திணறிப் போனார்கள். தமிழ்வழிக் கல்வி மாணவர்களால் இந்தத் தேர்வு முறை யில் பெரிதாக சாதிக்க முடியாது போகிறது. இதனை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள ஒரு நல்ல எடுத்துக்காட்டைப் பார்ப்போம்.

பெரும்பாலான மனிதர்கள் வலக்கைப் பழக்கமுடையவர்கள். உயிரியலின்படி, மனிதர்கள் தங்கள் வலக்கையால் வேலை களைச் செய்யும்படித் தூண்டப்படுகிறார்கள். எளிய வேலைகளைச் செய்கையில் வலக்கைப் பழக்கம் என்பது ஓர் இயற்கை வலிமை என்னும் உண்மை நமக்குப் புலப்படுவதில்லை. வேலைகளின் கடினப்பாடு கூடக் கூட நமக்கு வலக்கை வலிமை புலப்படத் தொடங்குகிறது. தரையிலிருக்கும் புத்தகத்தை மேசையில் எடுத்து வைத்தல், கதவுத் தாழ்ப்பாளைத்



திறத்தல், தலை சீவுதல் போன்ற எளிய காரியங்களைச் செய்யும் போது நமக்கு இடக்கை, வலக்கை இரண்டும் கிட்டத்தட்ட ஒரே அளவுத் திறனுடன் வேலை செய்கின்றன. அப்போது நமக்கு வலக்கையின் உண்மை வலிமை தெரிவதில்லை. ஆனால் கணினிச் சுண்டெலியை இயக்குதல், திருகாணிகளை இறுக்குதல் போன்ற இன்னும் சற்றுக் கடினமான வேலைகளுக்குச் செல்லும் போது இடக்கை கொஞ்சம் திணறுகிறது. அப்போதும் வலக்கை அதே திறனுடன் வேலை செய்கிறது. துப்பாக்கி சுடுதல், எழுதுதல், கேரம் விளையாடுதல், கில்லி விளையாடுதல், ஓவியம் தீட்டுதல், தப்படித்தல், அறுவை சிகிச்சை செய்தல், சிற்பம் செதுக்குதல் என இன்னும் இன்னும் கடினப்பாடும் துல்லியப்பாடும் நிறைந்த வேலைகளுக்குச் செல்லச் செல்ல இடக்கை கிட்டத்தட்ட செயலற்றுப் போகிறது. ஆனால் வலக்கையோ மென்மேலும் அதிகத் துல்லியத்துடனும் வேகத்துடனும் திறனுடனும் நேர்த்தியாக வேலை செய்கிறது. ஒன்றுக்கும் உதவாத வேலைகளைச் செய்யும் போது நல்ல திறனாளி போன்று நம்மை ஏமாற்றும் இடக்கை நுணுக்கமான வேலைகளைச் செய்யும்போது மாட்டிக் கொண்டு முழிக்கிறது அல்லவா? அதே போல் ஒன்றுக்கும் உதவாத வேலைகளைச் செய்யும் போது இடக்கையொத்த ஏதுமறியாத் திறனாளி போன்று நம்மை ஏமாற்றும் வலக்கை நுணுக்கமான வேலைகளைச் செய்யும் போது மாபெரும் படைப்பாளியாகி நம்மை வியக்க வைக்கிறது அல்லவா? ஆக, இயற்கைக் கைத்திறன்கள் கொஞ்சி விளையாடும் இடத்தில் வலக்கைக்கு இடக்கை என்றுமே மாற்றீடு ஆக முடியாது. (இயற்கையாக இடக்கைப் பழக்கம் உள்ளவர்கள் வலக்கையை இடக்கை என்றும் இடக்கையை வலக்கை என்றும் மாற்றிப் படித்துக் கொள்ளலாம்.)

இந்த உருவகம் அப்படியே நமது பயிற்றுமொழிக் குழப்பத்துக்கும் விடையளிக்கிறது. ஒன்றுக்கும் உதவாத நெட்டுருக் கல்வி எனும் போது ஆங்கிலவழிப் பயிற்றுவிப்புக்கும் தமிழ்வழிப் பயிற்றுவிப்புக்கும் பெரிய வேறுபாடு தெரிவதில்லை. ஆனால் நாம் மேலே கண்டவாறு மாணவர்களிடம் நகைப்புற, நட்புறப் பழகி படைப்பறிவைச் சுரக்கச் செய்யும் கல்வி நோக்கிச் செல்லச் செல்ல ஆங்கில வழிப் பயிற்றுவிப்பு கதிகலங்கித் திணறத் தொடங்கும். ஆங்கிலவழியில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் மாட்டிக் கொண்டு விழி பிதுங்கி நிற்பர். அவர்களால் எப்படி நகைச்சுவை பொங்க மாணவர்களிடம் கலந்துரையாட முடியும்? அங்கு அந்த ஆசிரியர்களுக்குத் தமிழன்னை மட்டுமே கைகொடுப்பாள்.

ஒரு தாயால் குழந்தையை ஆங்கிலத்தில் கொஞ்ச முடியுமா? அன்புக் கணவன் இறந்து கிடக்கையில் மனைவியால் ஆங்கிலத்தில் ஒப்பாரி வைக்க முடியுமா? பீறிட்டுக் கிளம்பும் இயற்கை உணர்வின் இடத்தைத் தாய்மொழி



தவிர வேறெந்த மொழியாலும் நிரப்ப முடியாது. இதுவே பட்டறிவு உண்மை எனும் போது, உணர்வு நிலையை வெளிப்படுத்துவதற்குக் கூட ஆங்கில மொழி உதவாது எனும்போது, உணர்வு நிலை கடந்து படைப்பாற்றல் அறிவியலின் உச்ச நிலையை அடைவதற்கு ஆங்கிலம் எப்படி உதவ முடியும்? ஆங்கு தாய்த் தமிழ் தவிர வேறொரு மொழியை எப்படி நினைத்துப் பார்க்க முடியும்? ஆனால் இயற்கைவழி அறிவுக்குப் புறம்பான நெட்டுருக் கல்வி முறையில்தான் தமிழ்வழிக்கும் ஆங்கிலவழிக்கும் வேறுபாடு இல்லாது போகிறது.

சுருங்கச் சொன்னால், நுணுக்கத் திறனற்ற எளிய வேலை எனும் போது இடக்கைக்குச் சமமாக இயங்குவது போன்று தோற்றமளிக்கும் வலக்கை எவ்வாறு உயர்திற வேலை நோக்கிச் செல்லும் போது இடக்கையைப் புறந்தள்ளி பெரும் வல்லமையுடன் திகழ்கிறதோ அவ்வாறே உயிர்ப்பற்ற நெட்டுருப் போட்டுப் படிக்கும் பள்ளிச் சூழலில் ஆங்கிலவழிக் கல்விக்குச் சமமாக இருப்பது போல் தோற்றமளிக்கும் தமிழ்வழிக் கல்விக்கு அறிவூற்று பொங்கும் உயிர்ப்பான படைப்பாற்றலைப் பயிற்றுவிக்கும் ஒரு பள்ளிச் சூழல் வாய்க்குமானால், அது ஆங்கிலவழியைப் புறந்தள்ளித் தனக்கேயுரிய கல்வி அரியணையில் கட்டாயம் அமரும்.

தமிழகப் புறச்சூழலில் பன்னாட்டுக் குழுமங்கள் ஆனாலும், தனியார்க் குழுமங்கள் ஆனாலும், அரசுத்துறை ஆனாலும், அவை அனைத்தும் வேலைவாய்ப்பு என வரும் போது ஆங்கிலத்தை முன்னிறுத்துகின்றன.

இந்தியாவை நோக்கிப் படையெடுக்கும் பன்னாட்டுக் குழுமம் எதற்கும் படைப்பாற்றல் மிக்க ஊழியர்கள் தேவையில்லை. அவற்றுக்குத் தாங்கள் இட்ட பணியைச் செவ்வனே செய்து முடிக்க டெக்னோக்ரேட்டுகள் என்ற பெயரில் நல்ல தொழில்நுட்பக் கூலிகள் தேவை, அவ்வளவுதான்.

இந்தியாவின் தனியார்க் குழுமங்களுக்கு, குறிப்பாக இப்போது புதிதாகப் பெருகி வரும் மென்பொருள் குழுமங்களுக்கு அறிவியல் வயப்பட்டுத் தனித்துச் சிந்திக்கும் பேறறிவாளர்கள் தேவையில்லை. அவற்றுக்குப் பன்னாட்டுக் குழுமங்களிடம் ஒப்புக் கொண்ட வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடிப்பதற்கு நல்ல அறிவுக் கூலிகள் தேவை, அவ்வளவுதான். இந்தியர்களால் படைப்பாற்றல் மிக்க ஒரு மென்பொருள் பண்டத்தை ஒருபோதும் உற்பத்தி செய்ய முடியாது என்கிறார் இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் இயக்குனர் நந்தன் நிலேகனி. அனைவரும் பீற்றிக் கொள்வது போல் பெங்களூர் ஒன்றும் சிலிக்கான் பள்ளத்தாக்கு (silicon valley) இல்லை, உள்ளபடியே அது பன்னாட்டுக் குழுமங்களுக்குத் தேவையான மென்பொருள் பண்டங்களை உற்பத்தி செய்து தரும் கூலிப் பள்ளத்தாக்கு (coolie valley) மட்டுமே என்கிறார் பெங்களூரைச் சேர்ந்த ஒரு மென்பொருள் குழுமத்தின் இயக்குநராகிய ஜி. வி. தசரதி. இந்த மென்பொருள் குழுமங்களின் 'அறிவு' சாகசங்கள் பற்றிப் பேசுவதற்கு ஒரு தனிக் கட்டுரையே எழுத வேண்டும்.

இந்திய அதிகார வர்க்கம் மக்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தாது அவர்களை அடக்கி ஒடுக்குவதில் கவனம் செலுத்தும் நிறுவனமாக இயங்குகிறபடியால், அதற்குங்கூட தனது பணியிடங்களில் வேலை செய்வதற்கு நாட்டை வளர்ச்சிப் போக்கில் கொண்டு செல்லும் முற்போக்குப் பணியாளர்கள் தேவையில்லை. அது நிறைவேற்றும் மக்கள் விரோதப் பணிகளைக் கேள்வி கேட்காது நிறைவேற்றித் தருவதற்கு நல்ல ஆட்டு மந்தைக் கூலிகள் தேவை, அவ்வளவுதான்.

இந்த அடிப்படையில்தான் மத்திய, மாநில அரசுகள் பன்னாட்டுக் குழுமங்களைக் கூவி அழைக்கின்றன. இந்தியாவின் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங் எந்த வெளிநாட்டுக்குச் சென்றாலும் இந்தியாவில் நன்கு ஆங்கிலம் தெரிந்த பெரும் பட்டாளம் இருப்பதால் இங்கு நீங்கள் நன்னம்பிக்கையுடன்

கடை விரிக்கலாம் என வெளிப்படையாக அழைக்கிறார். இங்கு நமது முதல்வராகிய 'இரும்புப் பெண்மணி' ஜெயலலிதா 'விஷன் 2023' என்னும் அறிக்கையை வெளியிட்டார். அதாவது 2023இல் தமிழகம் எப்படி இருக்கப் போகிறது எனக் கனவு காண்கிறாராம். வேறென்ன? அந்த ஆண்டுக்குள் தமிழகம் முழுவதையும் பன்னாட்டு பகாசுரக் குழுமங் களுக்குப் பங்கு போட்டு விற்று விட வேண்டும் என்பதே அந்தப் பெருங்கனவு. இதற்காக அவர்களை அழைக்கும் ஜெய லலிதாவும் இங்கு தமிழ்நாட்டில் ஆங்கிலத்தில் நன்கு கற்றுத் தேர்ந்த பெரும் உழைப்புப் பட்டாளம் இருப்பதாகப் பீற்றிக் கொள்கிறார். மன்மோகனுக்கு எதிராக ஜெயலலிதா எப்போதும் மல்லுக்கு நின்றாலும் இருவருக்கும் இலட்சியம் என்னவோ ஆங்கில இந்தியாவை உருவாக்குவதுதான்!

ஆகவே பன்னாட்டுக் குழுமங்களுக்கும் தனியார்க் குழுமங்களுக்கும் அரசுத் துறைகளுக்கும் ஆங்கிலத்தில் நெட்டுருப் போட்டு படித்த அறிவுக்கூலிப் பட்டாளம் தேவைப்படுகிறது. இதன் தொடர்விளைவாக, இந்தப் பட்டாளத்தில் எப்பாடுபட்டேனும் ஒரு கூலியாகி விட வேண்டுமென்ற தன்னலப் போட்டி நமது தமிழ்ப் பெற்றோர்களிடமும் மாணவர்களிடமும் பெருகி வருகிறது. இதன் தொடர்விளைவாக, இத்தகைய இயந்திரத் தனமான கூலிப் பட்டாளத்தை உருவாக்கித் தரும் தொழிற்கூடங்களாக நமது கல்விக் கூடங்கள் உருப்பெற்று வருகின்றன. இதன் தொடர்விளைவாகவே தமிழன்னையைக் கொன்று புதைத்து உருவாகும் கல்லறைகளின் மேல் புதுப் புது ஆங்கிலவழி வணிகக் கூடங்கள் புற்றீசல்கள் போல் பெருகி வரு கின்றன. ஆக, இந்தத் தொடர்விளைவுகளைப் பிணைக்கும் நச்சுச் சங்கிலியாக ஆங்கிலம் திகழ்கிறது. இந்த நச்சுச் சங்கிலியை வெட்டும் கோடலி தமிழாகத்தான் இருக்க முடியும்.

"நீங்கள் ஏன் திரைப் பாடல்கள் எழுதுவ தில்லை" என ஒரு முறை கவிஞர் அப்துல் ரகுமானிடம் கேட்ட போது, "அம்மி கொத்த சிற்பி எதற்கு?" என்றார். பன்னாட்டுக் குழுமங்களிடமும் தனியார்க் குழுமங்களிடமும் அறிவு அடிமைகளாய்ப் பணியாற்றுவதற்கு அந்தப் பன்னாட்டு ஆண்டைகளின் ஆங்கிலமே போதுமானது, நமது செம்மொழித் தமிழ் தேவையில்லை.

"நாம் மட்டும் அந்தக் காலத்தில் ஆங்கி லத்தில் கற்றுத் தேறியிருக்கா விட்டால் இன்று நம்மால் அனைத்துத் துறைகளிலும் இவ்வளவு சாதனைகள் புரிந்திருக்க முடியுமா?" என இன்று பல சமூகநீதிச் சிந்தனையர்களும் கேட்கிறார்கள். ஒடுக்குண்ட மக்கள் ஆங்கி லத்தில் படித்தால்தான் அவர்களால் பன்னாட்டு, தனியார்க் குழுமங்களின் வேலை வாய்ப்புகளைக் கைப்பற்ற முடியுமெனப் பல தலித்தியச் சிந்தனையர்களும் இன்று கூறி வருகின்றனர்.

தமிழ்வழிக் கல்வி மூலமாக நிகழ்த்தக் கூடிய அதே சாதனைகளை ஆங்கிலவழிக் கல்வி மூலமாகவும் சாதித்துக் காட்ட முடியுமானால் தாய்மொழிக் கல்விக்கான தேவையே இல்லை என்னும் முடிவுக்குப் பல சமூகநீதிச் சிந்தனை யர்களும் வந்து சேர்கிறார்கள். ஆனால் இவர்கள் சாதனைகள் எனக் கருதுவது உள்ள படியே சாதனைகள்தாமா? பிசா, அசர் அறிக்கைகள் நமது ஒடுக்குண்ட மக்களின் கல்வித் தரத்தை உலகின் அதல பாதாளத்தில் கொண்டு போய் நிறுத்தியுள்ளனவே, இனியும் அவற்றைச் சாதனைகள் என எவரும் கூற முடியுமா?

நாம் மேலே கண்ட ஒரு முக்கிய வினாவுக்கு விடை கண்டால் இதற்கும் விடை கிடைக்கும். அது துல்லியமான விடையாகவும் இருக்கும். சமூகப் பொருளியல் பண்பாட்டுக் காரணி களுக்கும் கல்வித் தரத்துக்கும் இடையில் தமிழகத்தில் வேறுபாடேதும் இல்லை என பிசா அறிக்கை கூறுகிறதே, அப்படியானால் கல்வி வேறுபாட்டை ஒழிப்பதில் உலகத் தரத்துக்குத் தமிழகம் முன்னேறி விட்டதா? என நாம் கேட்டிருந்தோம். உலகக் கல்வித் தர வரிசைப் பட்டியலில் முதலிடங்களில் காணப்படும் நாடுகள் இந்த வேறுபாட்டை

ஒழித்து முன்னேறியுள்ளது என பிசா சொல்வதில் தருக்கமுள்ளது. ஆனால் உலகத் தரவரிசைப் பட்டியலில் கடைசியில் இருக்கும் தமிழகத்தில் இந்த வேறுபாடே இல்லை என பிசா சொல்கிறதே, இதில் என்ன ஏரணம் இருக்க முடியும்?

அந்த உலக நாடுகள் கல்வியில் கடைப் பிடிக்கும் சனநாயகம் அனைத்து வர்க்க மாணவர்களின் கல்வியைச் சமப்படுத்தி யுள்ளது. அப்படியானால் சாதியத் தமிழகமும் கல்வியைச் சமப்படுத்தியுள்ளதா? இங்குதான் ஒரு முக்கிய வேறுபாடு உள்ளது. அந்த நாடுகள் தரமிக்க ஒரு கல்வியை மாணவர் களிடம் சமப்படுத்தியுள்ளன. ஆனால் இங்கு தமிழகத்தில் தரமற்ற கல்வி மாணவர்களிடையே சமப்படுத்தப்பட்டுள்ளது. வருணாசிரமத்தின், பார்ப்பனியத்தின் கோர முகம் இங்குதான் வெளிப்படுகிறது. பார்ப்பனியம் பிறப்பின் அடிப்படையில் அறிவை முடிவு செய்கிறது. ஒரு பார்ப்பனர் எவ்வளவு பெரிய முட்டாளாக இருந்தாலும் பிறப்பின் அடிப்படையில் மேலான இடத்துக்குச் செல்கிறார். ஒரு தாழ்த்தப்பட்டவர் எவ்வளவு பெரிய மேதை யாக இருந்தாலும் பிறப்பின் அடிப்படையில் கீழான இடத்துக்குச் செல்கிறார். இயல்பிலேயே கல்வித் தரப்படுத்தல்களுக்குப் புறம்பான பார்ப்பனியம் என்ன செய்கிறது? அது தவிர்க்கவியலாது தனது கல்வித் தரமின்மை யையே மொத்தச் சமூகத்தின் உயர் கல்வித் தரமாக முன்னிறுத்துகிறது. அதனையே கல்வித் தரத்தின் அடிப்படை அளவுகோலாக்கு கிறது.

இந்த அளவுகோலை அடிப்படையாகக் கொண்டுதான் பார்ப்பனர்களால் பிறப்பின் அடிப்படையிலான தகுதியை மட்டும் வைத்துக் கொண்டு தங்களைப் பெரிய மேதைகள் போலக் காட்டிக் கொள்ள முடிகிறது, எத்தகைய ஆழ் சிந்தனையுமற்று நுனிப்புல் மேயும் திறனையே தங்களின் கூர்த்த அறிவு போல் படம் காட்ட முடிகிறது, வேதக் காலந்தொட்டு சமற்கிருத சுலோகங் களை நெட்டுருப் போட்டு ஒப்புவித்துப் பெற்ற அறிவை மட்டும் வைத்துக் கொண்டு மாமேதைகள் போல் வலம் வர முடிகிறது. எனவேதான் பார்ப்பனர்களால் இந்த அளவு கோலையே வேலைத்திறனுக்கு அடிப்படை யாக வைக்கும் பன்னாட்டுக் குழுமங்களிலும் தனியார்க் குழுமங்களிலும் வெற்றிகரமாக நுழைந்து அனைத்து உயரிடங்களையும் கைப்பற்றிக் கொள்ள முடிகிறது. இந்தத் தொழில்நுட்பக் கூலி வேலைகளைக் கைப் பற்றிக் கொள்ளும் மேனாமினுக்கிச் சாதனை களையே தங்கள் வாழ்நாள் சாதனைகளாகக் காட்டிக் கொள்ள முடிகிறது.

ஏதோ சிறிதளவு கல்வித் தரத்தைச் சமப் படுத்த முயன்ற சமச்சீர்க் கல்வித் திட்டத்தைக் கூட வர விடாது தடுப்பதற்கு அதிமுக ஜெய லலிதா, இந்து ராம், துக்ளக் சோ, தினமலர் கிருஷ்ணமூர்த்தி, பாஜக இல. கணேசன் என அனைத்துப் பார்ப்பனியச் சக்திகளும் வரிந்து கட்டிக் கொண்டு நின்றதைக் கண் முன் கண்டோம் அல்லவா? சமக் கல்வித் தரம் என்னும் சொல்லாடலே பார்ப்பனியச் சக்திகளுக்கு வேம்பாய்க் கசப்பதைத்தான் இந்நிகழ்வு நமக்குத் தெளிவாய் உணர்த்துகிறது.

முதலில் குழப்பம் ஏற்படுவதாகத் தெரிந்த பிசாவின் புள்ளிவிவரங்கள் உள்ளபடியே இப்போது உண்மையான தமிழ்க் கல்விச் சூழலைப் புரிந்து கொள்ள உதவியுள்ளன. ஆங்கிலவழிக் கல்வி மாணவர்களும் தமிழ் வழிக் கல்வி மாணவர்களும் ஒரே தரத்தில் இருப்பதற்கான காரணம் இப்போது நமக்கு இன்னுந்தெளிவாக விளங்கி விட்டது. எல்லா வற்றையும் விட, எது உண்மைச் சாதனை என விடை காணப் புறப்பட்ட நமக்கு இப் போது பிசா புள்ளி விவரங்கள் சரியான புரிதலையே அளித்துள்ளன.

பன்னாட்டு, தனியார்க் குழுமங்களில் பார்ப் பனர்கள் தன்னல வெறியுடன் கைப்பறிக் கொண்ட வேலைகளை ஒடுக்குண்ட மக்கள் துரத்திப் பிடிப்பது எப்படிச் சாதனையாக இருக்க முடியும்? பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப் பட்ட வகுப்புகளில் பிறந்து இடஒதுக்கீட்டால் இன்று உயர்குடியாக்கம் பெற்றுள்ள மேட்டுக்

குடிகளும், சாதி மறுத்தாலும் வர்க்கம் மறுக்காத போலித் தமிழ்ப் பற்றாளர்களும் இன்று நவீனப் பார்ப்பனர்களாக உரு வெடுத்துப் பார்ப்பனர்களின் மேனாமினுக்கிச் சாதனைகளைச் செய்து காட்டுவதற்குக் களமிறங்கியிருப்பதும், பார்ப்பனியத்தின் பொய்யான கல்வித் தரத்தில் மயங்கி விழுந்து கிடப்பதும் உண்மையே!

"அங்கே போகாதே!", "அவனிடம் பேசாதே" என்பதே ஒவ்வொரு பார்ப்பனக் குடும்பத்திலும் அன்றாடம் ஒலிக்கும் காயத்திரி மந்திரம். பார்ப்பனப் பெற்றோர் இந்த மந்திரத்தை ஓதித் தங்கள் பிள்ளைகளைக் கல்விச் சூதாட்டத்தில் நெட்டித் தள்ளுகிறார்கள். இத்தகைய சூழ் நிலை வாய்க்கப் பெறவில்லை என்றாலும் செல்வச் செழிப்பில் முன்னேறி விட்ட பிற சாதிப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கிடுக்கிப் பிடி போட்டுப் படிக்க வைக்கும் நாமக்கல் பள்ளித் தொழுவங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். கல்விச் சூதாட்டத்தில் பல வெற்றிகளைக் குவித்து வந்துள்ள பார்ப்பனக் குடும்பங்களின் சூழலைச் சிந்தாமல் சிதறாமல் அப்படியே பிறசாதிச் செல்வந்தப் பெற்றோர் களுக்கு நாமக்கல் பிராய்லர் பள்ளிகள் உரு வாக்கித் தருகின்றன.

ஆனால் சமூகநீதியில் மெய்ந்நம்பிக்கை வைத்துள்ள எவரும் இந்தக் கல்விச் சூதாட் டத்தையே அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக் குமான கல்வித் தரமாக்குவது எப்படி நியாயம்? இது வருணாசிரமம் வலியுறுத்தும் குறுங்குழுச் சாதனைக்கு வழிவகுக்குமேயன்றி மொத்தச் சமூகச் சாதனைக்கு ஒருபோதும் வழிவகுக்காது.

பார்ப்பனர்களின் 'சாதனைகளுக்கு' அடிப் படையாகத் திகழ்கிற ஒரு கல்வித் தரத்தையே ஒடுக்குண்ட மக்களுக்குமான அளவு கோலாகவும் ஏற்றுக் கொள்ளும் பிழைப் பார்வைதான் இன்று ஒடுக்குண்ட மக்களையும் பார்ப்பனர்கள் உருவாக்கி வைத்திருக்கும் இந்தத் தரங்கெட்டக் கல்விச் சகதியில் கொண்டு போய்ப் புதைத்து விட்டது. தரங் கெட்ட இந்தக் கல்விக்கூடங்களில் இட ஒதுக்கீடு கேட்பதை மட்டுமே ஒற்றைச் சமூகநீதிக் கொள்கையாகப் பின்பற்றுவதும், சாதியம் காக்கும் ஆங்கிவழிக் கல்வியை ஒழித்துக் கட்டிச் சமத்துவம் படைத்துக் காட்டும் மாற்றுக் கல்வித் திட்டமாகிய ஒரு சனநாயகக் கல்வித் திட்டம் குறித்துச் சிந்திக்காததுமே இன்று ஒடுக்குண்ட மக்களையும் பார்ப்பனர்களைப் போன்று அறிவுக் குருடர்களாக்கி விட்டன.

இயற்கையாக நல்ல தமிழ் பேசி இயற்கை சார்ந்த படைப்பாற்றல் மிக்க உன்னத வாழ்க்கை வாழ்ந்து வரும் ஒடுக்குண்ட உழைக்கும் மக்களுக்குப் பார்ப்பனர்களின் ஆங்கிலவழி நெட்டுருக் கல்வி முறை ஒரு படித்தரமாக ஒரு போதும் இருக்க முடியாது. மாறாக, அவர்களின் இயற்கை சார்ந்த படைப்புச் சிந்தனைக்கேற்ற ஒரு மாற்றுக் கல்வித் தரத்தையும், ஒரு முற் போக்குக் கல்விக் கொள்கையையும் அளவு கோலாக முன்னிறுத்தினால் மட்டுமே நம்மால் அறிவியல் நோக்குடைய பள்ளி மாணவர்களை உருவாக்கிக் காட்ட முடியும். அத்தகைய உலகத் தரமான தமிழ்ப் பிள்ளைகளை உருவாக்கித் தரும் அறிவுப் பட்டறைகளாகத் தமிழ்வழிப் பள்ளிக் கூடங்கள் மட்டுமே திகழ முடியும்.

எனவே தமிழகச் சமூகநீதிப் போராளிகள் வெறுமனே தமிழ்வழிக் கல்விக்காக மட்டும் போராடுவது தமிழைக் கல்வி அரியணையில் கொண்டுபோய்ச் சேர்க்காது. மாணவர்களிடம் இயற்கைவழியில் அறிவைக் கொண்டு போய்ச் சேர்க்கிற ஒரு கல்வித் திட்டத்தை, ஆசிரியர் களிடம் சனநாயக வழியில் அறிவு புகட்டுகிற ஒரு கல்விப் பண்பாட்டை நாம் தமிழகத்தில் நிறுவிக் காட்டி விட்டால் போதும், பிறகு எண்ணும் எழுத்தும் தமிழ்வழியில் வேண்டும் என்பதற்காகத் தனித்துப் போராடும் தேவை அருகி விடும். அப்போது பிசா உள்ளிட்ட உலகின் எந்தக் கல்வி அறிக்கையும் காலங் காலமாய்ப் பார்ப்பனியத்தால் ஒடுக்கப்பட்ட நம் மாணவர்களின் பார்ப்பனர்கள் உள்ளிட்ட நம் தமிழர்களின் கல்வித் தரத்தை உலகின் அறிவுக் கொடுமுடியில் கொண்டுபோய் நிற்க வைக்கும். ❖

# ஐ.நா மனித உரிமைச்சபைத் தீர்மானமும் தமிழர் தரப்பின் நிலைப்பாடும்: புலம்பெயர் தமிழர் அமைப்புகள் கூட்டறிக்கை!

சிறிலங்கா தொடர்பில் ஐ.நா மனித உரிமைச்சபையில் சமீபத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் தொடர்பில் புலம்பெயர் தேசங்களை தளமாக கொண்டு இயங்குகின்ற நாடுகடந்த தமிழீழ அராசங்கம் மற்றும் தமிழர் அமைப்புக்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அனைத் துலக விவகாரங்களுக்கான அமைச்சு, பிரித் தானிய தமிழர் பேரவை, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை, இலங்கைத் தமிழச் சங்கம், இலங்கையில் சமத்துவம் மற்றும் உதவிக்கான மக்கள் அமைப்பு, இலங்கையில் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஐக்கிய குழு, அமரிக்கத் தமிழர் அரசியற் செயலவை, உலகத் தமிழ் இயக்கம் ஆகியன ஒன்றிணைந்து கூட் டாக இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளன.

**அறிக்கையின் முக்கிய விடயங்கள் :**

மோசமான மனித உரிமை மீறல்கள், துஷ் பிரயோகங்கள் மற்றும் அதனுடன் தொடர் புடைய குற்றங்கள் இடம்பெற்றமை தொடர் பான உண்மைகள் மற்றும் சூழமைவுகள் குறித்து விசாரணை செய்து நிரூபிப்பதற்காக சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஸ்தாபிக்கப்படுகின்றமையை நாம் வரவேற் கின்றோம்.

2014 மார்ச் 27 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இது தொடர்பாக நிறைவேறிய தீர்மானம் பரந்த, சர்வதேச விசாரணைக்கு வழி வகுக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்கு முந்திய காலத்தையும் 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னரான காலத்தையும் கூட விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என நாம் கோருகின்றோம்.


2009ம் ஆண்டில் சில மாதங்களில் இடம் பெற்ற 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர் களின் படுகொலை பற்றிய மறைப்புகள், இழப்பீடுகள், இன்னும் கணக்கெடுக்கப்பாமல் இருக்கும் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 தமிழர்களின் தலைவிதி, தப்பிப் பிழைத்த மற்றும் பாதிக்கப்பட்ட நிலையில் நீதியை எதிர்பார்த்திருப்போரின் விளக்கங்கள் ஆகி யவை பற்றி எல்லாம் இந்தத் தீர்மானத்தில் அதிக பிரதிபலிப்புகள் அமைந்திருக்க வேண்டும் என நாம் எதிர்பார்த்திருந்தோம்.

இந்தப் பிரேரணையை நிறைவேற்றுவதற்காக அதற்கு ஆதரவாக வாக்களித்த 23 நாடுகளின் முயற்சிகளை உலகம் முழுவதும் இருக்கும் தமிழர்கள் பாராட்டும் அதேவேளை, சர்வதேச விசாரணை நிறுவப்படுவதற்கு எதிரான இந்திய நிலைப்பாடு குறித்து நாம் கவலை யுமடைகின்றோம்.

ஈழத் தமிழர்களோடு தனித்துவமான கலாசாரப் பிணைப்பையும் அறிவு சார் நல்லுறவையும் கொண்டமைந்த சரித்திரத்தையும் தைரியத்தையும் கொண்ட நாடு இந்தியா. அது, இந்தப் பிரேரணையில் வாக்களிக்காமல் விட்டமையும் பிரேரணையில் விசாரணை முறைமையை ஏற்படுத்துவது தொடர்பான செயற்பாட்டுப் பந்திக்கு எதிராக வாக்களித்தமையும் எமக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தந்திருக்கின்றது. மேலும் தமிழர் பிரதேசம சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்கியிருக்கின்றமையையும் வடக்கு – கிழக்கு இராணுவ ஆதிக்கத்திலிருந்து அவசரமாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதையும் போதியளவில் வெளிப்படுத்துவதில் இந்தப் பிரேரணை குறைவாகவே உள்ளது.

அளவுக்கு மீறிய இராணுவப் பிரசன்னமானது தமிழர் பிரதேசத்தில் தொடரும் நிலப் பறிப்பு, அரச உதவியுடனான குடிப்பரம்பல் மாற்றம், பூர்வீக சொத்துக்கள், பாடசாலைகள், கோயில்கள் போன்றவை அழிக்கப்படல், தமிழ் மக்கள் மீதான கட்டாயகருக்கலைப்பு, தண்டனை விலக்களிப்புடனான பாலியல் வன்முறைகள் போன்றவற்றுக்கு வழிகோலியிருக்கின்றது.இவை காரணமாகவும் பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை பொறிமுறைக்கு அரசு வலுவுடன் போடக்கூடிய தடைகள் காரணமாகவும் சாட்சிகள், தப்பிப்பிழைத்தோர், மனித உரிமைகளுக்காக செயற்படுவோர் போன்றோரின் உடல் ரீதியான பாதுகாப்பையும் கௌரவத்தையும் உறுதிப்படுத்தக் கூடிய ஒரு பொறிமுறையை உருவாக்குமாறு நாம் ஐ.நா.வைக் கோருகின்றோம்.

ஐ.நா. சாசனத்தின் 99ஆம் பிரிவின் வழியே இந்த விவகாரத்தை கையாளுமாறு ஐ.நா. செயலாளர் நாயகத்தைக் கோருகின்றோம். இலங்கைத் தீவில் தமிழ் இனத்துவத்தை சிதைத்து, தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்பை மேற்கொள்வதை அடிப்படை இலக்காகக் கொண்டு, இலங்கையில் அடுத்தடுத்து வரும் அரசுகள் தொடர்ந்தும்


Joint Statement on UNHRC Resolution 25/1 on Sri Lanka

பரவலாகவும் மேற்கொண்டு வரும் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களே இலங்கைப் பிரச்சினைக்கு மூலவேர் என்பதை நாம் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.


சிறிலங்காவின் சட்டவாட்சி என்பது இனவாத மேலாண்மையால் செழுமை பெற்ற சிறிலங்கா அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டது.அதிகாரப் பரவலாக்கலில் தவறிவிட்டதாக இலங்கை உயர் நீதிமன்றத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கும் 13 ஆவது திருத்தம்தான் ஒரே மார்க்கமாக இந்த ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் பிரேரணை ஏற்றுக் கொண்டிருக்கின்றமை குறித்து நாம் வேதனையடைகின்றோம்.

1972 ஆம் ஆண்டு அரசமைப்பு, 1978 ஆம் ஆண்டு அரசமைப்பு, அதன் 13 ஆவது திருத்தம் போன்றவற்றின் உருவாக்கம் எதிலும் தமிழர்கள் பங்குபற்றவேயில்லை.எனவே, தமிழ் மக்கள் தங்களின் பெருவிருப்பினை எந்தத் தடைகளும் இன்றி வெளிப்படுத்தக் கூடிய சனநாயக இடைவெளி ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு சர்வதேச சமூகத்தை நாம் கோருகின்றோம்.

அப்படிச் செய்தால் மட்டுமே, சர்வதேச விசாரணை மூலம் பொறுப்புக் கூறக் கூடிய விதத்தில் பயனேதும் கிட்டுமானால், அது நீடிப்பதோடு இந்தத் தீவில் மக்களுக்கான நிலைத்த அரசியல் தீர்வாகவும் மாறமுடியும்.

இவ்வாறு வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ❖

■ பாரி



# மீத்தேன் எரிவாயுத் திட்டத்தால் காவிரிப் படுகை பாலைவனமாகும்!

இரண்டாம் உலகப் போருக்குப் பின் பன்னாட்டு வல்லரசுகள் புதிய காலனியக் கொள்கையைப் பல துறைகளிலும் புகுத்தி வருகின்றன. வல்லரசு நாடுகள் தேசிய இன மக்களின் மரபு சார்ந்த உணவு, மருத்துவம், வேளாண்மை, தட்ப வெட்பம் போன்ற அனைத்து நிலைகளிலும் மாற்றம் செய்கின்றன. அதன்மூலம் இவற்றுக்கெல்லாம் தம்மைச் சார்ந்திருக்கும் நிலையை அவ்வரசுகள் தோற்றுவிக்கின்றன.

தமிழக மக்கள் தங்களது சொந்த மருத்துவ முறையான சித்தா, யோகா, வர்மம் ஆகியவற்றினை இழந்து அலோபதி மருத்துவத்தைச் சார்ந்து இருப்பதாலேயே பல்வேறு நோய்களுக்கு ஆட்பட்டுள்ளனர். காரணம், அம்மருத்துவம் நோய் நாடி நோய் முதல் நாடி எனும் அடிப்படையிலானது அன்று. அது நோயினை அப்போதைக்கு தணிக்கும், தள்ளிப் போடுமே தவிர அடியோடு களையவில்லை என்பது இன்று புரிய வைக்க வேண்டிய செய்தியும் அன்று.

இந்திய அரசு பசுமைப் புரட்சி எனும் பெயரில் இரண்டாம் உலகப் போரில் ஈடுபடுத்தப்படாத ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் செறிவூட்டி வேதி உரங்கள் எனும் பெயரில் திணித்து நம் நிலத்தை நஞ்சாக்கியது. மரபணு மாற்றுப் பயிர் என்பதன் மூலம் நமது விதைகளை அழித்துப் பன்னாட்டு நிறுவனங்களைச் சார்ந்திருக்கும் நிலையை ஏற்படுத்திவிட்டது. இதனால், தமிழக மக்களில் 80 விழுக்காட்டினர் தொடர்ந்து நோயுடன் வாழும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதில் வெற்றி கண்ட பன்னாட்டு நிறுவனங்கள் இநதிய வல்லாதிக்கத்துடன் தொடர்ந்து இணைந்து தமிழர்களது நிலத்தினை முற்றுகை இட்டுள்ளன. அவை கட்டுப்படுத்தப்படாத தொழிற்சாலைகள், கெய்லின் எரிவாயுக் குழாய் பதிப்புத் திட்டம், மீத்தேன் எரிவாயுத் திட்டம், ஆற்று மணல் எடுப்பு, மலைகளை உடைத்து கிரேனைட் எடுத்தல், தாது மணல் எடுத்தல், கனிம வளங்கள் வெட்டி எடுத்தல், மலைகளைச் சுற்றுலாத் தலங்களாக

மாற்றுதல், கூடங்குளம் அணுஉலை என்று தொடர்கிறது. இதற்காகப் பன்னாட்டு நிறுவனங்கள் வான்வழியாகத் தமிழகத்தில் நிறைந்துள்ள கனிம வளங்களை அடையாளம் கண்டுள்ளன. இவற்றின் ஒரு பகுதிதான் மீத்தேன் எரிவாயுத் திட்டம்.

**தமிழகத்தில் மீத்தேன், பழுப்பு நிலக்கரி இருப்பு!**

தமிழ்நாடு புதுச்சேரி கடலோரப் பகுதியான பாகூரில் தொடங்கி நெய்வேலி, திருமுட்டம் (சிறிமுஷ்ணம்), ஜெயங்கொண்டம் வழியாக மன்னார்குடிக்குத் தெற்குப் பகுதி வரையான காவிரிப் படுகையில் பழுப்பு நிலக்கரியும் அத்தோடு சேர்ந்து மீத்தேன் என்ற எரிவாயுவும் இருக்கிறது. பழுப்பு நிலகரியின் மதிப்பீடு 27,389 மில்லியன் டன்னும், மீதேன் வாயுவின் மதிப்பீடு 98,000 கோடி கன அடியும் உள்ளன.

**இந்திய தமிழக அரசுகளின் திட்டம்**

மனித விலங்குக் கழிவுகள், அழுகிய காய்கறி, சாக்கடை, சகதி, குப்பைகள், நுண்ணுயிரிகளால் சிதைக்கப்படும் போது மீத்தேன் கிடைக்கிறது. தஞ்சாவூர் சாத்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்திலும், நெல்லை மாவட்டம் சலவை சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலையிலும், நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்திலும், சென்னையின் புறநகர்ப் பகுதிகளிலும் இவ்வாறான மீத்தேன் தயாரித்து மின்சாரமும் சமையலும் செய்கின்றனர். இது நிலத்திற்கும், சுற்றுப்புறச் சூழலுக்கும் கேடில்லாத முறையாகும்.

இப்படி மீத்தேன் தயாரிக்கும் முறையினால் பன்னாட்டு நிறுவனங்களோ, இநதிய அரசியல் அதிகார வர்க்கங்களோ கோடிகோடியாகக் கொள்ளையடிக்க முடியாது. எப்படி மின்சாரம் தயாரிக்கப் பல முறைகள் இருந்தும் மக்களுக்குக் கொடிய ஆபத்தை உண்டு பண்ணும் அணுமின் நிலையங்களைத் திறக்கிறார்களோ அதேபோலத்தான் காவிரியை பாலைவனமாக்கப் போகும் மீத்தேன் எரிவாயுத் திட்டத்தையும் செயல்படுத்த

**“ எப்படி மின்சாரம் தயாரிக்கப் பல முறைகள் இருந்தும் மக்களுக்குக் கொடிய ஆபத்தை உண்டுபண்ணும் அணுமின் நிலையங்களைத் திறக்கிறார்களோ அதேபோலத்தான் காவிரியை பாலைவனமாக்கப் போகும் மீத்தேன் எரிவாயுத் திட்டத்தையும் செயல்படுத்த உள்ளனர். ”**

உள்ளனர். அணுமின் நிலையங்களில் பல இலட்சம் கோடி புரள்கிறது என்றால் மீத்தேன் எரிவாயுத் திட்டத்திலும் இதே நிலைதான். அதனால்தான் மக்களின் போராட்டங்களைப் பற்றி கவலைப்படாமல் இத்திட்டத்தை நிறைவேற்றத் துடிக்கின்றனர்.

இந்திய அரசின் பெற்றோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் 27.07.2010 அன்று “கிரேட் ஈஸ்டேர்ன் எனர்ஜி கார்ப்பரேசன் லிமிட்டெட்’ என்ற நிறுவனத்திற்கு உரிமம் வழங்கியுள்ளது. அதற்கான வேலைகளைத் தொடங்குவதற்கு திமுக ஆட்சியில் துணை முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலினுடன் 04.01.2011 அன்று ஒப்பந்தமிட்டது.

மீத்தேன் எரிவாயுவின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 6 இலட்சம் கோடி.. இந்திய அரசு பெற்றுக்கொள்ளும் தொகையோ வெறும் ரூ. 5,000 கோடி மட்டுமே. முதற்கட்டமாக தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் சில பகுதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மொத்த நிலப்பரப்பு 691 சதுர கிலோமீட்டர். இதில் 24 ச.கி.மீ பரப்பு பழுப்பு நிலக்கரி எடுப்பதற்காகவும், 667 ச.கி.மீ பரப்பு மீத்தேன் எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளன.

**மீத்தேன் எடுக்கும் முறையும் அவற்றினால் ஏற்படும் விளைவுகளும்**

நிலக்கரிப் படுகை மீத்தேன் வாயு ஒரு குறிப்பிட்ட பகுதியில் அடர்த்தியாக இருப்பதில்லை. நிலக்கரி படிமத்தில் அதன் நுண்துளைகள், வெடிப்புகளில் நிலக்கரிப் பாறைகளின் தளப்பரப்பில் ஒட்டியிருக்கும். மன்னார்குடி பகுதியில் நிலக்கரி படிமங்கள்

தரைமட்டத்திற்கு கீழே 500 அடிமுதல் 1650 அடி ஆழம் வரை காணப்படுகிறது. தற்போதுள்ள நிலத்தடி நீர் இந்தப் படிமங்களை அழுத்திக்கொண்டுள்ளது. இந்த அழுத்தத்தினால் அடர்த்தியற்றற மீத்தேன் வாயு நிலக்கரி பாறைகளிலிருந்து வெளியேற முடிவதில்லை. நிலக்கரிப் பாறையில் அழுத்தம் கொடுக்கும் நிலத்தடி நீரை இறைத்து வெளியேற்றிய பின்னரே மீத்தேன் வாயு வெளியேற முடியும்.

"நீரியல் விரிசல்" (Hydraulic fracturing) பயன்படுத்தப்படுகிறது. பூமியில் 2000 அடி வரை துளையிட்டு குழாய் அமைத்து அதிலிருந்து பக்கவாட்டில் பூமிக்கு அடியிலேயே இரண்டு கி.மீ தூரத்திற்கு எல்லா திசைகளிலும் குழாய் பதிக்கப்படுகிறது. நிலக்கரி படிமத்தை நொறுக்க நீரும் மணலும் 600 வகை வேதிப்பொருட்களும் கலந்த ஒரு கலவை அழுத்தத்துடன் உள்ளே செலுத்தப்படும். அப்போது நிலக்கரி படிமங்கள் நொறுங்கி இடுக்கில் உள்ள மீத்தேன் எரிவாயு நீரோடு உறிஞ்சப்பட்டுப் பிரிக்கப்படுகிறது. பூமியில் செலுத்தப்பட்ட வேதிக் கலவையில் 30 விழுக்காடு மட்டுமே வெளியே எடுக்க முடியும். மீதி பூமிக்குள்ளேயே தங்கி நீரினை நஞ்சாக்குகிறது. வெளியேற்றப்படும் நீர் கடல் நீரை விட 5 மடங்கு உப்பானது. இது பாசனக் கால்வாய் மூலம் வெளியேற்றப்பட உள்ளது. அக்கழிவுகளால் நீர் பாயும் நிலப் பகுதி விளைய முடியாத பொட்டல் காடாகும். மேலும் 500 முதல் 1,650 அடிவரை குழாய் வழியாக நீர் வெளியேற்றும் போது அதனை சமப்படுத்த கடல் நீர் உள்வாங்கப்படும். மேலேயுள்ள நன்னீரும் உள்வாங்கப்படும். 80 ஏக்கருக்கு ஒரு கிணறு வீதம் சுமார் 2,000 கிணறுகள் தோண்ட உள்ளனர். ஒரு கிணற்றிலிருந்து ஒரு நாளைக்கு 75,000 லிட்டர் தண்ணீர் வெளியேற்றப்படும். இது 40 ஆண்டுகள் நடைபெறும். அடுத்து 100 ஆண்டுகள் நிலக்கரி எடுக்கப்படும்.

இதனால் இந்தப் படுகை மட்டும் பாதிக்கப்படப்போவதில்லை. சுற்றியுள்ள மாவட்டங்களின் நீர்த்தொகுப்புகள் (Aquifers) வறண்டு போகும். மேலும் நிலநடுக்கம், மண் உள்வாங்குதல் ஏற்பட்டு கட்டிடங்கள், வணிக வளாகங்கள், வீடுகள் விரைவில் பாதிக்கப்படுவதுடன் அழிந்தும் போகும். மக்களுக்கு புற்றுநோய், மரபணு மாற்றக் கோளாறுகள், மூளை,நரம்புக் கோளாறு, நாளமில்லாச் சுரப்பிகள் பாதிப்பு, தோல் நோய், கண் பார்வை இழப்பு, தொடு உணர்வு அழிவு, ஈரல் பாதிப்பு, சுவாசக் கோளாறு இவைகள் தொடர்பான பல்வேறு நோய்கள் ஏற்படும். மொத்தத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கு தகுதியற்ற நிலமாக மாறிவிடும்.



**காவிரிப் படுகையைப் பாதுகாப்போம்!**

மத்தியிலுள்ள காங்கிரசு அரசும், மாநிலத்தி லிருந்த திமுக அரசும் மக்கள் மீது துளியும் இரக்கமின்றி இத்திட்டத்திற்கு அனுமதி அளித்தன. இத்திட்டத்திற்கு எதிரான மக்களின் எழுச்சியைக் கண்ட அதிமுக ஓர் ஆய்வுக் குழுவை அமைத்தது. இக்குழு மூன்று மாதக் காலத்திற்குள் அறிக்கை தயாரித்து அரசுக்கு அளிக்கும் என அறிவிக்கப்பட்டது. ஏறக்குறைய ஒரு வருடம் ஆன பிறகும் அறிக்கை வந்தபாடில்லை. விவசாயிகளுக்கு ஒரு சிறு பாதிப்பு என்றாலும் இத்திட்டத்தை செயல்பட விடமாட்டோம் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா 17.07.2013 இல் உறுதியளித்தார். நாகப்பட்டின தேர்தல் வாக்குறுதியிலும் இதனை உறுதிப் படுத்தியுள்ளார்.

மீத்தேன் திட்டத்தின் முதல் கட்டப் பணி கள் தொடங்கிய போது திருவிடைமருதூர் வட்டத்தைச் சேர்ந்த நரசிங்கன்பேட்டை மற்றும் மதுக்கூர் வட்டத்தில் பாவாகி கோட்டை ஆகிய இடங்களில் மக்கள் திரண்டு முதல் கட்டப் பணியைத் தடுத் துள்ளனர். பல்வேறு வடிவிலானப் போராட் டங்களும் தொடர்ந்து நடைபெற்றும் வரு கின்றன. தற்போது மத்திய அரசுக்கான நாடாளுமன்றத் தேர்தலுக்காக அரசியல் கட்சிகளும், அதிகாரிகளும் நயவஞ்சகமாக நாடகமாடுகிறார்கள். இதில் மக்கள் மதிமயங்கி விடக் கூடாது.

“வேட்டைக்காரனைப் போலன்றி, ஓநாய் தனக்கு அடுத்த ஆண்டிற்குக் குட்டிகளை உணவாக அளிக்கும் பெண்மானை விட்டு வைப்பதில்லை” என ஏங்கெல்ஸ் பொருளா தாரம் பற்றி வர்ணிப்பார். அதுபோல் எதிர் கால மக்களின் தேவைகளைக் கருதிப் பார்க் காமலும், நிலங்கள் பாலைவனமாகப் போவதைப் பற்றிய கவலை இல்லாமலும் இந்திய வல்லாதிக்க அரசு தனது சொந்த இலாப நோக்கத்திற்காக மக்களின் வாழ்வைச் சூறையாடுகின்றது.

நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு ஆகிய வற்றுக்கான இயற்கைச் சமநிலை பாதுகாக்கப் பட வேண்டும். இல்லாவிட்டால் இயற்கை நம்மை அழித்துவிடும். இயற்கையில் பய னில்லாப் பொருள் என்று ஏதுமில்லை. அனைத்தும் மறுசுழற்சிக்கு உள்ளாகும் வகை யிலானொரு சுழல் வட்டக் கட்டமைப்புடன் இயங்குகிறது. அத்தொடர்புகள் அழிந்தால் நாம் எதிர்பாராத விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதை தமிழ் மக்களாகிய நாம் உணர வேண்டிய தருணமிது.

இன்றைய உலக அரசியல் சூழலில் இந்திய, பன்னாட்டு சுரண்டல் இரக்கமற்ற நிலையில் இருப்பதை உலக நடப்புகள் உணர்த்துகின்றன. எந்த ஒரு அரசியல் கட்சியையும் நாம் நம்பி இருக்க வேண்டியதில்லை. மலையை உடைத்து, கனிம வளங்களை கொள்ளையடிப்பதற்கு எதிரான போராட்டம், நந்தி கிராம மக்களின் போராட்டம், காஷ்மீர் மற்றும் வடகிழக்கு தேசிய இனங்களின் போராட்டம், கூடங்குளம் அணுஉலைக்கு எதிரான போராட்டம் என இந்தியாவெங்கும் நடைபெற்று வரும் போராட்டங்களை இந்திய அரசு அடக்குமுறை கொண்டு நசுக்கி வருவதை நாமறிவோம்.

உள்ளாட்சி, மாநகராட்சி தேர்தல் வரும் போது கூடங்குளம் மக்களிடம் “உங்களில் ஒருத்தியாய் இருப்பேன்” எனக் கூறிய ஜெய லலிதா பிறகு தனது நிலையை மாற்றிக் கொண்டு அம்மக்களின் மீது அடக்குமுறை களை ஏவிவிட்டதை நாமறிவோம். அதே போல் இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்காக நாகப்பட்டினத்தில் “மீத்தேன் திட்டத்தை நாங்கள் பங்குபெறும் ஆட்சி வந்தால் தடுப்பேன்” என ஜெயலலிதா கூறியது மக்களை ஏமாற்றுவதற்கே!

தமிழக மக்களே, தமிழகம் பல்வேறு நிலை யில் இந்திய, பன்னாட்டு வல்லரசுகளால் முற் றுகை இடப்பட்டுள்ளது, இதனை எந்த ஒரு தேர்தல் அரசியல் கட்சியும் முறியடிக்க சக்தி யற்றதே. தமிழகத்தின் அனைத்துப் பிரிவு மக்களின் ஒன்றுபட்டப் போராட்டமே வெற்றி தரும். அத்திசைவழியில் முன்னேறுவோம். ❖

# மே நாளில் மீண்டும் எழுகிறோம்!



மே நாள் ஈகியர்

தமிழ்த் தேசம் இதழை மீண்டும் மீண்டும், மீண்டு மீண்டு உங்களிடம் கையளித்தோம். இம்முறை வீழ்வதற்கும் அதனால் மீள்வதற்கும் இடம் கொடாது தொடர்ச்சியாகப் பயணிக்க உறுதி ஏற்கிறோம். புரட்சிகரக் கருத்தியல் தளத்தில் எமது இதழ் காலூன்றாமல் இருப்பது இழப்பு என்பதை நன்கு உணர்ந்து, இதுவரை கிடைத்த படிப்பினைகள் கற்று, தவறுகள் களைந்து வந்திருக்கிறோம். இதை வெகு மக்கள் இதழாக மக்கள் துணையுடன் மாற்ற முடியும் என உறுதியாக நம்புகிறோம்.

எட்டு மணி நேர வேலை, எட்டு மணி நேர ஓய்வு, எட்டு மணிநேரக் கேளிக்கை எனும் கோரிக்கைகள் கொண்டு தொடங்கப்பட்டதே மே நாள் போராட்டம். இதைத் தொடர்ந்து ஸ்பைஸ், ஃபிஷர், எங்கெல், பார்சன் ஆகிய தொழிலாளத் தலைவர்கள் நவம்பர் 11 ஆம் நாள் அமெரிக்க முதலாளித்துவ அரசால் தூக்கிலிடப்பட்டுப் படுகொலை செய்யப் பட்டார்கள். தூக்குத் தீர்ப்பு நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்ட போதே நால்வரில் ஒருவரான ஸ்பைஸ் இப்படி முழங்கினார்: “.....இதோ ஒரு தீப்பொறியை நீங்கள் மிதித்து அணைக்கும் போதே, அங்கே உங்களுக்குப் பின்னாலும் முன்னாலும் எங்கெங்கும் தீச்சுடர்கள் தாவி எழுகின்றன. இது நிலப்பரப்பின் கீழே இருக்கும் நெருப்பு, இதை உங்களால் அணைக்க முடியாது. உண்மை பேசத் துணிந்தமைக்காக மீண்டும் ஒரு முறை மரண தண்டனை விதிப்பீர்களா னால்... அந்த அடாத விலையை அஞ்சாமல் நெஞ்சு நிமிர்த்திக் கொடுப்பேன். இந்தப் பாதையில் எங்களுக்கு முன் பயணப் பட்டிருப்பவர்கள் ஏராளம், ஏராளம். தொடர்ந்து செல்ல நாங்கள் அணியமாய் உள்ளோம்.”

மே நாள் போராளிகளுக்கு செவ்வணக்கம் செலுத்தித் தமிழ்த் தேசம் திங்களேட்டைக் கையளிக்கிறோம். இது வாழ்நாள் பயணமாகத் தொடரும் என்ற நம்பிக்கையை உங்களுள் முதற்கட்டமாய் விதைப்பதற்கே நீடித்த பொறுமை, தன்னளிப்புடன் பெரும் பாடாற்ற வேண்டும் என்பதை உணர்ந்திருக்கிறோம். உணர்ந்ததைக் கொண்டு உழைப்பைக் கொடுப்போம். அதேபோது, தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், சனநாயக ஆற்றல்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஒடுக்குண்ட மக்கள் என அனைவரும் தமிழ்த் தேசத்திற்கு துணை நிற்க வேண்டுகிறோம். தமிழ்த் தேசியச் சமூகநீதிக் குடியரசை நோக்கமாய்க் கொண்டு வெளிவரும் எமது இயக்கத் திங்களேட்டை அனைவரும் ஒன்றுபட்டுக் காப்போம்.

தொழிலாளர் எழுச்சிக்குக் கலங்கரை விளக்காய் வரலாற்றில் நிலைத்துவிட்டது மே நாள். தூக்குக் கயிறு தலைக்கு மேல் தொங்கும் போதும், தொழிலாளத் தலைவனின் கொள்கை உறுதி கொண்ட உள்ளம் எடுத்து நமக்குள் விதைத்துப் பயணிப்போம். தமிழ்த் தேசிய சமூகநீதிப் புரட்சி படைப்போம்! அதற்கான கருத்தியல் படைக்கலனாம் “தமிழ்த் தேசம்” காப்போம். ❖

**- வே. பாரதி**

# இதோ தமிழ்த் தேசிய விடுதலைக் களத்தில் பாட்டாளிகளின் படை

எம்.ஆர்.எஃப்., என்பீல்டு, அசோக் லேலண்டு, இந்துஜா பவுண்டரீஸ், எண்ணூர் கொரமண்டல், மணலி கோத்தாரி ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் இணைந்து 'தமிழீழ ஆதரவுத் தொழிலாளர் இயக்கம்' தொடங்கியுள்ளனர்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில், கொடிய இனவழிப்பை நெஞ்சில் தாங்கி நிற்கும் தமிழீழ மக்களின், ஈடுசெய் நீதிக்கான தொடர் நகர்வுகளில் தமிழகப் பாட்டாளிகளும் கைகோத்திருப்பது ஒரு புரட்சிகர நிகழ்வு.

பாலச்சந்திரன் படுகொலைக் காட்சிகள் முதன் முதல் வெளியானபோதே, எண்ணூர் அசோக் லேலண்டு ஆலை வாயிலில் கண்டனக் கூட்டத்தோடு தொடங்கிவிட்டது தமிழீழ ஆதரவு தொழிலாளர் இயக்கத்தின் போராட்டம். தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தோழர் தியாகு இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்.

எம்.ஆர்.எஃப், என்பீல்டு ஆலை வாயில்களிலும் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன.

தொடர்ச்சியான செயல்பாடுகளால் வட சென்னை தமிழ் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது 'தமிழீழ ஆதரவுத் தொழிலாளர் இயக்கம்'. ❖




சென்னை திருவொற்றியூரில் எம்.ஆர்.எஃப். தொழிலாளர்கள் நடத்திய மே நாள் நிகழ்வில் தோழர் தியாகு உரையாற்றுகிறார்.










மக்களுக்காக

வாழ்ந்து,

மலை

சாய்ந்தாற்போல்

வீழ்ந்து,

எங்கள் மனத்தில்

என்றென்றும்

மணம்பரப்பி

வாழும்

மாமனிதர்களுக்கு

தமிழ்த் தேசத்தின்

செவ்வணக்கம்!


முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை

**5**ஆம் ஆண்டு நினைவெழுச்சி நாள்

**தமிழீழம்**

**தமிழகம்**

**உலகமெங்கும்**



முள்ளித் தீயின் சாம்பல் தெறிக்க
ஈழப் பறவை பொரிக்கும் பிறக்கும்
உலக வானில் எழுந்து பறக்கும்